பக்கங்கள் : பதினான்கு

Registered as a Newspaper

# உதயன்

விலை ரூபா 10.00

www.uthayan.com

சுடர் 21 வள்ளுவர் ஆண்டு 2037 தை 13 வியாழக்கிழமை (26.01.2006) UTHAYAN-A Lively National Tamil Daily கதிர் :60

# முதலில் இயல்பு நிலையை ஏற்படுத்தி பேச்சை ஆரம்பிக்க புலிகள் சம்மதம்

## யுத்தநிறுத்த அமுலாக்கம் தொடர்பாக ஜெனீவாவில் பேச இருதரப்பும் இணக்கம்

கிளிநொச்சி, ஜனவரி 26

அரசுடன் பேச்சை ஆரம்பிப்பதற்கு முன்னர் பேச்சுக்கான புறச்சூழல் உருவாக்கப்படவேண்டும் என்று விடுதலைப் புலிகள் கோரியுள்ளனர். இதேவேளை, யுத்த நிறுத்த உடன்படிக்கையின் அமுலாக்கம் தொடர்பான நேரடிப் பேச்சுக்களை சுவிற்சர்லாந்தின் ஜெனீவா நகரில் அடுத்தமாதம் நடத்த இரு தரப்பினரும் இணங்கியுள்ளனர். விடுதலைப் புலிகளின் அரசியல் ஆலோசகரும் மதியுரைஞருமான அன்ரன் பாலசிங்கம் இத் தகவலை வெளியிட்டார்.

இலங்கையின் சமாதான முயற்சிகளில் ஈடுபடும் நோர்வே அனுசரணைக்குழுத் தலைவரும் நோர்வே நாட்டு அமைச்சருமான எரிக் சொல்ஹெய்ம் தமிழீழ விடுதலைப் புலிகளின் தலைவர் வே.பிரபாகரனை நேற்றுக் கிளிநொச்சியில் சந்தித்தார்.

இந்தச் சந்திப்பை அடுத்து நடத்தப்பட்ட செய்தியாளர் மாநாட்டில் மதியுரைஞர் அன்ரன் பாலசிங்கம் மேற்கண்ட தகவல்களைத் தெரிவித்தார். சர்வதேச மற்றும் உள்ளூர் செய்தியாளர் கள் என நூற்றுக்கு மேற்பட்டவர்கள் இதில்

(2ஆம் பக்கம் பார்க்க)

## அரசுடனான பேச்சில் பாலா தலைமையிலான குழு பங்கேற்கும்

கிளிநொச்சி,ஜன.26

அமைதிப் பேச்சுகள் ஆரம்பமானால் விடுதலைப் புலிகளின் தரப்பில், அன்ரன் பால்சிங்கத்தின் தலைமையிலான குழுவினர் பங்கேற்பர் எனத் தெரிவிக்கப்பட்டுள்ளது.

இக்குழுவில் அரசியல்துறைப் பொறுப்பாளர் சு.ப. தமிழ்ச்செல்வன், காவல்துறைப் பொறுப்பாளர் பா. நடேசன், கட்டளைத் தளபதி கேணல் ஜெயம், மட்டு. மாவட்ட அரசியல் பொறுப்பாளர் இளந்திரையன் ஆகியோர் பங்கேற்பர். இக் குழுவில் செயலராக திருமதி அடேல் பாலசிங்கம் செயற்படுவார் எனத் தெரிவிக்கப்படுகிறது.

இதேவேளை, அரசு தரப்பில் கலந்து கொள்வோர் பற்றிய விபரத்தை விரைவில் அரசு அறிவிக்கும் எனவும் தெரிவிக்கப்படுகிறது. (க-3)



நேற்று கிளிநொச்சி வந்திருந்த சமாதானத் தூதுவர் எரிக் சொல்ஹெய்மை தலைவர் பிரபாகரன் வரவேற்கிறார்.

## கண்காணிப்புக்குழுவின் பாதுகாப்பை உறுதிப்படுத்த சொல்ஹெய்ம் வலியுறுத்து

கிளிநொச்சி,ஜன.26

இலங்கைப் போர்நிறுத்தக் கண்காணிப்புக் குழுவின் பாதுகாப்பை உறுதிப்படுத்தும்படி இரு தரப்புகளினதும் தலைமைகளிடம் கேட்டுள்ளோம்.

இவ்வாறு சமாதானக் குழுவின் தலைவரும் நோர்வே அமைச்சருமான எரிக் சொல்ஹெய்ம் தெரிவித்தார்.

தமிழீழ விடுதலைப் புலிகளின் தலைவர் வே.பிரபாகரனை நேற்றுச் சந்தித்த பின்னர் அவர் செய்தியாளர்களிடம் பேசினார்.

அப்போது அவர் கூறியதாவது:-

யுத்த நிறுத்த அமுலாக்கலின் அவசியத்தை இருதரப்பும் உணர்ந்து நேரடியாகப் பேச இணங்கியுள்ளனர்.

(14ஆம் பக்கம் பார்க்க)

## ஐ.தே.கட்சி எம்.பிக்கள் இருவர் நேற்று அரசு பக்கம் தாவினர்

### பரிசாக இருவருக்கும் அமைச்சர் பதவிகள்

கொழும்பு, ஜன. 26

ஐக்கிய தேசியக் கட்சியின் தலைமை மீதும், கட்சியின் புதிய மறுசீரமைப்புத் தொடர்பிலும் கடும் அதிருப்தி கொண்டிருந்த குழுவின் இரண்டு நாடாளுமன்ற உறுப்பினர்கள் நேற்று அரசாங்கத்துக்கு ஆதரவு தெரிவித்து அமைச்சுப் பொறுப்புகளை ஏற்றுக்கொண்டனர்.

ஐ.தே.க. கண்டி மாவட்ட நாடாளுமன்ற

(14ஆம் பக்கம் பார்க்க)

## புலிகளின் தடுப்புக் காவலில் உள்ள பொலீஸாரில் ஒருவர் இன்று விடுதலை

### நல்லெண்ண முயற்சியாக நடவடிக்கை

தமிழீழ விடுதலைப் புலிகளின் தடுப்புக்காவலில் உள்ள மூன்று ஸ்ரீலங்கா பொலீஸாரில் ஒருவரை நல்லெண்ண முயற்சியாக இன்று வியாழக்கிழமை விடுதலை செய்வதற்கு விடுதலைப் புலிகளின் தலைவர் வேலுப்பிள்ளை பிரபாகரன் உத்தரவிட்டுள்ளார்.

நேற்றுத் தம்மைச் சந்தித்த நோர்வேயின் சர்வதேச அபிவிருத்தி அமைச்சரும் இலங்கை அமைதி முயற்சிகளுக்கான நோர்வே சிறப்புத்

(14ஆம் பக்கம் பார்க்க)

## ஜே.வி.பி. விசனம் தெரிவிப்பு

கொழும்பு, ஜன. 26

அரச அமைச்சரவையின் உறுப்பினர்கள் எண்ணிக்கை அதிகரித்திருப்பது தொடர்பில் ஜே.வி.பி தனது கடுமையான ஆட்சேபனையை நேற்று மீண்டும் வெளியிட்டது.

ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ஷவின் அமைச்சரவையில் மேலும் இரண்டு உறுப்பினர்கள் அதிகரித்திருப்பது குறித்து நேற்று 'உதயன்'இற்குக் கருத்துத் தெரிவித்த ஜே.வி.பியின் நாடாளுமன்ற உறுப்பினர் விஜித ஹேரத், அமைச்சரவை அங்கத்தவர்களின் எண்ணிக்

(14ஆம் பக்கம் பார்க்க)

## 'சுடர் ஒளி' செய்தியாளர் சுகிர்தராஜனின் இறுதிக்கிரியைகள் இன்று வீரமுனையில்

கல்முனை, ஜன.26

திருகோணமலையில் நேற்று முன்தினம் இனந்தெரியாதவர்களால் சுட்டுக் கொல்லப்பட்ட 'சுடர் ஒளி' செய்தியாளர் சுப்பிரமணியம் சுகிர்தராஜனின் (எஸ்.எஸ்.ஆர்) பூதவுடல் இன்று மாலை 4 மணிக்கு சம்மாந்துறை, வீரமுனை இந்து மயானத்தில் அடக்கம் செய்யப்படவுள்ளது.

துப்பாக்கிச் சூட்டுச் சம்பவத்தின் பின்னர் திருகோணமலையிலிருந்து எடுத்துச் செல்லப்பட்ட சுகிர்தராஜனின் பூதவுடல் நேற்று மாலை வரை அவரது பிறப்பிடமான கல்முனை அம்மன் கோவில் வீதியில் வைக்கப்பட்டிருந்தது. ஏராளமான மக்கள் இறுதி நிகழ்வுகளில் கலந்துகொண்டு தமது அஞ்சலியைச் செலுத்தினர்.

நேற்றுமாலை பூதவுடல் சுகிர்தராஜனின் மனைவியினது சொந்த இடமான சம்மாந்துறை, வீரமுனைக்கு கொண்டு செல்லப்பட்டது. வீரமுனை வீதியிலுள்ள வீட்டில் அஞ்சலிக்காக வைக்கப்பட்டது. இன்று மாலை நான்கு மணிக்கு வீரமுனை இந்து மயானத்தில் பூதவுடல் நல்லடக்கம் செய்

(14ஆம் பக்கம் பார்க்க)

## மூதூரில் ஒருவர் சுட்டுக்கொலை!

திருகோணமலை மாவட்டம், மூதூரில் கட்டடத்தொழிலாளி ஒருவர் நேற்றிரவு 7.30 மணியளவில் இனந்தெரியாதவர்களால் சுட்டுக்கொல்லப்பட்டார்.

மூதூரைச் சேர்ந்தவரான தம்பிப்பிள்ளை செல்வராஜா (வயது 48) என்பவரே கொல்லப்பட்டவராவார்.

பொதுச்சந்தைப் பகுதியில் உள்ள தனது வீட்டருகே இவரைச் சுட்டுக்கொன்றுவிட்டு கொலையாளிகள் தப்பிச்சென்றுள்ளனர். சடலம் மூதூர் வைத்தியசாலையில் பிரேத பரிசோதனைக்காக பொலீஸாரால் ஒப்படைக்கப்பட்டுள்ளது. (ஓ-ப)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# முதலில் இயல்பு நிலையை......

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)
கலந்துகொண்டனர்.

நேற்று முற்பகல் 10.45 மணியளவில் விமானப்படையின் விசேட ஹெலிகொப்டர் மூலம் கிளிநொச்சி வந்தடைந்தார் எரிக் சொல்ஹெய்ம்.

பேச்சுகள் 2 மணிநேரம் இடம்பெற்றன.

பேச்சுகளில் விடுதலைப் புலிகளின் தலைவர் வே. பிரபாகரனுடன் அரசியல் ஆலோசகர் அன்ரன் பாலசிங்கம், அரசியல்துறைப் பொறுப்பாளர் சு.ப. தமிழ்ச்செல்வன், காவல்துறைப் பொறுப்பாளர் பா. நடேசன் ஆகியோர் கலந்துகொண்டனர்.

சொல்ஹெய்முடன் நோர்வேத் தூதர் ஹான்ஸ் பிரட்ஸ்கரும் கலந்து கொண்டார்.

சந்திப்பின் பின் நடந்த செய்தியாளர் மாநாட்டில் அன்ரன் பாலசிங்கம் அளித்த செவ்வி வருமாறு:-

✱ ***கே:-*** இன்றைய சந்திப்பில் ஏற்பட்ட இணக்கப்பாடுகள், முடிவுகள் குறித்து...?

• ***ப:-*** இன்றைய சந்திப்பில் தலைவர் பிரபாகரன் இயக்கத்தின் நிலைப்பாட்டை எடுத்துக் கூறினார்.

'விடுதலைப் புலிகள் அன்றும் சரி, இன்றும் சரி சமாதான இலட்சியத்தில் பற்றுறுதி கொண்டவர்களாக இருக்கிறார்கள்' - என்று தலைவர் எடுத்துக் கூறினார்.

அதாவது, கடந்த சில மாதங்களாக வன்முறைச் சம்பவங்கள் தலைதூக்கியிருக்கின்றன. குறிப்பாக, அப்பாவித் தமிழ்மக்களுக்கு எதிராக படுகொலைகள், இராணுவ அட்டூழியங்கள் நடைபெற்றுக் கொண்டுவருகின்றன.

இந்த வன்முறைகள் தலைவிரித்தாடுவதற்குக்காரணம், போர் நிறுத்த ஒப்பந்த விதிகள் சரியாக - செம்மையாக - பேணப்படாதது தான். ஆகவே, போர் நிறுத்த உடன்படிக்கையை செம்மையாக நடைமுறைப்படுத்துவதற்கு, அது சம்பந்தப்பட்ட பேச்சுக்கு நாங்கள் தயாராக இருக்கிறோம்.

இதுவரை காலமும் ஏதோ விடுதலைப் புலிகள்தான் பேச்சு நடத்துகிற இடம் குறித்து - அதாவது எந்த இடத்தில் நடத்தவேண்டும் என்பது குறித்து இறுக்கமான நிலைப்பாட்டை எடுத்துக் கடும் போக்கைக் கடைப்பிடிக்கிறார்கள் என்ற தப்பான அபிப்பிராயங்கள் நிலவி வந்தன.

ஆனால், உண்மையிலே நாங்கள் விட்டுக்கொடுத்து நோர்வே அரசு கேட்டுக்கொண்டதற்கு இணங்க, ஐரோப்பிய நாடுகளில் ஒன்றான சுவிற்ஸர்லாந்தில் இந்தப் பேச்சுகளை நடத்துவதற்கு இணங்கியிருக்கிறோம்; முடிவு செய்துள்ளோம் எனத் தலைவர் அறிவித்தார்.

அடுத்தபடியாகத் தலைவர் ஒன்றைச் சொல்லியிருக்கிறார். முதல் கட்டமான பேச்சு, போர் நிறுத்த விதிகளின் அமுலாக்கம் தொடர்பாகவே அமையவேண்டும் என்றும், வேறு எதைப் பற்றிப் பேசவும் நாங்கள் தயாராக இல்லை என்றும் அவர் கூறியுள்ளார்.

தமிழ்த் தாயகப் பிரதேசத்தில் நிலவும் பாரதூரமான பிரச்சினைகளுக்குக் காரணம், போர் நிறுத்தம் உண்மையாகக் கடைப்பிடிக்கப்படாததுதான். இது செம்மையாகக் கடைப்பிடிக்கப்படுவதற்குப் புலிகள் காரணம் அல்லர். அரச படைகளும், அரச படைகளுக்கு முண்டுகொடுத்துத் துணையாக நிற்கும் ஒட்டுப்படைகளும்தான் காரணம்.

ஆகவே, பேச்சு வெகு சீக்கிரத்தில் நடக்க வேண்டும். அதற்கு நாங்கள் ஒத்துழைக்கத் தயாராக இருக்கின்றோம்.

சுவிற்ஸர்லாந்தில் இந்தப் பேச்சை நடத்த நாங்கள் தயாராக இருக்கின்றோம்.

ஆனால், அதற்கு முன்னதாக இயல்புநிலை ஏற்படுத்தப்பட வேண்டும். மக்கள் இராணுவ பயங்கரவாதத்துக்குப் பயந்து, தமிழர் தேசத்தில் இருந்து அகதிகளாக விலகிக் கொண்டிருக்கிறார்கள். ஆகவே, மக்களுக்கு நிம்மதியான - அமைதியான - வாழ்வை ஏற்படுத்திக்கொடுக்கவேண்டும். அதற்குப் பிறகுதான் பேச்சு ஒழுங்காக நடக்க முடியும். ஆகவே, சமாதானச் சூழ்நிலைக்கு ஏதுவான புறநிலையை உருவாக்குவது அரசின் கடமை. அரசு நினைத்தால் - ஜனாதிபதி நினைத்தால் - அரசபடைகளுக்கு கடும் உத்தரவைப் போட்டு, ஒட்டுப் படைகளின், கூலிப் படைகளின் - அட்டூழியங்களை நிறுத்தி, கொலைகளை நிறுத்தி அமைதியான சூழ்நிலையை உருவாக்க வேண்டும்.

பேச்சுக்குவர நாங்கள் தயாராக இருக்கிறோம். விரைவில் பேச்சுகளில் பங்குபற்றவும் தயாராக இருக்கிறோம். ஆனால், உடனடியாக வன்முறைகள் - அதாவது அப்பாவித் தமிழ் மக்கள் மீது ஏவி விடப்படுகின்ற அரச பயங்கரவாத வன்முறைகள் - நிறுத்தப்பட வேண்டும். நிறுத்தப்பட்டு சுமுகமான நல்லெண்ண - புறநிலை உருவாக்கப்பட வேண்டும் என்று தலைவர் திருப்பித் திருப்பி வலியுறுத்தினார்.

இந்த புறநிலையை ஏற்படுத்துவது அரசின் கையில்தான் இருக்கிறது.

முன்பும் இப்படிப் பல பேச்சுகள் நடந்தன. பல பேச்சுகள் இடையிலேயே முறிந்து போனதற்குக் காரணம், அரசாங்கம் அப்பாவித் தமிழ் மக்கள் மீது நடத்திய தாக்குதல்கள்தான்.

இந்தத் தாக்குதல்களினால்தான் திம்புவில் இருந்து கடைசிப் பேச்சு வரை பல பேச்சுகள் முறிந்து போயின.

ஆகவே, இந்தப் பேச்சுகள் நல்ல முறையில் நடைபெறவேண்டும் என்றால் அரச படைகள் கட்டுப்பாடாக வைக்கப்படவேண்டும். கூலிப்படைகளின் அடாவடித்தனங்கள் நிறுத்தப்பட வேண்டும்.

அதற்குப் பின் போர் நிறுத்த விதிகளைச் செம்மையாக நடைமுறைப்படுத்துவதைப் பற்றி ஆராய நாங்கள் முதற்கட்டப் பேச்சுகளில் பங்குபற்றத் தயாராக இருக்கின்றோம்.

அனுசரணையாளரான நோர்வேயின் கோரிக்கையை ஏற்று பேச்சுகளில் பங்குபற்ற தலைமைப்பீடம் முடிவுசெய்துள்ளது.

ஜெனீவாவில் இந்தப்பேச்சுகளை விரைவாக ஆரம்பிக்கவும் இணங்கியுள்ளோம். பெரும்பாலும் பெப்ரவரியில் ஆரம்பிக்க இணங்கியுள்ளோம். பேச்சு நடக்கும் திகதி இன்னமும் முடிவு செய்யப்படவில்லை.

✱ ***கே:-*** பேச்சுகளில் முதலில் ஆரம்பிக்கும் விடயம் என்ன? இடைக்காலத் தன்னாட்சி அதிகார சபை குறித்தா? தீர்வு பற்றியா?

• ***ப:-*** முதல் பேச்சு யுத்தநிறுத்த உடன்படிக்கை அமுலாக்கம் சம்பந்தமாகவே அமையும். அந்த உடன்படிக்கை நெருக்கடிக்குள் உள்ளது. அதுகுறித்து மட்டுமே உடன் பேச வேண்டியுள்ளது.

✱ ***கே:-*** அந்த உடன்பாட்டில் திருத்தம் கொண்டுவருவதுபற்றிப் பேசுவீர்களா?

• ***ப:-*** அந்த உடன்பாட்டை மீளமைப்புச் செய்வதோ, திருத்தம் செய்வதோ என்ற கேள்விக்கே இடமில்லை. செம்மையாக நடைமுறைப்படுத்துவது குறித்து மட்டுமே பேசுவோம்.

✱ ***கே:-*** அரசு வன்செயல்களை நிறுத்துமா?

• ***ப:-*** அரசு உடன் நடவடிக்கைகளை எடுத்து, படைகளுக்கு உத்தரவு வழங்க வேண்டும். புலிகளுக்கும் பொதுமக்களுக்கும் எதிரான வன்செயல்களை நிறுத்தவேண்டும் என்று.

✱ ***கே:-*** உங்கள் பக்கம் என்னமாதிரி? படைகள் மீதான தாக்குதல்களை நிறுத்துவீர்களா?

• ***ப:-*** இரு தரப்புகளும் வன்செயல்களை நிறுத்துவது என்று நோர்வேக்கு இணக்கம் தெரிவித்துள்ளன. நோர்வேக்கும் நோர்வே ஊடாக ஜனாதிபதிக்கும் இப்போதிருந்தே விடுதலைப் புலிகள் அரச படைகளுக்கு எதிரான சகல வன்செயல்களையும் நிறுத்துவதாக உறுதியளித்துள்ளனர். அதேபோல் விடுதலைப் புலிகளுக்கும் பொதுமக்களுக்கும் எதிரான வன்செயல்களை அரச படைகளும் ஒட்டுக்குழுக்களும் நிறுத்தவேண்டும்.

✱ ***கே:-*** பேச்சுக்கான புறநிலையை உருவாக்க கால அவகாசம் ஏதும் வழங்கப்பட்டதா?

• ***ப:-*** உடனடியாக ஏற்படுத்த வேண்டும். கால அவகாசம் என்ற கதைக்கு இடமில்லை.

பேச்சில் பங்குபற்ற இப்பவும் நாங்கள் தயார். இன்றைக்கும் தயார். இந்தச் சூழல் இருக்க வேண்டும்.

நாங்கள் ஜெனீவாவுக்குப் போக இந்தக் கூலிப் பட்டாளங்கள் எங்கள் மக்களைக் கொலை செய்ய, அங்கு அமைதியில்லாத சூழல் நிலவ நாங்கள் பேசமுடியாது. நாங்கள் பேசுவதாக இருந்தால், மக்கள் அமைதியாக, நிம்மதியாக - வாழவேண்டும். இதுதான் முதல் முக்கியமான விடயம்.

✱ ***கே:-*** புறநிலை உருவாக்கப்பட்டால்தான் நேரடிப் பேச்சு என்று கூறுகிறீர்களா?

• ***ப:-*** இதை ஒரு நிபந்தனையாக நாங்கள் போடவில்லை. சமாதானப் பேச்சுக்கு சமாதானச் சூழலை உருவாக்குங்கள் என்று தான் நாங்கள் சொல்கிறேம்.

✱ ***கே:-*** அரசுத் தரப்பில் இருந்து செய்தி ஏதும் இன்று வந்ததா?

• ***ப:-*** அரசு செய்திகளை அனுப்பிக் கொண்டிருக்கிறது. அது முக்கியமல்ல. அரசு எமக்கு சமாதானக் கரங்களை நீட்டிக் கொண்டு இங்கு கொலைகளை அனுமதித்துக் கொண்ருடிக்கிறது. 'சுடர் ஒளி' பத்திரிகையாளர் ஒருவர் நேற்றும் கொல்லப்பட்டிருக்கிறார்.

ராஜபக்ஷ சமாதானக் கரம் நீட்டுகிறார். 'சுடர் ஒளி' பத்திரிகைக்கு உருக்கமான அறிக்கையை விடுகிறார். இதெல்லாம் எங்களுக்கு விட இயலாது.

சொன்னால் சொன்னதாக இருக்கவேண்டும். அறிக்கைகளை விட்டு எமது மக்களை ஏமாற்ற முடியாது.

✱ ***கே:-*** அரசுக்கும்- விடுதலைப் புலிகளுக்கும் இடையிலான பேச்சுகள் எப்போது ஆரம்பமாகும்?

• ***ப:-*** முதலில் பேச்சுக்கு இணங்கியிருக்கிறோம். விரைவில் பேச்சை நடத்தும்படி கேட்டிருக்கிறோம். இந்தச் செய்தியுடன்தான் சொல்ஹெய்ம் [illegible] இடத்துக்கும் [illegible] அனுப்பியுள்ளோம். அரசு ஆயுதப் படைகளுக்குச் சொல்ல வேண்டும். அடாவடித்தனங்கள் நடக்கக் கூடாது. எமது மக்களுக்கு எந்தவித துன்புறுத்தல்களும் நடக்க அனுமதிக்கக் கூடாது.

தேடுதல் என்ற போர்வையில் மக்களை வேட்டையாட முடியாது. இருளில் போய் வீடுகளைத் தட்ட முடியாது. இப்படித்தட்டிக் கொண்டு எமது அப்பாவி மக்களை கொலை செய்துகொண்டிருந்தால் எப்படிப் பேசமுடியும்?

எவ்வளவு காலத்துக்குப் பொறுக்கிறது? கடைசியாக தலைவர் சர்வதேசத்துக்கு நல்லெண்ணச் சமிக்ஞையை விடுகிறார்.

நாங்கள் கடும் போக்காளர்களும் அல்லர். யுத்த வெறியர்கள் அல்லர். இது இறுதிச் சந்தர்ப்பமாக பேசத் தயாராக இருக்கிறோம்.

மக்கள் அவதிப்படுகிறார்கள். நாங்கள் நினைத்தால் எங்கள் படைகளை அனுப்பலாம். அனுப்பி சிங்கள இராணுவத்தை அழித்து யுத்தத்தை துவக்கி விடலாம். ஆனால், நாங்கள் அப்படி செய்ய விரும்பவில்லை.

சர்வதேச உலகம் எமக்குச் சொல்கின்றது. இன்னுமொருமுறை பேசுங்கள் என்று.

✱ ***கே:-*** யுத்த நிறுத்த உடன்பாட்டில் ஏதாவது தவறுகள் இருக்குமா? இருதரப்பினரும் இணைந்து தயாரித்தீர்களா?

• ***ப:-*** உடன்படிக்கையை இருதரப்பினரும் இணைந்து தயாரித்தோம் ஆறுமாதங்கள் அதற்குச் செலவிட்டோம். சரத்து சரத்தாக ஆராய்ந்து தயாரித்தோம். இருதரப்பினரும் ஏற்றுக்கொண்டு கையொப்பமிட்டு 2, 3 வருடங்களாகச் செம்மையாகப் பேணப்பட்டுள்ள அந்த உடன்படிக்கையில் கடந்த ஒரு வருடமாக பாரிய மீறல்கள் இடம்பெற்றன.

அந்த உடன்பாட்டின் உத்தரவுப்படி துணைப் படைகளின் ஆயுதங்கள் களையப்பட்டு அவை இலங்கை இராணுவத்துக்குள் உள்வாங்கப்பட வேண்டும். அவை வடக்கு - கிழக்கில் இருந்து அப்புறப்படுத்தப்படவேண்டும். இது நிறைவேற்றப்படவில்லை.

மீனவர்கள் சுதந்திரமாக மீன்பிடிக்க அனும திக்க வேண்டும். ஆனால், பல கட்டுப்பாடுகள் விதிக்கப்பட்டுள்ளன.

இந்த உடன்பாட்டின் பலவீனம் என்னவென்றால் இந்த உடன்பாட்டின் சரத்துக்கள் முறைப்படி அமுலாக்கப்படவில்லை. யுத்த நிறுத்த உடன்பாடு பலவீனமானது அல்ல. அதை முறைப்படி நடைமுறைப்படுத்தாததே பலவீனமாகும்.

இரு தரப்பாலும் ஏற்றுக்கொள்ளப்பட்ட சரத்துக்களை அரசு நடைமுறைப்படுத்தினால் எந்தப் பிரச்சினைக்கும் இடமில்லை.

சமாதானப் பேச்சுகள் பல கட்டங்களைக் கொண்டவை. முதலில் யுத்த நிறுத்த அமுலாக்கல் குறித்தே பேச வேண்டியுள்ளது.

✱ ***கே:-*** ஜனாதிபதி மீது எந்த அளவிற்கு நம்பிக்கை வைத்துள்ளீர்கள்?

• ***ப:-*** பொறுத்திருந்துதான் பார்க்க வேண்டும். அவருக்கு இன்னொரு சந்தர்ப்பம் வழங்க விருக்கின்றோம்.

அவர் பதவிக்கு வந்ததன் பின்னர் தலைவர் பிரபாகரன் தனது மாவீரர்தின உரையில் கொஞ்சக்காலம் அவருக்குச் சந்தர்ப்பம் வழங்கியிருக்கிறோம் எனத் தெரிவித்திருந்தார்.

வடக்கு - கிழக்கில் இயல்பு வாழ்வை ஏற்படுத்துவதற்கு இந்தக் கால அவகாசத்தை ஜனாதிபதிக்கு வழங்கியுள்ளோம்.

✱ ***கே:-*** நீங்கள் அரசுக்கு விடுத்த கோரிக்கையின் பயனாக அரசு பேச்சுக்கு வந்தால், போராளிகள் அரச கட்டுப்பாட்டுப் பகுதியில் பணியாற்ற வழிஏற்படுமா?

• ***ப:-*** இது ஒரு முக்கிய விடயம். பேச்சில், எமது போராளிகள் இராணுவக் கட்டுப்பாட்டுப் பகுதியில் அரசியல்பணி செய்வது ஒரு நிபந்தனை. ஆகவே, இந்த விடயமும் முக்கியமாகப் பேசப்படும்.

போராளிகள் அரச கட்டுப்பாட்டுப் பகுதிக்குள் சென்று பணியாற்ற வேண்டும். அகதிகளாக வந்துள்ள மக்கள் கூட தங்கள் இடத்திற்குச் சென்று இயல்பு வாழ்க்கையை மேற்கொள்ளவேண்டும். இப்படிப் பல விடயங்கள் பேசப்படவேண்டும்.

✱ ***கே:-*** அரசு இயல்புநிலையை ஏற்படுத்தும் என நம்புகிறீர்களா?

• ***ப:-*** இயல்பு நிலையை அரசு ஏற்படுத்தாவிட்டால் பேச்சு நடக்காது. போர்ச் சூழலைத் தணித்து இயல்புநிலை உருவாக்கப் படவேண்டும். இதுதான் அடிப்படை விவகாரம்.

✱ ***கே:-*** அப்படி அரசு இயல்புநிலையைக் கொண்டுவராவிட்டால் என்ன செய்வீர்கள்?

• ***ப:-*** அரசு இயல்புநிலையை ஏற்படுத்த முன்வராவிட்டால் அப்போது இதற்குப் பதில் சொல்கிறோம். இப்போது சொல்லமுடியாது.

✱ ***கே:-*** மக்கள் இடம்பெயர்ந்து கொண்டிருக்கிறார்கள். அதனை உடன் நிறுத்த நீங்கள் அரசுக்கு அழுத்தம் கொடுத்தீர்களா?

• ***ப:-*** நோர்வேயில்தான் பேச்சு நடக்க வேண்டும் என்று நாங்கள் இறுக்கமாகத்தான் உள்ளோம். நோர்வே இரு தரப்புகளாலும் அனுசரணையாளராக ஏற்றுக்கொள்ளப்பட்டது. இரு தரப்புகளும் நோர்வேயில் நம்பிக்கைவைத்துத்தான் ஏற்றுக்கொண்டோம்.

இரு தரப்புகளும் நம்பிக்கைவைத்து ஏற்றுக்கொண்டால் ஏன் நோர்வேயில் பேசக் கூடாது என்று தலைவர் கேட்கிறார்.

புலிகளை ஐரோப்பாவிலிருந்து ஓரம் கட்டி ஒதுக்குவதற்காகத்தான் நோர்வேயை அரசு ஏற்கமறுக்கிறது. இது எங்களுக்குத் தெரியும். எமது மக்கள் பெரும் அவலநிலைக்கு ஆளாகி நிற்கிறார்கள். இடம்பெயர்ந்துகொண்டிருக்கிறார்கள். இவை நிறுத்தப்படவேண்டும் என்பதற்காகத்தான் தலைவர் இறங்கிவந்து சுவிற்ஸர்லாந்தில் போர்நிறுத்தம்பற்றி பேச்சு நடத்தலாம் என்று சொல்லியிருக்கிறார்.

இதற்கு அரசு இணங்கி, இராணுவ அராஜகத்தை நிறுத்திக்கொண்டால், எமது மக்களின் இடம்பெயர்வு நிச்சயம் நிறுத்தப்படுமல்லவா?

✱ ***கே:-*** பேச்சை ஆரம்பிப்பதற்காக நிபந்தனையாக இதனைக் கருதலாமா?

• ***ப:-*** இது பேச்சை ஆரம்பிப்பதற்கான நிபந்தனையல்ல. சமாதான முயற்சிகளை முன்நகர்த்திச்செல்ல இயல்புநிலை அவசியமானது. இது நியாயமான கோரிக்கை.

இயல்புநிலை ஏற்பட்டால்தான் பேச்சுகளை சுமுகமாக முன்னெடுக்கமுடியும் என்பதை அரசும் உணரவேண்டும். முதல் பேச்சில் யுத்தநிறுத்த உடன்படிக்கையின் அமுலாக்கம் குறித்தே பேசவேண்டும். நியாயமான தீர்வுத்திட்டத்தை அரசு எமது ஆலோசனைக்கு முன்வைக்கவேண்டும் என்று தலைவர் மாவீரர்தின செய்தியில் குறிப்பிட்டுள்ளார்.

அரசும் ஜனாதிபதியும் அரசியல் தீர்வு தொடர்பான திட்டத்தை வகுத்து முன்வைக்க வேண்டும். அத்திட்டம் நியாயமானதாக எமது மக்களால் ஏற்றுக்கொள்ளப்பட்டால், அதைப் பற்றிப் பேச்சுநடத்தலாம்.

✱ ***கே:-*** நீங்கள் ஏதாவது திட்டத்தை முன்வைப்பீர்களா?

• ***ப:-*** நாங்கள் திட்டத்தை முன்வைக்கப் போவதில்லை. நாங்கள் ஏற்கனவே இடைக்காலத் தன்னாட்சி அதிகாரசபை என்ற திட்டத்தை முன்வைத்துள்ளோம். அரசு அத்திட்டம் குறித்துப் பேசத்தயார் என்றால், நாங்கள் பேசத் தயார். அத்திட்டம் குறித்துப் பேச விரும்பாவிட்டால், அவர்கள் எம்மால் ஏற்கக்கூடிய திட்டத்தை முன்வைக்கவேண்டும். அதனைப் பரிசீலிக்கலாம்.

✱ ***கே:-*** சுவிஸில் பேச்சு நடத்தவேண்டும் என்ற யோசனையை விடுதலைப் புலிகள் முன்வைத்தார்கள்?

• ***ப:-*** இல்லை. இருதரப்பும் பொது இடம் ஒன்றில் பேச இணங்கியுள்ளோம். சுவிஸ் நடுநிலையான நாடு. சமாதான முயற்சிகளை மேம்படுத்துவதில் தனது பங்களிப்பைத்தர அந்த நாடு விரும்புகின்றது.

இலங்கையில் சமாதானம் ஏற்படவேண்டும் என்று விரும்பும் எல்லா நாடுகளும் சுவிஸில் பேச்சு நடப்பதை ஏற்கின்றன. இந்த விவகாரத்தில் சம்பந்தப்பட்ட இரு தரப்புகளுக்கும் இது நல்ல செய்தியாகும்.

✱ ***கே:-*** சொல்ஹெய்மின் விஜயம் வெற்றியடைந்துள்ளதா?

• ***ப:-*** அவர் எமது தலைவருடன் விரிவாகப் பேசினார். எமது நிலைப்பாட்டை அவருக்குத் தெளிவாக்கினோம். அவர் மகிழ்ச்சியுடன் இங்கிருந்து புறப்படுகிறார். எமது செய்தியை அவர் ஜனாதிபதிக்குத் தெரிவிப்பார். சாதகமான நடவடிக்கை எடுக்கப்படும் என நம்புகிறோம்.

✱ ***கே:-*** பேச்சு ஆரம்பமானால் அதில் விடுதலைப் புலிகள் தரப்பில் யார் பங்குபற்றவுள்ளனர் என்பது முடிவு செய்யப்பட்டுள்ளதா?

• ***ப:-*** பேச்சுக்களில் என்னுடன் அரசியல்துறைப் பொறுப்பாளர் தமிழ்ச்செல்வன், காவல்துறைப் பொறுப்பாளர் நடேசன், கட்டளைத் தளபதி கேணல் ஜெயம், மட்டு அரசியல் பொறுப்பாளர் இளந்திரையன் ஆகியோர் பங்கேற்போம். அடேல் பாலசிங்கம் இந்தக் குழுவின் செயலாளராக செயற்படுவார்.

அரச தரப்பு பிரதிநிதிகளை அரசே முடிவு செய்யும்.

✱ ***கே:-*** ஒட்டுப்படைகள் தொடர்பாக...?

• ***ப:-*** ஒட்டுப்படைகள் அரச படைகளுடன் சேர்ந்து பல கொலைகளைச் செய்கின்றன என்பது தெரிந்த விடயம். இது எமது மக்களுக்கும் தெரியும். சிங்கள மக்களுக்கும் தெரியும். அரசுக்கும் தெரியும். உலகத்துக்கும் தெரியும்.

அதனால்தான் இணைத்தலைமை நாடுகள்கூட இரு தடவைகள் ஒட்டுப்படைகளின் ஆயுதங்களைக் களையவேண்டும் என்று கேட்டுள்ளன. அரசுக்கும் இந்த வேண்டுகோளை அவை விடுத்துள்ளன.

போர்நிறுத்தக் கண்காணிப்புக்குழுவும் கோரிக்கை விடுத்துள்ளது. ஆனாலும் ஒட்டுப் படைகளை ஏன் மடிக்குள் கட்டிக்கொண்டு அலைகின்றது என்று அரசிடம்தான் கேட்க வேண்டும். (ஒ-க-03)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



கிளிநொச்சியில் நேற்று இடம்பெற்ற சந்திப்பின்போது........



# சோதனை நடவடிக்கையால் தாமதம் அம்புலன்ஸில் சென்ற நோயாளி மரணம்

கிளிநொச்சி,ஜன.26

கிளிநொச்சி மாவட்ட வைத்தியசாலையிலிருந்து மேலதிக சிகிச்சைக்காக வவுனியா பொது வைத்தியசாலைக்கு அனுப்பிவைக்கப்பட்ட நோயாளி ஒருவர் சோதனை நடவடிக்கைகள் காரணமாக ஏற்பட்ட தாமதத்தால் உயிரிழக்க நேரிட்டதாக வைத்தியசாலை வட்டாரங்கள் தெரிவித்தன.

பிரிட்டனிலிருந்து கிளிநொச்சி வந்திருந்தவரான எஸ்.கணேசலிங்கம் (வயது 45) என்பவரே இச் சம்பவத்தில் மரணமானார்.

இதயநோயால் பாதிக்கப்பட்ட இவருக்கு கிளிநொச்சி மாவட்ட வைத்தியசாலையில் அவசரசிகிச்சை வழங்கப்பட்டது. நோய்ப் பாதிப்பின் தீவிரம் கருதி அவர் அம்புலன்ஸ் வாகனம் மூலம் வவுனியா பொது வைத்தியசாலைக்கு அனுப்பிவைக்கப்பட்டார்.

அம்புலன்ஸ் வாகனப் பயணம் சோதனை நடவடிக்கையால் ஓமந்தை சோதனைச் சாவடியில் சுமார் ஒருமணித்தியாலயத்துக்கும் அதிகமாக தாமதமானதாகவும் -

வழியில் ஆங்காங்கே இடம்பெற்ற சோதனை நடவடிக்கைகளால் மேலும் பயணம் தாமதமானதாகவும் - கூறப்படுகிறது.

இதனால், உரிய நேரத்தில் வவுனியா மருத்துவமனையை அம்புலன்ஸ் சென்றடைய முடியவில்லை. இதனால் நோயாளி உயிரிழக்க நேரிட்டதாக மருத்துவ வட்டாரங்கள் தெரிவித்தன.

## கலைமாணி பெயர்ப்பட்டியல்

யாழ்ப்பாணம்,ஜன.26

யாழ். பல்கலைக்கழக வெளிவாரிப் பட்டப்படிப்புகள் பதிவுகள் அலகின் கலைமாணி 2001 பட்டம் பெறுவோரின் இரண்டாவது பட்டியல் எதிர்வரும் 30ஆம் திகதி திங்கட்கிழமை வெளியாகவுள்ளது.

பட்டம் பெறுவோரின் பெயர் விவரங்களை அன்றையதினம் வெளிவாரிப் பட்டப்பதிவுகள் அலகில் பார்வையிடலாம் என உதவிப் பதிவாளர் எஸ்.கே.பிரபாகர் தெரிவித்துள்ளார்.

இதன் முதலாவது பட்டியல் கடந்த ஆண்டு செப்ரெம்பர்மாதம் 15ஆம் திகதி வெளியாகியிருந்தது. (ஒ-12-14)

# பல்கலைக்கழக அனுமதியை மேம்படுத்த நடவடிக்கைக்குழு அங்குரார்ப்பணம்

யாழ்ப்பாணம்,ஜன.26

யாழ். மாவட்டத்திலிருந்து பல்கலைக்கழக மருத்துவம் மற்றும் பொறியியல் பீடங்களுக்கு அனுமதிக்கப்படும் மாணவர்களின் எண்ணிக்கை குறைந்து வரும் நிலையில் இது குறித்து கண்காணித்து அதிக எண்ணிக்கையிலான மாணவர்களைப் பல்கலைக்கழக அனுமதி பெறவைப்பதற்கான நடவடிக்கைக் குழு ஒன்று அமைக்கப்பட்டுள்ளது.

நேற்றுமுன்தினம் யாழ். பல்கலைக்கழகக் கைலாசபதி கலையரங்கில் இடம்பெற்ற மாவட்டக் கல்வியலாளர்கள் பங்குபற்றிய கலந்துரையாடலிலேயே இக்குழு அங்குரார்ப்பணம் செய்துவைக்கப்பட்டது.

இக்குழுவிற்கு யாழ். இந்துக் கல்லூரி முன்னாள் அதிபர் ஏ.பஞ்சலிங்கம் தலைவராகவும், வசாவிளான் மத்திய மகாவித்தியாலய முன்னாள் அதிபர் ஏ.எஸ்.நடராசா செயலாளராகவும், ஆசிரியர் ஆர்.குமரன் பொருளாளராகவும் பொறுப்பேற்றுள்ளனர்.

யாழ். பல்கலைக்கழகப் பேராசியர் கந்தசாமி உபதலைவராகவும், யாழ். இந்துக் கல்லூரி பிரதியதிபர் பி.மகேஸ்வரன், உபசெயலாளராகவும், பலாலி ஆசிரியர் கலாசாலை விரிவுரையாளர் எஸ்.குணசீலன், பத்திராதிபராகவும், தமிழர் ஆசிரியர் சங்கசிரேஷ்ட துணைப்பொதுச்செயலாளர் ரி.பஞ்சலிங்கம் ஊடாக இணைப்பாளராகவும் தெரிவுசெய்யப்பட்டனர்.

யாழ். பல்கலைக்கழக மாணவர் ஒன்றியம், மருத்துவபீடம், விஞ்ஞானபீடம், வணிகபீடம், கலைப்பீடம் ஆகியவற்றின் தலைவர்கள் மற்றும் மருத்துவபீட சிரேஷ்ட மாணவர்கள் பாதிக்கப்பட்ட மாணவர்கள் ஆகியோரின் பிரதிநிதிகள் செயற்குழு உறுப்பினர்களாகச் செயற்படுவார்கள்.

யாழ். பல்கலைக்கழகத் துணைவேந்தர், பீடாதிபதிகள், யாழ். மாவட்ட வலயக் கல்விப் பணிப்பாளர்கள், அதிபர் சங்கம் மற்றும் ஆசிரியர் சங்கம் ஆகியவற்றின் நிர்வாகிகள் ஆகியோரின் கூட்டு ஆலோசனையின் கீழ் இக்குழு செயற்படவுள்ளது.

இவ்வருடம் மருத்துவ பீடத்திற்கு மேலதிகமாக 50 மாணவர்களும், பொறியியல் பீடத்துக்கு கடந்தாண்டை விட 150 மாணவர்களும் சேர்க்கப்பட்டனர். இந்த நிலையிலும் யாழ். மாவட்ட கோட்டா அதிகரிக்கப்படவில்லை. இதனால், இப்பீடங்களுக்குத் தெரிவாகும் யாழ். மாணவர்களின் எண்ணிக்கை குறைந்துள்ளது. இது குறித்து யாழ். மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினர்கள் ஊடாக தீர்வுகாண நடவடிக்கைக் குழு முயற்சி மேற்கொள்ளவுள்ளது.

இந்த முயற்சி பயனளிக்காவிட்டால் நீதிமன்றம் ஊடாகத் தீர்வுகாண நடவடிக்கை எடுப்பது என்றும் கலந்துரையாடலில் தீர்மானிக்கப்பட்டுள்ளது. (ஒ)

## விளையாட்டு ஆசிரியர்களுக்கு

குருநகர்,ஜன.26

யாழ். கோட்டப் பாடசாலைகளில் விளையாட்டுத்துறைக்குப் பொறுப்பாகவுள்ள ஆசிரியர்களுடனான கலந்துரையாடல் நாளை வெள்ளிக்கிழமை பிற்பகல் ஒரு மணிக்கு யாழ். வைத்தீஸ்வராக் கல்லூரியில் நடைபெறவுள்ளதாக யாழ். கோட்டக் கல்விப் பணிப்பாளர் எஸ்.எஸ்.தங்கராஜா அறிவித்துள்ளார்.

கோட்ட மட்ட மெய்வன்மைப் போட்டி மற்றும் மென்பந்து, வலைப்பந்து, கரப்பந்தாட்டப் போட்டிகளுக்கான போட்டி நிகழ்ச்சி நிரல்கள் தயாரிக்கப்படும் வேலைகள் நடைபெறவுள்ளதனால் சகல விளையாட்டுத்துறைப் பொறுப்பாசிரியாகளையும் இதில் கலந்து கொள்ளுமாறு அவர் கோரியுள்ளார்.(ஒ-51)

# 314 தொண்டராசிரியர்களுக்கு நியமனம்

கொழும்பு,ஜன.26

வடக்கு - கிழக்குப் பகுதிகளில் தொண்டராசிரியர்களாக கடமையாற்றும் 314பேருக்கு எதிர்வரும் முதலாம் திகதி முதல் நிரந்தர நியமனம் வழங்க மாகாண சபை தீர்மானித்துள்ளது.

வடக்கு - கிழக்கில் தொடர்ந்து மூன்று ஆண்டுகள் தொண்டராசிரியர்களாகக் கடமையாற்றித் தகுதிபெற்ற தொண்டராசிரியர்களுக்கு நிரந்தர நியமனம் வழங்கப்படவுள்ளதாக மாகாணக் கல்வி அமைச்சு தெரிவித்துள்ளது.

திருகோணமலையில் 54பேருக்கும், வவுனியாவில் 7 பேருக்கும், அம்பாறையில் 253 பேருக்குமாக மொத்தம் 314 பேருக்கு நிரந்த நியமனம் வழங்கப்படவுள்ளது.

இதேவேளை, யாழ். குடாநாட்டில் பணியாற்றும் தொடராசிரியர்களுக்கு நிரந்தர நியமனம் வழங்குவது தொடர்பாக எதுவும் தெரிவிக்கப்படவில்லை. (ஒ-6)

## மரக்கறி வாங்க படையினர் தயார்

யாழ்ப்பாணத்தில் விவசாயிகளிடமிருந்து மரக்கறி வகைகளை இராணுவத்தினர் கொள்வனவு செய்யத்தயாராக உள்ளனர் என்று பலாலி பாதுகாப்பு நடவடிக்கைத் தலைமையகம் தெரிவித்துள்ளது.

யாழ்ப்பாணத்தில் உற்பத்திசெய்யப்படும் மரக்கறி வகைகளைச் சாதாரண விலைக்குக் கொள்வனவு செய்யப் பாதுகாப்புப் படையினர் தயாராகவுள்ளனர் என்றும் இது குறித்த மேலதிக தகவல்கள் எதிர்வரும் நாள்களில் வெளியிடப்படும் என்றும் -

பாதுகாப்புத் தலைமையகம் விடுத்த செய்திக் குறிப்பில் தெரிவிக்கப்பட்டுள்ளது. (ஒ)

# தைபஸ் காய்ச்சல் பரவுவதற்கு எலிகள், ஒட்டுண்ணிகள் காரணம்

## தொற்று நோயியலாளர் தெரிவிப்பு

குருநகர்,ஜன.26

யாழ். குடாநாட்டில் அண்மைக்காலமாகப் பரவிவரும் தைபஸ்காய்ச்சலுக்கு எலிகளும் காரணம் என்று யாழ். பிரதிமாகாணச் சுகாதாரச் சேவைப் பணிப்பாளர் அலுவலகப் பிராந்திய தொற்றுநோயியலாளர் எஸ்.தேவநேசன் தெரிவித்தார்.

இது தொடர்பாக அவர் மேலும் கூறியதாவது:-

விலங்குகளில் [illegible] கள் தலையில் உள்ள பேன் மற்றும் வீடுகளில் உள்ள எலிகள் போன்றவற்றால் இக்காய்ச்சல் பரவுகிறது. வீடுகளில் உள்ள எலிகளை அழிப்பது இக் காய்ச்சல் அதிகம் பரவுவதைத் தடுக்கும். வீடுகள் உட்படச் சுற்றுச் சூழலைத் துப்பரவாக வைத்திருப்பது இக்காச்சல் பரவாது தடுக்க அவசியமாகும். வளர்ப்புப் பிராணிகள் மற்றும் கால்நடைகளில் உள்ள தெள்ளு, உண்ணி போன்றவற்றையும் தலையில் உள்ள பேன்களையும் அகற்றவேண்டியது அவசியமா[illegible] அவர் மேலும் தெரிவித்தார். (ஒ-51)

## வீதிவிபத்தில் பெண்மணி காயம்

யாழ்ப்பாணம்,ஜன.26

பளைப் பகுதியில் நேற்று இடம்பெற்ற டிரக்டர் - மோட்டார் சைக்கிள் விபத்தில் பெண் ஒருவர் படுகாயமடைந்தார்.

நேற்றுமுற்பகல் 10.30 மணியளவில் இடம்பெற்ற இச் சம்பவத்தில் நுணாவிலைச் சேர்ந்த சிவயோகநாதன் சிவதர்சி (வயது 30) என்பவரே படுகாயமடைந்தவராவார்.

காயமடைந்தவர் யாழ். போதனா வைத்தியசாலையில் சேர்க்கப்பட்டுள்ளார். (ஒ-12-13)

இன்றைய உதயனின் 11ஆம் பக்கத்தில் பிரசுரிக்கப்பட்டுள்ள கொக்குவிலில் சுட்டுக்கொல்லப்பட்ட இரு இளைஞர்களின் புகைப்படங்களில் பெயர்கள் மாறி அச்சாகியுள்ளன. மேலுள்ள படம் அமர்தநாதன் ஸ்ரீகாந்தனுடையதும், கீழுள்ள படம் யோகலிங்கம் செந்தீபனுடையதும் ஆகும்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# சின்னஞ்சிறு விளம்பரங்கள்

## விற்பனைக்கு

13 Sri - xxxx தொடர் இலக்கமுடைய மிற்சுபிசி லான்சர் காரும் P-IV Computer உம் விற்பனைக்கு உண்டு. தொடர்பு: சிறிராம், 171, இரண்டாம் குறுக்குத்தெரு, யாழ்ப்பாணம். (45965)

Cannon - 1215 போட்டோப் பிரதி இயந்திரம், Cannon - AE - 1 கமராவும் உதிரிகளும் LG வீடியோ டெக், ஆங்கிலத் திரைப்பட கசெற்றுகள் 100 ஆகியன விற்பனைக்குண்டு. தொடர்பு: S.K. துரைசிங்கம், 276, கனகரத்தினம் வீதி, நாயன்மார்கட்டு, யாழ்ப்பாணம். (45961)

## வீடு விற்பனைக்கு

கொக்குவில் கிழக்கில் மூன்றே முக்கால் பரப்புக் காணியில் அமைந்துள்ள 4 அறைகள் கொண்ட வீடு, தனிக்கிணறு மற்றும் பிரயோசனங்களுடன் விற்பனைக்குண்டு. தொடர்பு: 0777 079746, 021-222 2638 (45989)

## தவறிவிட்டது

அல்லியவத்தை, கோப்பாய் மத்தியைச் சேர்ந்த முருகன் சுந்தரலிங்கம் என்பவரது தேசிய அடையாள அட்டை (501991163V), சாரதி அனுமதிப்பத்திரம் என்பன 22.01.2006 ஞாயிற்றுக்கிழமை நீர்வேலிப்பகுதியில் தவறிவிட்டன. கண்டெடுத்தவர்கள் லொறிக்கார சிங்கம், மாசுவன் சந்தி, நீர்வேலி என்னும் முகவரியில் ஒப்படைக்கவும்.(45987)

## மணமகள் தேவை

யாழ்.இந்து கௌரவ குடும்பத்தைச் சேர்ந்த, தற்போது வவுனியாவில் நிரந்தரமாக வசிக்கின்ற, 28 வயதுடைய, க.பொ.த உயர்தரம் சித்தி பெற்று தற்போது கணனி, அச்சுக்கலை தொடர்பான சொந்தத் தொழில் நிறுவனத்தை நடத்திவரும் மணமகனிற்கு மணமகள் தேவை. (கேட்டை நட்சத்திரம், செவ்வாய்குற்றமற்ற சாதகம்) தொழில் செய்யும் மணமகளாயினும் தொடர்புகொள்ளலாம். தொடர்பு: விளம்பர இல. 2791, மே/பா, உதயன். (45972)

## கோழிக்குஞ்சு விநியோகம்

இரண்டு முறை தடுப்பு மருந்து போடப்பட்ட Original Prima Broiler குஞ்சுகள், பேட்டுக்குஞ்சுகள் 06.02.2006 திங்கட்கிழமை பிற்பகல் விநியோகிக்கப்படும். எமது பருத்தித்துறை - நெல்லியடிக் கிளைகளிலும், சுட்டி பாம் - வட்டுக்கோட்டை, கரன் - ஆலடி, நல்லூர் பாம் சென்ரர் - 19, முருகேசர் ஒழுங்கை, முத்திரைச்சந்தையடி, நல்லூர்.

(சி-47561)

## தேவை

*வீடியோ-மிக்சிங் (Adobe Premiere) ஆற்றல் அனுபவம் உள்ளவர்கள் தொடர்பு கொள்ளவும். 28.01.2006 சனிக்கிழமை நேரில் சமுகம் தரவும்.*

**இராஜமாணிக்கம் கல்யாண மண்டபம்**
**வீடியோ கலாமினி,**
அச்சுவேலி.
T.P. 077 3053080

(சி-47509) (21.24.45)

## சிறுவர் பாதுகாப்பு நிதியமே நிதியுதவி

யாழ்ப்பாணம், ஜன.26

யாழ்.மாநகர எல்லைக்குட்பட்ட வெள்ள வாய்க்கால் ஒன்றினைப் புனரமைக்கவென சிறுவர் பாதுகாப்பு நிதியம் (எஸ்.சி.எவ்) 15 லட்சம் ரூபாவினை வழங்கியுள்ளது.

வெள்ள வாய்க்காலைப் புனரமைக்க 'யுனிசெவ்' உதவி என்ற தலைப்பில் நேற்றைய உதயனில் 05ஆம் பக்கத்தில் வெளிவந்த செய்தியில் இந்த நிதியுதவி 'யுனிசெவ்' நிறுவனம் வழங்கியது என்று தெரிவிக்கப்பட்டிருந்தது. அந்தத் தகவல் தவறு என்றும் சிறுவர் பாதுகாப்பு நிதியமே (எஸ்.சி.எவ்) நிதியை வழங்கியது எனவும் -

மாநகர ஆணையாளர் சி.வீ.கே சிவஞானம் சுட்டிக்காட்டியுள்ளார். (ஐ-13)

## அழைப்பு

எமது தாயக மண்ணில் பிரத்தியேகப்படுத்தப்பட்ட
நூறு வீத செய்முறைப் பயிற்சியுடன் கூடிய கணனிக் கற்கை
நெறிகளைப் புகுத்தும் உயரிய நோக்கில் எமது நிறுவனம் புதிய

### விடிவெள்ளியாக

வைபவ ரீதியாக திறந்து வைக்கவுள்ளது
என்பதை மகிழ்ச்சியுடன் தெரிவித்துக்கொள்வதுடன்
எமது உறவினர்கள், அன்பர்கள், நண்பர்கள்,
வாடிக்கையாளர்கள், மாணவர்கள் அனைவரையும் கலந்துகொண்டு
வாழ்த்துக்களை வழங்குமாறு அன்புடன் வேண்டிக் கொள்கிறோம்.

**காலம்:** 27.01.2006 (வெள்ளிக்கிழமை)
**இடம்:** 16/1, கில்னர் ஒழுங்கை,
யாழ்ப்பாணம்.
(இந்துக் கல்லூரி அருகில்,
பன்றிக்கோட்டுப் பிள்ளையார் கோவில் எதிர் ஒழுங்கை.
OR வேளாங்கன்னி மாதா கோயில் எதிர் ஒழுங்கை,
கஸ்தூரியார் வீதி.)

நிர்வாகத்தினர் மற்றும்
ஊழியர்கள்
UNIT

## கூட்டங்கள்

தென்மராட்சி,ஜன.26

தென்மராட்சிப் பிரதேச ஒருங்கிணைப்புக் குழுக்கூட்டமும் விவசாயக் குழுக் கூட்டமும் எதிர்வரும் 31 ஆம் திகதி முற்பகல் 10 மணிக்கு பிரதேச செயலக மண்டபத்தில் நடைபெறவுள்ளன.

பிரதேசத்தில் உள்ள அனைத்து திணைக்களத் தலைவர்கள், அரச சார்பற்ற நிறுவனப் பிரதிநிதிகள் ஆகியோரைக் கலந்துகொள்ளுமாறு பிரதேச செயலர் செ.ஸ்ரீநிவாசன் அறிவித்துள்ளார். (ஐ-117)

## கைதடிப் பகுதியில் வேட்டுச் சத்தங்களால் பதற்றம்

கைதடி,ஜன.26

கைதடி மத்திய பகுதியில் செவ்வாய்க்கிழமை இரவு 9 மணிக்குப் பின்னர் பரவலாகக் கேட்ட வேட்டுச்சத்தங்களால் மக்கள் பீதியடைந்தனர்.

இனம்தெரியாத குழுவினர் இப்பகுதி வீதிகளில் நடமாடி துப்பாக்கி வேட்டுகளைத் தீர்த்ததாலேயே இந்தப் பதற்றம் ஏற்பட்டது என்று கூறப்படுகிறது.

(ஐ-75)

## துரித நிகழ்ச்சித் திட்டம்

தென்மராட்சி,ஜன.26

யாழ்.மாவட்ட உள்ளூராட்சி சபைகளில் 'மஹிந்த சிந்தனை' அமுலாக்கல் தொடர்பான மூன்றுமாத துரித நிகழ்ச்சித் திட்டம் மேற்கொள்ளப்படவுள்ளது.

மாகாண சபைகள் உள்ளூராட்சி அமைச்சின் உள்ளூர் கடன் அபிவிருத்தி நிதியத்தினால் இத்திட்டம் முன்னெடுக்கப்படுகிறது.

பொதுமக்களுக்கான குடிதண்ணீர் விநியோகம், கிராமிய வீதிகள் அபிவிருத்தி, வாராந்த சந்தை மேம்பாடு, திண்மக்கழிவு முகாமைத்துவத் திட்டம் ஆகியவை இத்திட்டத்தில் உள்ளடக்கப்படும்.

இந்த வேலைத் திட்டங்கள் தொடர்பான விவரங்களை நான்கு நாள்களில் தயாரித்து உடனடியாக அனுப்பி வைக்குமாறு யாழ். பிராந்திய உதவி உள்ளூராட்சி ஆணையாளர் திருமதி ம.வசந்தகுமார் சகல உள்ளூராட்சி சபைகளின் செயலாளர்களுக்கும் அறிவித்துள்ளார். (ஐ-117)

## Golden Opportunity for jaffna students....

abe
**The Association of Business Executives**

THE FASTEST & THE MOST EFFECTIVE TRACT TO AN MBA

Your Opportunity to complete your Degree in UK, USA, Canada, Australia etc.........

### Obtain a BSc Degree in 2 1/2 years

**Amazing benefits..........**

- Free original study packs
- Free pass paper kit for each subject
- Could gain work experience



Why abe @ Univentures..........

- Pioneer in Jaffna for abe
- Univentures is an accredited institute by abe UK
- Timely coverage of syllabus
- The best panel of lecturers
- Convenient location

June 2006 Exam

Part I - Commencing
**On 28th January 2006**
**814 Hospital Road, Jaffna**
E.mail: uibmj@sltnet.lk

UNIVENTURES
Institute of Business Management

Contact us on:
**021 222 7666,**
**077 9116330.**

## கோண்டாவில் சிவபூமி அறக்கட்டளை நிறுவனத்தின் அனுசரணையுடன் மானிப்பாய் வட்ட லயன்ஸ் கழகம் நடத்தும் விழிவெண்படலத்தால் பாதிப்புற்றோருக்கான இலவச கண்பரிசோதனை முகாம்

We Serve

**காலம்:** 27.01.2006 (வெள்ளி) காலை 8.30 மணி
**இடம்:** மாதர் கிராமஅபிவிருத்திச் சங்கம்
பண்ணாகம் தெற்கு (தொல்புரம்), சுழிபுரம்
*(தொல்புரம் வழக்கம்பரை அம்மன் ஆலயத்திலிருந்து சில்லாலை வீதியில் ¾ km தூரம்)*

கண்பார்வை பரிசோதனை மேற்கொள்பவர்
யாழ்.போதனா வைத்தியசாலை
கண்சத்திரசிகிச்சை நிபுணர்
வைத்திய கலாநிதி **எஸ்.குகதாசன்** அவர்கள்

குறிப்பு: பயன்பெற விரும்புவோர் குறித்த நேரத்திற்கு வருகை தரவேண்டும்.

இம்முகாம் பற்றிய மேலும் விவரங்களை
பண்ணாகம் தெற்கைச்சேர்ந்த லயன் **S. கனகரசன்**
அவர்களிடம் அறியலாம்.

லயன் எஸ்.எஸ்.தங்கராஜா
*சேவை இணைப்பாளர்/கழகச் செயலாளர்*

லயன் எஸ்.ஸ்ரீநிவாசன்
*கழகத் தலைவர்.*

(சி-47513)(18.34.45)

**லயன்ஸ் கழகம் - மானிப்பாய் வட்டம்**

## COMPUTER EXPRESS

Institute of Information Technology
இல.15, சிறாம்பியடி வீதி,யாழ்ப்பாணம் (off Stanly Rd.)
021-222 8250,0777 222422

**அனைத்துக் கணனிக் கற்கை நெறிகளிற்கான புதிய பிரிவுகள் ஆரம்பிக்கப்படவுள்ளன.**

30-01-2006க்கு முன் பதிவு செய்து கொள்ளவும்.

**80% Off**

Batch I :- 27/01/2006 - 11.30-01.30
Batch II :- 28/01/2006 - 11.30-12.30
Batch III :- 29/01/2006 - 01.00-02.00

## மரண அறிவித்தல்



### திருமதி பரஞ்சோதி பரமேஸ்வரி

நெடுந்தீவைப் பிறப்பிடமாகவும் கரம்பொன், காளி கோயிலடியை வசிப்பிடமாகவும் தற்பொழுது கற்குழியில் வசித்தவருமான காலஞ்சென்ற பரஞ்சோதியின் மனைவி பரமேஸ்வரி 24.01.2006 அன்று காலமாகிவிட்டார்.

அன்னார் கந்தையா - மீனாட்சி தம்பதியரின் அன்பு மகளும் வேலாயுதம் - இலட்சுமி தம்பதியரின் அன்பு மருமகளும் இராஜேஸ்வரி, கிருபாகரன், ஜெகதீஸ்வரி, சுதாகரன்,கருணாகரன் ஆகியோரின் அன்புத் தாயும் சீவரட்ணம், சகுந்தலாதேவி,சிவநாதன், கீதரஞ்சனி ஆகியோரின் அன்பு மாமியும் யாதவராயர், யோகராஜா, பாலசிங்கம், மனோலட்சுமி, தியாகராஜா ஆகியோரின் சகோதரியும் நடராஜா, சிவயோகம், அப்புத்துரை ஆகியோரின் மைத்துனியும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று (26.01.2006) வியாழன் அவரின் இல்லத்தில் நடைபெற்று, பூதவுடல் இறுதிக் கிரியைக்காக தோணிக்கல் இந்து மயானத்திற்கு எடுத்துச்செல்லப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

இல.156, தேக்கவத்தை,
வவுனியா. (சி-47514)(21.45.34)

தகவல்:
மக்கள்,மருமக்கள்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# தமிழர்களுக்கு, சிங்களவர்களுக்கு, உலகுக்கு வெவ்வேறு முகம் காட்டுகின்றார் ராஜபக்ஷ

## புலிகளின் யாழ்.மாவட்ட அரசியல்துறை அறிக்கை

கிளிநொச்சி,ஜன.26

சர்வதேசத்திற்கு ஒருமுகம் - சிங்களவருக்கு ஒருமுகம் - தமிழருக்கு இன்னொரு முகம் எனப் பல முகங்களைக் காட்டி வரும் ஸ்ரீலங்கா அரசுத் தலைவர் மஹிந்த ராஜபக்ஷ தமிழீழ விரோத கடும் கோட்பாட்டாளர்களையும் இன வெறியாளர்களையும் அரசியலிலும் படைத்துறையிலும் சேர்த்துக்கொண்டு தமிழ் மக்கள் மீது யுத்தத்தைத் திணிப்பதற்கான நகர்வுகளையும் தயார்படுத்தல்களையும் திட்டமிட்ட அடிப்படையில் மேற்கொண்டு வருகின்றார்

- இவ்வாறு விடுதலைப் புலிகளின் யாழ். மாவட்ட அரசியல்துறை வெளியிட்ட அறிக்கையில் குற்றஞ்சாட்டப்பட்டுள்ளது. அந்த அறிக்கையில் மேலும் தெரிவிக்கப்பட்டுள்ளதாவது:

அரசுத் தலைவர் மேற்கொண்டுவரும் நடவடிக்கைகளின் பின்னணியிலேயே ஸ்ரீலங்கா அரச படைகள் எமது மக்களை மிகக் கொடூரமான முறையில் படுகொலை செய்து வருகின்றன. கொடூரமான தாக்குதல்களையும் மேற்கொண்டு வருகின்றன.

எந்த இடத்திலும் எந்த வேளையிலும் எமது மக்களின் உயிர்களை ஆக்கிரமிப்பு படைகளின் துப்பாக்கி ரவைகள் பறித்துவிடும் அபாய நிலை தொடர்கின்றது. அரச கட்டுப்பாட்டுப் பகுதிகளில் திடீர் திடீரென வெள்ளை வானில்வரும் இராணுவப் புலனாய்வுப் பிரிவினரும் ஒட்டுப்படைக் கொலையாளிகளும் இக்கொலைகளைப் புரிகின்றனர்; பலரைக் கடத்தியும் சென்றுள்ளனர்.

இதுவரை குடாநாட்டில் 01.12.2005 முதல் 24.01.2006 வரை சிறுவர், இளைஞர், பெண்கள், முதியோர்கள் மற்றும் அறிஞர்கள் என 45 அப்பாவிப் பொதுமக்கள் கொல்லப்பட்டுள்ளனர். 5 இளம் பெண்கள் உட்பட 51 பேர் கடத்தப்பட்டு காணாமல் போயுள்ளனர்.

சுமார் 3ஆயிரத்து 900 வரையான குடும்பங்கள் அரச கட்டுப்பாட்டுப் பகுதியிலிருந்து இராணுவத்தினரின் நேரடி அச்சுறுத்தல்களினால் வெளியேற்றப்பட்டுள்ளன.

உலகம் ஏற்றுக்கொள்ளாத இக் கொலைகளை - மனித உரிமை மீறல் சம்பவங்களை - மனித உரிமைக்கான அமைப்புகளும் மனித உரிமை ஆர்வலர்களும் மனித மேன்மைக்கான சர்வதேச அமைப்புகளும் தடுத்து நிறுத்த முடியாதிருப்பது கவலைக்குரியதாக உள்ளது.

நேற்றுமுன்தினம் கூட ஒரு மாணவன் இராணுவப் புலனாய்வாளர்களாலும் ஒட்டுப்படைக் கொலைஞர்களாலும் அநியாயமான முறையில் படுகொலை செய்யப்பட்டுள்ளான். தொடரும் இக் கொலைகளை இனியும் அனுமதிக்க முடியாது. இக் கொலைகளை - மனித உரிமை மீறல்களை - நாம் வன்மையாகக் கண்டிக்கின்றோம்.

இவ்வாறான கொலைகள் தொடர்வதை எமது சமூகம் இனியும் அனுமதிக்காது.

- இவ்வாறு அந்த அறிக்கையில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

(ஐ-6)

## மேலும் 23 பிரிவுகள் வீடமைப்புத் திட்டத்துக்கு அரச அதிபரால் தெரிவு

தென்மராட்சி,ஜன.26

உலக வங்கியின் உதவியுடன் யாழ். மாவட்டத்தில் மேற்கொள்ளப்படும் வீடமைப்புத் திட்டத்திற்கு மேலும் 23 கிராம

குடாநாட்டின் பிரதேசச் செய்திகள்

அலுவலர் பிரிவுகள் தெரிவுசெய்யப்பட்டுள்ளன என்று யாழ்.அரச அதிபர் க. கணேஸ் அறிவித்துள்ளார்.

சங்கானைப் பிரதேசத்தில் 9 பிரிவுகளும் கரவெட்டி பிரதேசத்தில் 6 பிரிவுகளும் வேலணைப் பிரதேசத்தில் 5 பிரிவுகளும் தென்மராட்சி பிரதேசத்தில் 3 பிரிவுகளும் தெரிவு செய்யப்பட்டுள்ளன என்று அறிவிக்கப்பட்டுள்ளது. ஏற்கனவே 80 கிராம அலுவலர் பிரிவுகள் வீடமைப்புத் திட்டத்திற்குத் தெரிவு செய்யப்பட்டிருந்தன.

(ஐ-117)



நல்லூர் பிரதேச செயலர் பிரிவில் இடம்பெற்ற தேசிய கலை இலக்கிய விழாவையொட்டி நடத்தப்பட்ட கதை, கவிதை, நாடகம், கட்டுரைப் போட்டிகளில் வெற்றியீட் டியவர்களுக்கான பரிசில்கள், சான்றிதழ்கள் வழங்கும் நிகழ்வில் நல்லூர் பிரதேச செயலர் திருமதி சு.தெய்வேந்திரம் பாடசாலை மட்டத்தில் நடந்த போட்டியில் வெற்றியீட்டிய ஒருவருக்கு பரிசில் மற்றும் சான்றிதழ் வழங்குவதையும்-

இந்த வைபவத்தில் கலந்து கொண்டவர்களில் ஒருபகுதியினரையும் படங்களில் காணலாம்.

*(படங்கள்: நேசன்)*

### மதிய உணவுத் திட்டத்தை மேற்பார்வை செய்ய

## கோட்ட அலுவலகங்களுக்கு மோட்டார் சைக்கிள் வசதி

தென்மராட்சி,ஜன.26

யாழ்.மாவட்ட கல்விக் கோட்ட அலுவலகங்களுக்கு மோட்டார் சைக்கிள்கள் வழங்கப்பட்டுள்ளன.

உலக உணவு நிகழ்ச்சித் திட்ட நிறுவனத்தினர் இந்த மோட்டார் சைக்கிள்களை வழங்கியுள்ளனர் எனத் தெரிவிக்கப்படுகின்றது.

யாழ்.மாவட்ட கல்வி வலயங்களில் மாணவர்களுக்கான மதிய உணவு வழங்கப்படும் கல்விக் கோட்டங்களுக்கு இந்த உணவுத் திட்டத்தினை மேற்பார்வை செய்ய வசதியாக மோட்டார் சைக்கிள்கள் வழங்கப்பட்டுள்ளன என்று தெரிவிக்கப்பட்டது.

தென்மராட்சி கல்வி வலயத்தைச் சேர்ந்த சாவகச்சேரி கோட்டக்கல்வி அலுவலகத்திற்கும் மோட்டார் சைக்கிள் ஒன்று வழங்கப்பட்டுள்ளது.

(ஐ-117)

## குருநகரில் மாநகர சபையினரால் துரிதகதியில் கழிவு அகற்றல்

குருநகர்,ஜன.26

குருநகர் பகுதியில் பொதுச் சுத்திகரிப்புப் பணிகள் யாழ். மாநகரசபையின் சுத்திகரிப்புப் பிரிவால் முழுவீச்சில் நடைபெற்று வருகின்றன. இங்குள்ள வீதிகளில் துப்புரவுப் பணிகள் நாளாந்தம் காலை நேரங்களில் நடைபெற்றுவருவதுடன் வடிகால்களும் தினமும் சுத்திகரிக்கப்படுகின்றன. குருநகர் 'ஐஸ்பிளான்ற்' குடியிருப்புப் பகுதியில் இருந்து குருநகர் தொடர்மாடி வரையிலான குடியிருப்புப் பகுதியிலேயே இப்பணி தினமும் நடைபெற்று வருகின்றது. சேகரிக்கும் குப்பை கூளங்கள் உழவு இயந்திரம் மூலம் உரிய இடங்களில் கொட்டப்படுகின்றன. யாழ். மாநகரசபையில் சுத்திகரிப்பு மேற்பார்வையாளர்களால் இப்பணிகள் கண்காணிக்கப்படுகின்றன.

எனினும், இச்சுத்திகரிப்புப் பணிகளை மேலும் சிறப்பாக நிறைவேற்றுவதற்கு யாழ். மாநகர சுத்திகரிப்புப் பிரிவில் உழவு இயந்திரங்களும் சுத்திகரிப்புத் தொழிலாளர்களும் பற்றாக்குறையாக உள்ளது என்று தெரிவிக்கப்படுகிறது.

(ஐ-51)

## உறுதிபூசுதல் வழங்கும் வைபவம்

குருநகர்,ஜன.26

ஊர்காவற்றுறை புனித மரியாள் ஆலயத்தில் திருவருட்சாதனமான உறுதிபூசுதல் வழங்கும் நிகழ்வு எதிர்வரும் பெப்ரவரி 25 ஆம் திகதி சனிக்கிழமை யாழ். ஆயர் அதி வண. தோமஸ் சௌந்தரநாயகம் ஆண்டகை தலைமையில் நடைபெறவுள்ளது.

இத் திருவருட்சாதனத்தைப் பெற்றுக் கொள்ளவுள்ளவர்களுக்கான ஆயத்த வகுப்புகள் பங்குத்தந்தை அருட்திரு. ஜேம்ஸ் அடிகளாரின் மேற்பார்வையில் நடைபெற்று வருகின்றன.

(ஐ-51)

## பற்றைகளை எரிக்கும் படையினர்

யாழ்ப்பாணம்,ஜன.26

தென்மராட்சிப் பகுதியில் - புத்தூர் சந்தியில் இருந்து கனகன்புளியடிச் சந்தி வரையான வீதியில் - குறிப்பாக வேம்பிராய் சந்திப் பகுதியில் உள்ள வீதியோரப் பற்றைகள் இராணுவத்தினரால் தீயிட்டுக் கொளுத்தப்பட்டுவருகின்றன. பாதுகாப்புக் காரணங்களுக்காகவே இந்த நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டு வருகிறது.

அத்துடன் இந்தப் பகுதியில் 'ஏ-9' பாதையில் உள்ளது போல் வீதிரோந்து மற்றும் கண்காணிப்பு நடவடிக்கைகள் அதிகரிக்கப்பட்டுள்ளன என்றும் தெரிவிக்கப்படுகிறது.

(ஐ-88)

## 2005 மாணவர் ஆய்வு விருதுக்கு தெரிவானோருக்கு விரைவில் சான்றிதழ்

யாழ்ப்பாணம்,ஜன.26

2005 இல் பாடசாலை மட்டத்தில் மாணவர் ஆய்வு விருதுக்கு தெரிவு செய்யப்பட்டவர்களுக்கான விருதுகள் பணப்பரிசு, சான்றிதழ் என்பன விரைவில் வழங்கப்படவுள்ளன.

யாழ்.பல்கலைக்கழக சிரேஷ்ட விரிவுரையாளரும் விஞ்ஞான சங்க சிரேஷ்ட பொருளாளருமான கலாநிதி ஜெ.பிறின்ஸ் ஜெயதேவன் இத்தகவலைத் தெரிவித்தார்.

2005 இல் மாணவர் ஆய்வு விருதுக்காக பௌதிக விஞ்ஞானம், இரசாயன விஞ்ஞானம், உயிரியல் விஞ்ஞானம், கணிதம் ஆகிய நான்கு பிரிவுகளிலும் இருந்து தலா 3 பேர் வீதம் 12 பேர் தெரிவாகியுள்ளனர்.

இவர்களுக்கான விருதுகளை எதிர்வரும் ஏப்ரல் மாத நடுப்பகுதியில் வழங்கத் தீர்மானித்துள்ளோம். மாணவர் ஆய்வு விருதுக்காக வடபகுதியில் இருந்து 20இற்கும் மேற்பட்ட பாடசாலைகள் பங்குபற்றி இருந்தன.

எதிர்வரும் காலங்களில் மாணவர் ஆய்வுக்கான விருதுகளில் பங்குபற்றும் மாணவர்களின் எண்ணிக்கையை அதிகரிக்க புதிய நடைமுறைகளைப் பின்பற்றவுள்ளோம்.

- இவ்வாறு அவர் மேலும் தெரிவித்தார்.

(ஐ-185)

## சுழிபுரம் பகுதியில் பீரங்கி வேட்டுகளால் பதற்றம்

சுழிபுரம்,ஜன.26

சுழிபுரம் திருவடிநிலைப் பரப்பில் கடற்படையினர் கடந்த ஞாயிற்றுக்கிழமை நண்பகல் வேளையில் நடத்திய பீரங்கி வேட்டுக்களால் அப்பகுதியில் பதற்றம் நிலவியது.

திடீரெனக் கேட்ட இந்த வேட்டுச் சத்தம் சுமார் 10 நிமிடம் வரை நீடித்தது. இதனால், சுழிபுரம் மேற்குப் பகுதியில் உள்ள மக்கள் பய பீதியுடன் காணப்பட்டனர். (ஐ-13-28)

## திருப்பாலத்துவ சபைத் தினம்

குருநகர்,ஜன.26

எதிர்வரும் 29ஆம் திகதி ஞாயிற்றுக்கிழமை கத்தோலிக்க தேவாலயங்களில் திருப்பாலத்துவ சபையின் தினம் கொண்டாடப்படவுள்ளது. அன்றுகாலை 7 மணிக்கு ஊர்காவற்றுறை [illegible] பர் ஆலயத்தில் [illegible] பங்குத்தந்தை அருட்திரு. ஜேம்ஸ் அடிகளார் தலைமையில் திருப்பலி ஒப்புக்கொடுக்கப்படும். (ஐ-51)

விவசாயிகளுக்கு 350 ரூபா விலையில் உரப் பசளை வழங்கும் வைபவம் புத்தூர் கமநல சேவை நிலைய மண்டபத்தில் அண்மையில் நடைபெற்றது. விவசாயி ஒருவருக்கு புத்தூர் கமநலசேவை நிலைய பெரும்பாக உத்தியோகத்தர் சி.சத்தியேந்திரன் உரப் பசளை பெறுவதற்கான பற்றுச்சீட்டினை வழங்குவதைப் படத்தில் காணலாம்.

*(படம்: அச்சுவேலி செய்தியாள...)*



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# இலங்கை நிர்வாகசேவை போட்டிப் பரீட்சை முன்னோடி வினாப்பத்திர விடைகள்

கடந்த 24, 25ஆம் திகதிகளில் உதயனில் இலங்கை நிர்வாகசேவை போட்டிப் பரீட்சைக்குரிய முன்னோடி வினாப் பத்திரங்கள் (பொது உளச்சார்பு, பொது அறிவு, கட்டுரையும் சுருக்கமும்) வெளியாகி இருந்தன. அவற்றுக்குரிய விடைகள் இன்று பிரசுரமாகின்றன.

## பொது அறிவு

| | | | |
|---|---|---|---|
| 1. 3 | 13. 2 | 25. 1 | 37. 4 |
| 2. 4 | 14. 1 | 26. 3 | 38. 4 |
| 3. 3 | 15. 4 | 27. 4 | 39. 3 |
| 4. 4 | 16. 3 | 28. 4 | 40. 4 |
| 5. 1 | 17. 4 | 29. 3 | 41. 4 |
| 6. 3 | 18. 4 | 30. 4 | 42. 4 |
| 7. 2 | 19. 1 | 31. 2 | 43. 1 |
| 8. 3 | 20. 2 | 32. 3 | 44. 1 |
| 9. 2 | 21. 2 | 33. 3 | 45. 1 |
| 10. 1 | 22. 2 | 34. 3 | 46. 1 |
| 11. 1 | 23. 3 | 35. 1 | 47. 2 |
| 12. 2 | 24. 2 | 36. 2 | 48. 2 |

49. 2
50. 2
51. IDACA
52. 1959
53. 1969
54. அநாகரிக தர்மபால
55. மேசன்மூர்
56. றொபேட் பிரவுன்றிக்
57. திருகோணமலை
58. லெஸ்ரர் ஜேம்ஸ்பீரிஸ்
59. ஏரியல் ஷேரோன்
60. ஆப்கானிஸ்தான்
61. சுவீடன்
62. 1980
63. கிரேக்கம்
64. J. R ஜெயவர்தன
65. பிக்காசோ
66. பென்ரகன்
67. 1955
68. தென்கொரியா
69. செங்கடகல
70. இன, மத ரீதியான அடக்குமுறைகள்
71. சட்டரீதியான பிரச்சினைகள் , ஆண்பெண் உறவுப்பிரச்சினை
72. நீண்ட கால அடிப்படையான அபிவிருத்தி
73. பொலிஸ் சேவை ஆணைக்குழு
பொதுச் சேவை ஆணைக்குழு
தேர்தல் ஆணைக்குழு
நீதிச்சேவை ஆணைக்குழு
இலஞ்ச ஆணைக்குழு
74. வறுமை, போர்ச்சூழல்
75. 1989 அல் அமெரிக்க விமானம் நெதர்லாந்தில் லொகர்பி எனும் இடத்திற்கு மேலாக செல்லும் போது வெடித்து சிதறியது இது தொடர்பான வழக்கு விசாரணை.
76. நாடொன்று நேரடியாக இன்னொர் நாட்டின் ஆதிக்கத்திற்கு உள்ளாகாது மறைமுகமாக அரசியல் சமூகபொருளாதார இராணுவ தொழில்நுட்ப ரீதியாக வெளியாதிக்கத்திற்கு உட்டுபவதை இது குறிக்கும்.
77. 10.04.1998 இல் ஸ்ரோமென்ற் என்ற இடத்தில் மேற்கொள்ளப்பட்ட ஒப்பந்தமே ஸ்ரோமென்ற் ஒப்பந்தம் எனப்படும். இது பெரியவெள்ளி உடன்படிக்கை எனவும் அழைக்கப்படும்.
78. உலகின் முக்கிய விடயங்கள் அல்லது சம்பவங்கள் பற்றிய உலகில் வெவ்வேறு பகுதிகளிலிருந்தும் பலரது கருத்துக்களை ஒரே தொலைக்காட்சி முலம் ஒரே நேரத்தில் வழங்குவது.
79. இந்தியா, பாகிஸ்தான், நேபாளம், பங்காளதேசம்.
80. ஆடைத்துறை, பெருந்தோட்டதுறை, உல்லாசபயணத்துறை.
81. உலகமயமாதலின் பின் உலகில் ஏற்பட்டிருக்கும் வறுமையே புதிய வறுமை எனப்படும்.
82. எதிர்கால நோக்கற்றது பரீட்சை நோக்கமானது.
83. மூளை ,வளர்ச்சி பருவம்.
84. தங்காலை, கிக்கடவ, சிங்கராஜவனம்.
85. உலகின் சுற்றாடலில் ஏற்படும் பாதிப்புகளை ஆராய்வதும் கட்டுப்படுத்துவதும்.

## பொது உளச்சார்பு விடைகள்

| | | | | | | | |
|---|---|---|---|---|---|---|---|
| 01. 4 | 26. 1 | 08. 2 | 33. 3 | 15. 2 | 40. $E_1$ | 22. 4 | 47. 3 |
| 02. 1 | 27. 3 | 09. 4 | 34. 1 | 16. 3 | 41. 13 | 23. 5 | 48. ABCD நான்கும் |
| 03. 3 | 28. 2 | 10. 1 | 35. 1 | 17. 2 | 42. 14 | | |
| 04. 2 | 29. 4 | 11. 2 | 36. $A_3$ | 18. 3 | 43. 2 | 24. 2 | 49. 1 |
| 05. 1 | 30. 2 | 12. 2 | 37. $B_1$ | 19. 4 | 44. 5 | 25. 6 | 50. 4 |
| 06. 4 | 31. 3 | 13. 3 | 38. $C_2$ | 20. 3 | 45. 5 | | |
| 07. 3 | 32. 1 | 14. 2 | 39. $D_3$ | 21. 2 | 46. 1 | | |

### கட்டுரையும் சுருக்கமும் விடைகள்

- வினா1இல் தரப்பட்ட கட்டுரைகளுக்கு தேவையான விடயங்களை நீங்களாகவே பெற்றுக் கொள்ளவும்.

### சுருக்கத்துக்கான விடை

- இன்பத்துக்குக் கருவியாய் செல்வத்திற் சிறந்தது கல்வி. அது பொன் முதலாய பொருட் செல்வத்தைப் போலப் பங்காளிகளாலும் பகைவராலும் கவரப்படாத தாகும். அது செல்வத்தைப் போல மன்னரால், நெருப்பால், வெள்ளத்தால் அழியாதது. கொடுத்தாற் குறைவுபடாதது. பொருள் ஒருவரிடம் தங்கி நில்லாத தோடு அவர் உடம்போடு நீங்கிவிடுவது. ஈட்டும்போதும் காக்கும்போதும் துன்பந் தருவது. பலரைப் பகைக்கச் செய்வது. கல்வி கொடுத்தாலும் குறைவுபடாது வளர்ந்து உடம்பு அழிந்தாலும் உயிரோடு கிடந்து, மறு பிறப்புக்களிலும் உதவுவது ; பகைவரையும் நண்பராக்குவது. கல்வியாவது அறநூல், அறிவியல்நூல், தொழில்நூல் ஆகியவற்றைக் கற்றலாம். பொதுக் கல்வி பயின்ற பின் சிறப்புக் கல்வி கற்பது மரபாகும். எண்ணும் எழுத்தும் கணிதமும் இலக்கணமும் எனப்படும் இவற்றைக் கண்ணெனப் பெரியோர் கருதுவர். அவை ஊனக்கண்கள் போலன்றி என்றும் பயன்தரும் ஞானக் கண்களாம். வாழ்நாள் சிறிதாகவும் கல்வி பரந்ததாகவும் இருத்தலால் ஆராய்ந்து, அறம், பொருள், இன்பம், வீடு என்னும் இன்றிய மையாதவற்றைக் கூறும் நூல்களைக் கற்றல் வேண்டும். அவற்றை அடக்கமாக இருந்து பணிந்து பொருள் கொடுத்து நல்லாசிரியனிடம் கற்றவர் உயர்ந்தோராவர்.


# பதவி வெற்றிடம்

HNB ASSURANCE LTD 2006 ஆம் ஆண்டு தனது வியாபார நடவடிக்கைகளை மேம்படுத்தும் முகமாக கீழ்க்காணும் பதவிகளுக்கு விண்ணப்பங்கள் கோரப்படுகின்றன.



**பதவி 1**
காப்புறுதி ஆலோசகர்

**பதவி 2**
விற்பனை அபிவிருத்தி அலுவலர்





தகுதி:- க.பொ.த (சாதாரண தரம்) இல் தமிழ், கணிதம் உட்பட 6 பாடங்களில் சித்தி

மேலதிக தகைமைகளாக தொழில்சார் சான்றிதழ்கள் (S.L.I.I) க.பொ.த உயர் தரத்தில் 3 பாடங்கள் சித்தி, காப்புறுதி தொடர்பான முன் அனுபவம் என்பன கருத்தில் எடுத்துக் கொள்ளப்படும்.

**நன்மைகள்:-**

உங்கள் திறமைக்கு ஏற்ப வரையறையற்ற தரகு அடிப்படையில் வருமானம். அத்துடன் மேலதிக தகைமைக்கேற்ப உடனடியான பதவி உயர்வும் அடிப்படைச் சம்பளமும் வழங்கப்படுவதுடன் ஊக்குவிப்புக் கொடுப்பனவு மற்றும் சுயதொழிலுக்கான கடன்வசதி என்பனவும் வழங்கப்படும்.

உங்கள் விண்ணப்பப்படிவங்களை பூரண சுயவிவரக் கோவையுடன் 03.02.2006 இற்கு முன்னர் பதிவுத் தபாலில் அனுப்பிவைக்கவும். தபால் உறையின் இடது பக்க மேல் மூலையில் விண்ணப்பப் பதவி நிலையைக் குறிப்பிடவும்.

MANAGER ,
HNB ASSURANCE LTD.,
62,64 Stanley Road,
Jaffna. T.P:021 2226016

HNB ASSURANCE
For a brighter future


# ஓராண்டு நினைவஞ்சலி

மலர்வு 18 01 1970

உதிர்வு 06 02 2005



## திருமதி அருள்வாணி ஆனந்தராசா

(வாணி)

திதி: துவாதசி 26.01.2006

ஊரார் கூடி உறவுகள் கூடி
உன் வதனம் கண்டு கண்ணீரில் ஓராண்டு
கரைந்து மறைந்தாலும் எங்கள் விழிகளில்
உன் வதனம் என்றும் நிழலாடுதம்மா!

"வாணி இல்லம்,"
ஊரெழு கிழக்கு,
சுன்னாகம்.

கணவர்,
பிள்ளைகள்,
தாய், சகோதரர்கள்.

(45979)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# கிளிநொச்சி மாவட்ட வயல்களில் பூச்சித்தாக்கம் கட்டுப்பாட்டில்

## இயற்கை கட்டுப்பாட்டு வழிமுறையால் பலன்

பரந்தன்,ஜன.26

கிளிநொச்சி மாவட்ட நெல்வயல்களில் ஏற்பட்டிருந்த கபிலநிறத் தண்டுத் தத்திப் பூச்சியின் தாக்கம் ஓரளவுக்குக் கட்டுப்பாட்டில் கொண்டுவரப்பட்டிருப்பதாகத் தெரிவிக்கப்படுகிறது.

இந்த வகையான நோய்த் தாக்கத்தை இயற்கைமுறையான நடவடிக்கைகளை மேற்கொண்டு, தவிடும் மண்ணெண்ணையும் கலந்து விசிறுவதன் மூலம் - கட்டுப்படுத்தமுடியும் என்று பொருண்மிய மேம்பாட்டு நிறுவனம் சமீபத்தில் அறிவித்திருந்தது. அந்த அறிவுறுத்தல் தொடர்பான விளக்கமான - விவரமான செய்திகள் உதயனிலும் பிரசுரமாகியிருந்தன. இதனைத் தொடர்ந்து விரைந்து நடவடிக்கையில் இறங்கிய விவசாயிகள் இயற்கை வழியிலான தடுப்பு முறைகளைப் பரீட்சித்துப் பார்த்தனர்.

அந்தவழிமுறை பெரும் வெற்றியை அளித்திருப்பதாக விவசாயிகள் தெரிவிக்கின்றனர்.

அத்துடன், கிளிநொச்சி மாவட்ட உதவி விவசாயப் பணிப்பாளர் திருமதி சீ.ஆனந்தராசா இந்த நோய் பாதித்த வயல்களுக்கு நேரில் சென்று விவசாயிகளுக்கு உரிய விழிப்பூட்டல்களை வழங்கிவருகிறார்.

இதன் பயனாக கபிலநிறத் தண்டுத் தத்திப் பூச்சியின் தாக்கம் ஓரளவு கட்டுப்பாட்டில் கொண்டுவரப்பட்டிருப்பதாகக் கூறப்பட்டது.

(த-352)

## விபத்துத்தொடர்பான பயிற்சி வகுப்பு

பரந்தன்,ஜன.26

தமிழீழ சுகாதார சேவையின் ஏற்பாட்டில் இலங்கை செஞ்சிலுவைச் சங்கத்தின் சுகாதார தரிசிப்பாளர்களுக்கு விபத்து தொடர்பான பயிற்சி வழங்கப்பட்டுள்ளது.

விபத்து மற்றும் வீதி விபத்துகளால் ஏற்படும் உடல், உள சமூகத் தாக்கங்கள் தொடர்பாகவும் அவற்றைத் தடுப்பது பற்றிய வழிமுறைகள் பற்றியும் இப்பயிற்சியில் விரிவாக ஆராயப்பட்டது.

கடந்த 18ஆம் திகதி கிளிநொச்சி கருணா நிலையத்தில் இந்தப் பயிற்சி நடத்தப்பட்டது. (த-352)

## துளைப்பான் வண்டின் தாக்கத்தால் தெங்குப் பயிர்கள் பெரும் சேதம்

கிளிநொச்சி, பூநகரி, 4ஆம் கட்டை கிராமத்தில் துளைப்பான் வண்டினால் தெங்குப் பயிர்கள் அழிந்துபோகும் நிலை தோன்றியுள்ளது. இவ்வண்டின் தாக்கத்தினால் 3 வருடத் தென்னைகளின் குருத்துப் பகுதி அரிக்கப்பட்டு குருத்துமுறிந்த நிலையில் காணப்படுகின்றது.

இவ்வண்டின் தாக்கத்தினால் இற்றைவரை சுமார் 30இற்கு மேற்பட்ட சிறிய தென்னங்கன்றுகள் உட்பட ஏராளமான தென்னைமரங்கள் அழிந்துள்ளன. எனவே, உரிய தரப்பினர் இவ்விடயத்தைக் கருத்திற்கொண்டு தெங்குப் பயிர்ச்செய்கையாளர்களின் நலனில் அக்கறைகொண்டு உழைக்கவேண்டுமென்று தெங்குப் பயிர்ச்செய்கையாளர்கள் கோரிக்கை விடுத்துள்ளனர். (த-403)

## உணவகங்களில் பொலித்தீன் பாவனை முற்றாகத் தடை

புளியங்குளம்,ஜன.26

'லஞ்சீற்' மற்றும் பொலித்தீன் வகைகளை உணவு கையாளும் நிலையங்களில் பயன்படுத்த தமிழீழ சுகாதார சேவையினர் முற்றாகத் தடை விதித்துள்ளனர்.

கடந்த 18ஆம் திகதி தமிழீழ சுகாதார சேவைகளின் புளியங்குளத்திலுள்ள மாவட்டப் பணிமனையில் நடைபெற்ற உணவக உரிமையாளருக்கான ஒன்றுகூடலிலேயே இந்தத் தடை அறிவிப்பு விடுக்கப்பட்டது.

வவுனியா மாவட்ட தமிழீழ சுகாதார சேவைகளின் வவுனியா மாவட்டப் பொறுப்பாளர் திருமதி வ.காந்தா தலைமையில் நடைபெற்ற இக்கலந்துரையாடலில் கருத்துரைகளை புளியங்குளம் பிரதேச அரசியல் துறைப் பொறுப்பாளர் அ.திலீப், வவுனியா மாவட்டத் தமிழீழ சுகாதார சேவைகள் இணைப்பாளர் ஆகியோர் வழங்கினர்.

இதில் 30இற்கு மேற்பட்ட உணவக உரிமையாளர்கள் கலந்துகொண்டு பயன்பெற்றமை குறிப்பிடத்தக்கது.

(த-355)



பூநகரிப் பிரதேச செயலர் பிரிவுக்குட்பட்ட ஜெயபுரம் முழங்காவில் பிரதேச மக்களுக்கு கால்நடை வளர்ப்பு தொடர்பான பயிற்சி வகுப்பு ஒன்று நடத்தப்பட்டது. இதில் கால்நடை அபிவிருத்திப் போதனாசிரியர் க.சூரியகுமார் கருத்துரை வழங்குவதையும் பயிற்சி வகுப்பில் கலந்துகொண்ட மக்களையும் படங்களில் காணலாம்.

(படங்கள்: வெள்ளாங்குளம் செய்தியாளர்)

## மாதர் சங்கங்களுக்கு கருத்தூட்டல் நிகழ்வு

வெள்ளாங்குளம்,ஜன.26

கிளிநொச்சி பிரதேச செயலர் பிரிவுக்கு உட்பட்ட ஆனைவிழுந்தான், வன்னேரிக்குளம் பிரதேச மாதர் சங்கங்களுக்கான கருத்தூட்டல் நிகழ்வு கடந்த 9ஆம் திகதி நடைபெற்றது.

இந்த நிகழ்வில் நாச்சிக்குடா காவல்பணிமனைப் பொறுப்பதிகாரி குகநாதன் கலந்துகொண்டு மக்களுக்குக் கருத்துக்களை வழங்கிச் சிறப்பித்தார். (த-415)




## சுதேச மருத்துவ மேம்பாடு குறித்து புளியங்குளத்தில் கலந்துரையாடல்

புளியங்குளம்,ஜன.26

வவுனியா மாவட்டத்தின் சுதேச வைத்திய மேம்பாடு தொடர்பான ஒன்றுகூடல் தமிழீழ சுகாதார சேவைகளின் புளியங்குளம் மாவட்டப் பணிமனையில் கடந்த 21ஆம் திகதி முற்பகல் 10.30 மணிக்கு நடைபெற்றது.

வவுனியா மாவட்டத் தமிழீழ சுகாதார சேவைகள் பொறுப்பாளர் திருமதி வி.காந்தா தலைமையில் நடைபெற்ற இந்நிகழ்வில் வவுனியா மாவட்ட சுதேச வைத்தியர்கள் சங்கத் தலைவர் டாக்டர் ஏ.எஸ்.மகாலிங்கமும் மற்றும் அங்கத்தவர்களும் கலந்துகொண்டனர்.

இக்கலந்துரையாடலில் சுதேச வைத்திய மேம்பாடு தொடர்பான விடயங்கள் ஆராயப்பட்டு பல முடிவுகளும் எடுக்கப்பட்டன. சுதேச வைத்தியம் தொடர்பான விழிப்புணர்வுக் கருத்தரங்குகளை நடத்துவதெனவும் தீர்மானிக்கப்பட்டது. (த-355)

## எரிபொருள் விற்பனை நிலையங்களில் குப்பி விளக்குகளைப் பாவிக்கவேண்டாம்

### தமிழீழ சுகாதாரப் பிரிவினர் அறிவுறுத்து

எரிபொருள் விற்பனை நிலையங்களில் குப்பி விளக்குகள் பாவிப்பதை நிறுத்தவேண்டும் எனத் தமிழீழ சுகாதார சேவையினர் எரிபொருள் விற்பனை நிலைய உரிமையாளர்களுக்கு அறிவுறுத்தியுள்ளனர்.

எரிபொருள் நிலையங்களில் குப்பி விளக்கினைப் பற்ற வைத்துவிட்டு இரவில் உறக்கத்தில் இருக்கும்போது விளக்குகள் தட்டுப்பட்டு பாரிய தீ விபத்துகள் ஏற்படும் அபாயம் உள்ளது.

இத்தகைய விபத்து ஒன்று சமீபத்தில் கிளிநொச்சி நகரப்பகுதியில் இடம்பெற்றிருக்கிறது.

இதனைத் தொடர்ந்தே எரிபொருள் விற்பனை நிலையங்களில் குப்பிவிளக்கு பாவிப்பதைத் தவிர்க்குமாறு சுகாதாரப் பிரிவினர் அறிவித்துள்ளனர்.

(த-352)

## 'கார்ப்' திட்டத்தின்கீழ் பயிற்சி வகுப்பு

பரந்தன்,ஜன.26

'கார்ப்' திட்டத்தின்கீழ் நெத்தலியாற்றுக் கிராமத்தில் சமூகமட்ட அமைப்புக்களுக்கான பயிற்சி வகுப்பு கடந்த வியாழக்கிழமை முற்பகல் 10 மணிக்கு நெத்தலியாற்று சமூக, பொருளாதார அபிவிருத்திச் சங்கத் தலைவர் தலைமையில் இடம்பெற்றது.

இந்த நிகழ்வின் வளவாளர்களாக முகாமைத்துவம், கணக்கு வைப்பு பயிற்சிக்குத் தமிழர் புனர்வாழ்வுக்கழக கிளிநொச்சி மாவட்ட 'கார்ப்' திட்ட இணைப்பாளர் செல்வன் நா.சுதர்சனும் தலைமைத்துவப் பயிற்சிக்கு முல்லைத்தீவு மாவட்ட இணைப்பாளர் யோ.கோபியும் பங்குபற்றினார்கள்.

இதில் 30 வரையான பயனாளிகள் கலந்துகொண்டு பயன்பெற்றனர். (த-352)

## மாங்குளம் பிரதேசத்தில் ஆஸ்பத்திரி திறந்துவைப்பு

முல்லைத்தீவு மாவட்டம் மாங்குளம் பிரதேச வைத்தியசாலை கடந்த 18ஆம் திகதி முற்பகல் 10 மணிக்கு சம்பிரதாயபூர்வமாகத் திறந்துவைக்கப்பட்டது.

முல்லைத்தீவு பிரதி மாகாண சுகாதார சேவைகள் பணிப்பாளர் வைத்தியகலாநிதி ஜெயகுலராஜா தலைமையில் நடைபெற்ற திறப்புவிழா நிகழ்வில், பொதுச்சுடரினை துணுக்காய் வலயப் பிரதிக் கல்விப் பணிப்பாளர் இ.சிவப்பிரகாசம் ஏற்றிவைத்தார். தமிழீழ தேசியக் கொடியை மாங்குளம் பிரதேச அரசியல்துறைப் பொறுப்பாளர் நாகமைந்தன் ஏற்றினார்.

வைத்தியசாலைக்கான பெயர்ப்பலகையினை முல்லைத்தீவு மாவட்ட வைத்திய அதிகாரி வைத்தியகலாநிதி தர்மேந்திரா திரைநீக்கம் செய்துவைத்தார்.

தொடர்ந்து வைத்தியசாலை பிரதான கட்டடத்தினைத் தமிழீழ சுகாதார சேவைகள் பணிப்பாளர் வைத்தியகலாநிதி ஓவியன் நாடாவெட்டித் திறந்துவைத்தார். தாய், சேய் நல சிகிச்சைப் பிரிவை மாங்குளம் பிரதேச திலீபன் மருத்துவமனை வைத்தியர் திருமதி சோபிதா திறந்துவைத்தார்.

வைத்தியர்களுக்கான விடுதியினை ஜேர்மன் செஞ்சிலுவைச் சங்கக் குழுத் தலைவர் கிளவுஸ் திறந்துவைத்தார். மருந்தகப் பிரிவினை சர்வதேச செஞ்சிலுவைச் சங்க சுகாதாரப் பிரதிநிதி திருமதி சூ.சான் ரெயிலர் திறந்துவைத்தார்.

தலைமை உரையினைத் தொடர்ந்து கருத்துரைகளை துணுக்காய் கல்வி வலயப் பிரதிக் கல்விப் பணிப்பாளர், மாங்குளம் பிரதேச அரசியல்துறைப் பொறுப்பாளர், முல்லைத்தீவு மாவட்ட வைத்திய அதிகாரி திலீபன் மருத்துவமனை வைத்தியர் ஆகியோர் வழங்கினார்கள். சிறப்புரையினைத் தமிழீழ சுகாதார சேவைகள் பணிப்பாளர் ஓவியன் நிகழ்த்தினார்.


இந்த வைத்தியசாலை திறப்பு விழாவில் அரச, அரசசார்பற்ற நிறுவனப் பிரதிநிதிகள், முல்லைத்தீவு சுகாதார சேவைப் பணிமனைப் பணியாளர்கள், திலீபன் மருத்துவமனையினர், பாடசாலை மாணவர்கள் பொதுமக்கள் எனப் பெருமளவானோர் கலந்துகொண்டனர். (த-352)

## பயிற்சிப் பாசறை

ஒட்டுசுட்டான்,ஜன.26

லெப்.கேணல் திருவடிப் பயிற்சிப் பாசறையின் 4ஆவது கரையோரக் காவல் படையினருக்கான பயிற்சி கடந்த 5ஆம் திகதி ஆரம்பமானது. பயிற்சி ஆசிரியர் அரவிந்தன் தலைமையில் ஆரம்பமான இந்த நிகழ்வில் தமிழீழத் தேசியக் கொடியினை தமிழீழ கடற்படைத் தளபதி மங்களேஸ் ஏற்றிவைத்தார். லெப். கேணல் திருவடியின் திருவுருவப் படத்திற்கான மலர்மாலையினைப் பயிற்சிப் பாசறையின் முதலாவது அணி பயிற்சிப் போராளி கணேசமூர்த்தி அணிவித்தார்.

(6-341)



தமிழீழ பொருண்மிய மேம்பாட்டு நிறுவனத்தின் ஏற்பாட்டில் கடந்த 16ஆம் திகதி இரணைமடுவில் அமைந்துள்ள பொருண்மிய நடுவப்பணியகத்தில் பனம்பொருள் உற்பத்திக் கண்காட்சி ஒன்று நடத்தப்பட்டது.

பொருண்மியப் பொறுப்பாளர் சி.கரிகாலன் தலைமையுரை வழங்குவதையும் பன்னவேலைப் போட்டியில் வெற்றியீட்டிய ஒருவருக்குத் தமிழீழ அரசியல்துறை துணைப்பொறுப்பாளர் சோ.தங்கன் பரிசு வழங்குவதையும் நிகழ்வில் கலந்துகொண்டவர்களில் ஒரு பகுதியினரையும் படங்களில் காணலாம்.

(படங்கள்: பரந்தன் செய்தியாளர்)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# வாசகர் திருமுகம்

## தரம் - 1 மாணவரை வரவேற்கும் முறை மகிழ்ச்சியும், மனநிறைவும் தருகிறது

அரசாங்கத்தின் புதிய கல்விக் கொள்கையின் அடிப்படையில் தரம் ஒன்று மாண வர்களுக்கான புகுமுகவிழா நிகழ்வு கடந்த 19.01.2006 அன்று யாழ். இந்து மகளிர் ஆரம்ப பாடசாலையில் நடைபெற்றது.

2006ஆம் ஆண்டில் தரம் ஒன்றில் கல்வி கற்பதற்குத் தெரிவுசெய்யப்பட்ட மாணவர் களை பாடசாலையில் கல்வி கற்றுக்கொண்டிருக்கும் மாணவர்கள் வரவேற்கும் நிகழ்வாக இவ்விழா அமைந்திருந்தது. தரம் 2,3,4,5 இல் கல்வி பயிலும் மாணவர்கள், புதிய மாண வர்கள் ஒவ்வொருவருக்கும் ''பூச்செண்டு'' வழங்கி சகோதரவாஞ்சையுடன் அரவ ணைத்து, அழைத்து வந்த காட்சி மிகவும் மகிழ்ச்சிக்குரியதாக அமைந்திருந்தது. புதியவர் களைத் துன்புறுத்துவது என்பதை இலட்சியமாகக் கொண்ட ''பெரியவர்களுக்கு'' சிறுவர்களின் இந்நிகழ்வு நல்ல எடுத்துக் காட்டாகும். சிறுபராயத்தில் விதைக்கும் பழக்கங்கள்தான் பின்னர் விருட்சமாகும்.

பாடசாலையின் அதிபர், ஆசிரியர்கள், பாடசாலை அபிவிருத்திச் சங்கம், பெற்றோர் யாவரும் ஒருங்கிணைந்து செயற்பட்டது கண்டு வியப்புற்றேன். கல்வி வளம் பெருக வேண்டுமானால் இத்தகைய ஒன்றுபட்ட தன்மை அவசியமாகும். பெற்றோரே தாமாக முன்வந்து கல்விச் செயற்பாட்டிற்குத் தேவையானவற்றை எந்த வற்புறுத் தலுமின்றிச் செய்து கொடுத்திருந்தார்கள்.

விழாவில் புதிய மாணவர்கள் தமது திறமையை வெளிக்காட்டுவதற்கு வாய்ப்புக் கொடுக்கப்பட்டது சிறப்பம்சமாகும்.

எத்தனையோ விழாக்களுக்குச் சென்று நிகழ்வுகளைக் கண்ட அடியேன், தரம் 1 மாணவர்களுக்கான புகுமுகவிழா மிகுந்த நிறைவு தந்தது. அனைத்துப் பாடசாலை களிலும் இம்முயற்சி ஆரம்பிக்கப்பட்டிருப்பது நன்மை தரவேண்டும். அனைவரும் ஒன்றுபட்டுச் செயற்பட்டு நம் சிறார்களின் எதிர்காலத்தைச் சுபீட்சமாக்குவோம்.

சொல்லின் செல்வர்
இரா. செல்வவடிவேல்.

## சிகையலங்கரிப்பு நிலையங்களில் 'பிளேட்' திருப்பிப் பயன்படுத்துவதைத் தவிர்க்குக!

இன்று உலகை உலுக்கிக் கொண்டிருக்கும் நோய்களில் எயிட்ஸ் நோய் முன் னிலை வகிக்கின்றது என்பதில் எவருக்கும் ஐயமில்லை. அந்தவகையில் தற்பொழுது யாழ்ப்பாணத்தையும் இந்நோய் தனது ஆதிக்கத்திற்கு உட்படுத்த முயன்றுகொண்டு வருகின்றது. எனவே இந்நோயின் ஆதிக்கத்தைத் தடுப்பது ஒவ்வொருவரினதும் கடமையாகும்.

இதனைத் தடுப்பதற்கான பிரதான வழிமுறை ஒவொருவரும் தனிநபர் ஒழுக் கத்தை பேணுவது என்பது அனைவருக்கும் தெரிந்ததே. ஆனாலும், சொற்ப அல்லது எப்போதாவது பரவும் காரணியாக ஒருவருக்கு ஏற்றபட்ட ஊசியைப் பாவிப்பது, ஒரு வருக்கு சவரம் செய்த பிளேட்டை பலருக்கு சவரம் செய்வது போன்ற காரணிகளைக் குறிப்பிடலாம்.

இதில் இப்பொழுது ஒருவருக்குப் பாவித்த ஊசியை வேறு ஒருவருக்குப் பாவிப்பது இல்லை. இது பாராட்டப்பட வேண்டியது. இரண்டாவதாக ஒருவருக்குச் சவரம் செய்த பிளேட்டால் பலருக்கு சவரம் செய்வது இன்றும் சகல சிகை அலங்கரிப்பு நிலையங் களிலும் நிறுத்தப்படவில்லை. இதன் மூலம் எயிட்ஸ் மட்டுமல்ல தேமல் போன்ற தோல் நோய்களும் ஏற்படக்கூடும். இதன்மூலம் ஒருவர் தேவையில்லாமல் எயிட்ஸ் நோயைப் பெற்று சமுதாயத்தில் இருந்து ஒதுக்கப்படலாம்.

எனவே தற்போது சிகை அலங்கரிப்புச் சங்கம் உள்ளது. அதன் மூலம் ஒருவருக்கு ஒரு பிளேட்டைப் பாவித்து சவரம் செய்ய வேண்டும் என்று ஒரு விதிமுறையை அமுல்படுத்தலாம். ஒருவருக்கு சிகை அலங்கரிப்புச் செய்ய 50/- ரூபா வரை அறவிடப்படுகிறது. ஆனால், ஒரு பிளேட்டின் விலை 3 ரூபா. எனவே ஒருவருக்கு ஒரு பிளேட்டைப் பயன்படுத்துவதால் பெரிதளவில் நட்டம் ஏற்படமாட்டாது. ஆகவே இதனைக் கருத்திலெடுத்து சமுதாய நலனுக்காகச் செயற்பட வேண்டியது இன்றைய காலத்தின் கட்டாயம்.

கல்லூரி [illegible]த்தித்துறை. இ. கார்த்திகேயன்.

## வாகன வரி பெறுவதற்கு ஏன் இத்தனை காலதாமதம்?

நல்லூர் பிரதேச செயலகத்தில் மோட்டார் வாகனங்களுக்கான வரி அனுமதிப் பத்திரம் பெற பொதுமக்களாகிய நாம் சென்றால் வெறுமனே பற்றுச்சீட்டை மட்டும் வழங்கி பத்திரத்தைப் பெற பிறிதொரு நாளில் வரும்படி கூறப்படுகிறது.

இதற்கான காரணத்தை அறிய முற்பட்டபோது கையெழுத்திடும் அதிகாரம் கணக் காளர் வசம் மட்டும் இருப்பதால்தான் இன்று போய் நாளை வா என சொல்லப்படுகி றது. இப்பணிக்கென மேலதிக உத்தியோகத்தர்கள் நியமனம் செய்யப்பட்டிருப்பினும் அவர்களுக்கு அதிகாரம் பகிர்ந்தளிக்கப்படவில்லை. நாட்டிலுள்ள, குடா நாட்டிலுள்ள ஏனைய செயலகங்களில் அன்றைய தினமே வரிப்பத்தரம் வழங்கப்படினும் நல்லூர் செயலகத்தில் மட்டும் இப்படியான நடைமுறை. வரி செலுத்தச் செல்லும் பொது மக்களை ஊக்குவிக்க வேண்டிய அதிகாரிகள் அவர்களை சிரமத்திற்குள்ளாக்குவது அதுவும் இந்த நெருக்கடியான காலகட்டத்தில் ஏற்றுக்கொள்ளக்கூடியதல்ல.

இது விடயத்தில் பிரதேச செயலரும் அரச அதிபரும் நடவடிக்கை எடுக்க வேண் டியது அவர்களின் கடமையல்லவா?

சம்பியன் லேன் கொக்குவில். க.மணிகண்டன்

# காலம் முந்திய பரீட்சைப் பெறுபேற்று பதிவேடுகளை அழித்துவிடத் தீர்மானம்

அச்சுவேலி, ஜன.26

பரீட்சைத் திணைக்களம் 1965ஆம் ஆண் டிற்கு முந்திய பரீட்சைப் பெறுபேற்றுப் பதி வேடுகளைப் பயன்பாட்டிலிருந்து நீக்க வுள்ளது. எனவே, குறிப்பிட்ட காலத்திற்கு முந்திய பெறுபேறுகளைப்பெறவிரும்பு வோர் எதிர்வரும் 31ஆம் திகதிக்கு முன்னர் விண்ணப்பிக்குமாறு திணைக்களம் கேட் டுள்ளது.

ஜி.சீ.ஈ. சாதாரணதரம், ஜி.சீ.ஈ. உயர்தரம் ஆகிய பரீட்சைகளின் பெறுபேற்றுப் பதிவேடு களில் 1965ஆம் ஆண்டுக்கு முந்திய பதி வேடுகளையே பயன்பாட்டிலிருந்து நீக்கி அழிப்பதற்கு பரீட்சைத் திணைக்களம் தீர்மா னித்துள்ளது.

அதற்கமைய குறிப்பிட்ட காலத்துக்கு முந்திய பரீட்சைப் பெறுபேறுகளின் உறுதிப் படுத்தப்பட்ட பிரதியைப்பெற விரும்புபவர் கள் எதிர்வரும் 31ஆம் திகதிக்கு முன்னர் உரிய விண்ணப்பத்துடன் தமது பெறுபேற் றின் பிரதியையும் இணைத்து அனுப்புமாறு பரீட்சைத் திணைக்கள ஆணையாளர் அனுர எதிரிசிங்க அறிவித்துள்ளார்.

(ஐ-11-202)

## அபிராமிப் பட்டர் குருபூசை

சுழிபுரம்,ஜன.26

அபிராமிப் பட்டரின் குருபூசைத் தின விழா எதிர்வரும் ஞாயிற்றுக்கிழமை முற்ப கல் 10 மணிக்கு சுழிபுரம் வழக்கம்பரை அம் மன் ஆலயத்தில் நடைபெறவுள்ளது.

விசேட அபிஷேக பூசைகளுடன் அபி ராமி அந்தாதி முற்றோதலும் இடம்பெறவுள் ளது. (ஐ-13-28)

## புள்ளி விவரவியலாளர் பதவிக்கு ஆள்சேர்ப்பு

யாழ்ப்பாணம்,ஜன.26

புள்ளிவிவரவிய லாளர் பதவிக்கு ஆள் களைச் சேர்த்துக் கொள்வதற்கான போட்டிப் பரீட்சை எதிர்வரும் ஞாயிற் றுக்கிழமை நடை பெறவுள்ளது.

யாழ்.மாவட்ட பரீட்சார்த்திகளின் வசதியைக் கருத் திற்கொண்டு வேம் படி மகளிர் உயர்தர பாடசாலையில்பரீட்சை நடைபெறவுள்ளது.

பரீட்சார்த்திகளுக் கான அனுமதி அட் டைகள் சம்பந்தப் பட்டவர்களுக்கு அனுப்பி வைக்கப் பட்டுள்ளன என்று பிரதிப் பரீட்சைஆணை யாளர் அறிவித் துள்ளார். (ஐ-11)


குளிரூட்டிய நவீன CAR வாடகைக்கு

* திருமணம் (சோடனையுடன்)
* சுற்றுலா
* விசேட வைபவங்கள்

போன்ற அனைத்துத் தேவைகளுக்கும் ஆங்கில இலக்கம் கொண்ட நவீனகார் சாரதியுடன் நியாயமான விலையில் உயர்ந்த சேவையுடன் பெற்றுக் கொள்ளலாம்.



தொடர்பு:
22, சோமசுந்தரம் அவனியூ.
சுண்டுக்குளி, யாழ்ப்பாணம்.

T.P.: 0777 - 903090
0777- 246117
077 - 9172730

(45779)(26-34.45.21)



**தரம் 4 மாணவர்களின்..**

அடைவு மட்டத்தை உயர்த்தும் நோக்குடன் நடத்தப் படும் ஆசிரியர் திரு.வே.அன்பழகன் அவர்களின் விசேட மாதிரிப் பரீட்சைகள் - 2006 முதலாவது பரீட்சை 29.01.2006 ஞாயிறு காலை 9.00 -10.30 மணி வரை. வினாத்தாள்களைப் பெறவிரும்பும் பாடசாலைகள், தனியார் கல்வி நிலையங்கள், பரீட்சை எழுதவிரும்பும் மாணவர்கள் தங்கள் பதிவுகளை புதன், வியாழன், வெள்ளி, சனி ஆகிய தினங்களில் பிற்பகல் 4 - 6 மணிவரை மேற்கொள்ளவும்.

இடம்: - அன்பொளி கல்வியகம்
நீராவியடி, யாழ்ப்பாணம்.
தொலைபேசி : 0773068999

(47982) (15-34)

இயக்குநர்.


## முதலாம் மாத நினைவஞ்சலியும் நன்றி நவிலலும்

அன்னை மடியில் 26 . 10 . 1993

ஆண்டவன் அடியில் 26 . 12 . 2005



### செல்வி பிரியனி சரவணபவான்

(யா/ பருத்தித்துறை மெதடிஸ்த பெண்கள் உயர்தர பாடசாலை)

பிரியமுள்ள பிரியனிக்கு!
உனது பிரிவால் நிலை தடுமாறி நிற்கும் குடும்பத்தினரும்
பற்றான சுற்றமும் நண்பரும் நல்லாசிரியரும்
வற்றாத உந்தன் நினைவுகளில் வாழ்கின்றோம்.
வல்லவனின் பாதங்களைப் பணிந்து பரவுகின்றோம்.

*கடந்த 26.12.2005 அன்று எம்மையெல்லாம் மீளாத்துயரில் விட்டுச்சென்ற எமது மகளது மரணச் செய்தி கேட்டு ஓடோடி வந்து உதவிகள் பல புரிந்தும் ஆறுதல் கூறியும் தந்தி, தொலைபேசி என்பன மூலம் அனுதாபங்களைத் தெரிவித்தோருக்கும் கண்ணீர் அஞ்சலி வெளியிட்டும் மலர்வளையங்கள் வைத்தும் தமது துயரங்களை பகிர்ந்து கொண்ட உள்ளங்களுக்கும் இறுதி மரண ஊர்வலத்தில் பங்குபற்றியோருக்கும் நல்லடக்கத்தினை மேற்கொள்வதற்கு பல வழிகளில் உதவி புரிந்த திக்கம் சனசமூக நிலைய இளைஞர்களுக் கும் நண்பர்களுக்கும் அத்துடன் 31 ஆம் நாள் நினைவுநாள் பிரார்த்தனையிலும் மதியபோசனத்திலும் பங்குபற்றியோருக்கும் மற்றும் உற்றார், உறவினர், நண்பர்கள், அயலவர்கள், நெல்லியடி மத்திய மகாவித்தியாலய பாடசாலை சமூகத்தினர், அதிபர், ஆசிரி யர்கள், வடமராட்சி தனியார் கல்வி நிலைய இயக்குநர், ஆசிரியர்கள், மாணவர்கள் ஆகி யோருக்கும் எமது மனமார்ந்த நன்றிகளைத் தெரிவித்துக்கொள்கின்றோம்.*

''[illegible] வட்டதெனி''
அல்வாய் வடமேற்கு, அல்வாய்.

சரவணபவானும்,
அவரது குடும்பத்தினரும்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

உதயன்
361, கஸ்தூரியார் வீதி, யாழ்ப்பாணம்.
தொலைபேசி, தொலைநகல் – 222 2030, 222 2083, 222 3837.

# ஓர் ஊடகத் தோழனுக்கு விடை கொடுப்போம்!

பத்திரிகை சுதந்திரத்துக்கு எதிராக மீண்டும் ஒரு தடவை துப்பாக்கிகள் கனன்று இருக்கின்றன. கருத்தைக் கருத்தால் வெல்ல முடியாத கோழைகள் பேனாவை சன்னங்களால் அடக்க முற்பட்டிருக்கின்றார்கள்.

ஒரு சுதந்திர ஊடகவியலாளனைக் கொன்றொழிப்பதன் மூலம் உண்மையின் குரலை அடக்கி விட - அடைத்து விட - எத்தனித்திருக்கின்றார்கள்.

மயில்வாகனம் நிமலராஜன், ஐயாத்துரை நடேசன், தர்மரத்தினம் சிவராம் வரிசையில் இப்போது சுப்பிரமணியம் சுகிர்தராஜனும் சேர்க்கப்பட்டிருக்கின்றார்.

இவ்வாறு தனி ஓர் ஊடகவியலாளனின் உயிரை நசுக்குவதன் மூலம் சுதந்திரமாகக் கருத்து வெளியிடும் தமிழ் ஊடகவியல் துறையை அடக்கி விடலாம் எனச் சிலர் கனவு காண்கின்றார்கள்.

அடக்க, அடக்க இன்னும் வீறாக எழுந்து நிற்கும் தமிழர்கள் போல தமிழர்களின் ஊடகத்துறையையும் அழிக்க, அழிக்க இன்னும் வேகத்துடன் எழுந்து நிற்கும் என்ற உண்மை இந்த ஆயுதக் கும்பல்களுக்கு இன்னும் புரியாமல் இருப்பது வியப்புக்குரியது.

'எஸ்.எஸ்.ஆர்' என எல்லோராலும் நேசத்துடன் அழைக்கப்பட்ட சுகிர்தராஜன் உரிமைகளுக்காக குரல் கொடுத்த- பேனா தாங்கிய - ஓர் உண்மைப் போராளி.

இன அடக்குமுறையின் உச்சத்தில் அல்லற்பட்டுக்கொண்டிருக்கும் தமிழீழத் தலைநகரத் தமிழ் மக்களின் அவலத்தை - பேரினவாதத்தின் கொடூரப் போக்கை - சட்டத்தைக் கையிலெடுத்து சண்டாளத்தனம் புரியும் சிங்களப் படைகளின் அடாவடி அட்டகாசங்களை - அவற்றுக்குத் துணை புரியும் ஒட்டுப்படைகளின் இழிசெயல்களை - துணிச்சலாகத் தமது பேனா முனையால் தோலுரித்து அம்பலப்படுத்தி வந்த ஒரு சுயாதீனச் செய்தியாளரின் உயிர், அவரது உத்தம பணிக்காகக் காவுகொள்ளப்பட்டிருக்கின்றது.

தமிழரின் தாயகப் பூமியின் மைய நிலமான திருகோணமலையை சிங்களமயப்படுத்தும் பேரினவாதச் சக்திகளுக்கு இடைஞ்சலாக இருந்தமையால் - தமிழ்த் தேசியம் நிலை நிறுத்தப்படுவதற்காக உழைத்தமைக்காக - இந்தப் பரிசு எஸ்.எஸ்.ஆர். என்ற ஊடகப் போராளிக்கு வழங்கப்பட்டிருக்கின்றது.

தமிழ்ப் பத்திரிகை அலுவலகங்கள் கிரனேட் கொண்டு தாக்கப்படுகின்றன. அவசரகாலச் சட்டத்தின் கீழ் சோதிக்கப்படுகின்றன. பத்திரிகையாளர்கள் - குறிப்பாக தமிழ் ஊடகவியலாளர்கள் - துன்புறுத்தப்படுகின்றனர்; இம்சைப்படுத்தப்படுகின்றனர். முரண்பாட்டுக் கருத்துக்கு உடன்படாத ஊடகவியலாளர்கள் படுகொலை செய்யப்படுகின்றனர். அந்த வரிசையில் ஒரு கொடூரப் படுகொலையாக இந்தச் சம்பவம் அமைந்திருக்கின்றது.

இலங்கை அரச படைகளினதும் சிங்களப் பேரினவாத சக்திகளினதும் ஆக்கிரமிப்பு ஆவேசத்துக்கு உட்பட்டிருக்கும் திருகோணமலை நகர் இன்று அங்கு தமிழ்த் தேசியம் நிலைத்து நின்று நீடிக்குமா என்ற களப் பரீட்சைக்கு உள்ளாகியிருக்கின்றது. தமிழ்த் தேசியத்தைக் காப்பதற்கான எழுச்சி அங்கு கிளம்பத் தொடங்கியுள்ள இந்தச் சமயத்தில் அதை அடியோடு ஒட்ட நறுக்குவதற்கு பேரினவாத ஆக்கிரமிப்பு ஆவேசம் எடுத்து வரும் பயங்கரவாதச் செயல்களில் ஒன்றாக இந்தப் படுகொலை இடம்பெற்றிருக்கின்றது.

துப்பாக்கி முனைகளின் முன்னால் நீதியும், நேர்மையும், உண்மையும் உறங்கிப் போகும் என்றும் அதன் மூலம் அநீதியையும் - ஆக்கிரமிப்பையும் - ஒடுக்குமுறையையும் நிலைநிறுத்தலாம் என்றும் கனவு காணும் பேரினவாதிகளின் செயலாக இந்தப் படுகொலை அரங்கேறியிருக்கிறது.

திருகோணமலையில் ஐந்து அப்பாவித் தமிழ் மாணவர்கள் மிலேச்சத்தனமாக அரச படைகளினால் படுகொலையுண்டபோது செய்தித் தகவல்கள், வைத்திய அறிக்கைகள், வர்ணப் படங்கள் என்ற முழு ஆதாரங்களுடன் முழு உண்மைகளையும் உலகுக்கு முன்னால் 'சுடர் ஒளி' அம்பலப்படுத்தியதால் சீற்றமுற்ற அரச பயங்கரவாதம், 'சுடர் ஒளி'யின் செய்தி மூலங்களை - வேர்களை - அறுத்தெறியும் கைங்கரியத்தை ஆரம்பித்திருக்கின்றன என்ற சமிக்ஞை இந்தப் படுகொலை மூலம் வெளிப்பட்டிருக்கின்றது.

'உதயன்', 'சுடர்ஒளி' பத்திரிகைகள் ஈழத் தமிழர்களின் தேசியத்தை - அவர்களது அரசியல் அபிலாஷைகளை - உண்மைத் திறத்துடன், நேர்மையுடன் பிரதிபலித்து வருபவை. அதைத் தாங்கிக்கொள்ள முடியாத - அப்பத்திரிகைகளின் செயற்பாட்டால் நேரும் விளைவுகளை எதிர்கொள்ளமுடியாமல் - தமிழ்த் தேசியத்திற்கு எதிரான சக்திகள் காலத்துக்குக் காலம் பல்வேறு இடைஞ்சல்களை, துன்புறுத்தல்களை, இடர்களை, மிரட்டல்களை விடுத்து வருகின்றன. தமிழ்த் தேசியம் எழுச்சிபெற்று வரலாற்றுத் திருப்புமுனையை எட்டியிருக்கும் இந்தச் சமயத்தில் - அண்மைக் காலத்தில் இந்த அச்சுறுத்தல் தீவிரமடைந்து வருகின்றன.

பல யுத்தமுனைகளில் - சமர்க்களங்களில் - பேனா என்ற ஆயுதத்துடன் மட்டும் நின்று, தமது வரலாற்றுக் கடமையை ஆற்றிவந்துள்ளன உதயனும் அவனது சகோதர ஊடகமான 'சுடர் ஒளி' போன்றன.

இத்தகைய படுகொலைகள் 'உதயன்', 'சுடர்ஒளி' போன்ற - ஆயுதம் தாங்காமல் உரிமைக்காகக் குரல் எழுப்புகின்ற அமைப்புகளுக்கு பேரடிதான். ஆனால், அதற்காக அவை கலங்கிவிடப்போவதில்லை. செயலிழந்துவிடப்போவதில்லை. மாறாக, இன்னும் வீறுகொண்டு வீச்சாகத் தமது பணியைத் தொடரும்.

உண்மைகளை வெளிக்கொணரும் வேள்வியில் தன்னையே ஆகுதியாக்கிய பேனாப் போராளி எஸ்.எஸ்.ஆரின் வரலாற்றுப் பணிக்கு நாம் செய்யும் கைம்மாறு அதுதான்.

*"தோழனே எஸ்.எஸ்.ஆர்! போய் வா நண்பனே போய் வா! வீழ்ந்த உன் பேனாவை நிமிர்த்தி இன்னும் வீறோடு- வீச்சோடு- உன் பணி தொடரக் காத்திருக்கின்றோம். உன் குருதியில் நனைந்த பேனா இன்னும் மூச்சோடு எழுந்து பெரும் புயலாய்ப் பேசப் போகின்றது. உனக்குக் கிடைத்த இந்த மரணப் பரிசு உன் தோழர்களுக்கும் - ஏனைய பத்திரிகை நண்பர்களுக்கும் - கிடைக்கலாம். ஆனால், யாரும் அதற்காகப் பயந்துவிடப்போவதில்லை - ஓய்ந்துவிடப்போவதில்லை. தளராத துணிச்சலோடு உன்னைப் போல உன் பணி தொடர்வதன் மூலம், உன் உயிரைப் பறித்தவர்களுக்கு நல்ல வரலாற்றுப் பாடம் புகட்டப்படும். அதுதான் பத்திரிகை உலகுக்கு நீ ஆற்றிய பணிக்கு அந்த உலகு உனக்குச் செய்யப் போகும் கைம்மாறு. ஆகவே, போய்வா நண்பனே, திருப்தியுடன் - சாந்தியுடன் - போய் வா நண்பனே!"*



நேற்று கிளிநொச்சி வந்திறங்கிய நோர்வே அமைச்சரும் சமாதானக் குழுவின் தலைவருமான எரிக்சொல்ஹெய்மை அரசியல்துறை துணைப்பொறுப்பாளர் தங்கன், விடுதலைப் புலிகளின் சமாதான செயலகப் பணிப்பாளர் புலித்தேவன் ஆகியோர் வரவேற்று அழைத்து வரும் காட்சி.

# படையினர் மீதான தாக்குதல்களுக்கு விடுதலைப் புலிகள் பொறுப்பல்லர்!

கொழும்பு,ஜன.26

வடக்கு-கிழக்குப் பகுதிகளில் இராணுவத்தினர் மீது நடத்தப்பட்டுவரும் தாக்குதல்களுக்கும் விடுதலைப் புலிகளுக்கும் எந்தவித தொடர்பும் கிடையாது என்று விடுதலைப் புலிகளின் ஊடகப்பிரிவு ஒருங்கிணைப்பாளர் தயா மாஸ்டர் தெரிவித்துள்ளார்.

கொழும்பிலிருந்து வெளியாகும் 'த ஐலண்ட்' நாளிதழுக்கு அளித்த நேர்காணலிலேயே அவர் இதனைத் தெரிவித்தார்.

அமைதிப் பேச்சுகளுக்கு எமது தலைவர் முன்வரவேண்டுமானால் வடக்கு - கிழக்கின் வன்முறைகளை சிறிலங்கா அரசாங்கம் முடிவுக்குக் கொண்டுவர வேண்டும்.

இராணுவத்தினர் மீதான அண்மைய குண்டுவீச்சுத் தாக்குதல்களுக்கு நாம் பொறுப்பல்ல. அரச கட்டுப்பாட்டுப் பகுதிகளில் உள்ள பொதுமக்கள் தற்காப்புக்காகவும் எம்மிடம் பயிற்சி பெற்றுள்ளனர். அவர்கள் இத்தகைய தாக்குதல்களை மேற்கொண்டிருக்கலாம்.

சிறிலங்கா அரசாங்கத்துடனான ஒப்பந்தம் கைச்சாத்திட்ட பின்னரே எமது பொறுப்பில் உள்ள 3 சிறிலங்கா காவல் துறையினரை விடுவிக்க இயலும். 3 சிறிலங்கா காவல்துறையினர் விடுதலையில் எமது நீதிமன்றம்தான் இறுதி முடிவெடுக்கும் -என்றார் தயா மாஸ்டர். (ஐ)

# பிரச்சினைக்கு அரசியல் தீர்வு காணுமாறு பொதுச் சேவைகள் சங்கம் வலியுறுத்து

கொழும்பு,ஜன.26

இலங்கை இனப்பிரச்சினைக்கு அரசியல் வழித் தீர்வுகாணவேண்டும் என்று ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ஷவை இலங்கை பொதுச் சேவைகள் சங்கம் வலியுறுத்தியுள்ளது.

இது தொடர்பாக மஹிந்தவுக்கு அந்த அமைப்பு அனுப்பியுள்ள கடிதத்தில் தெரிவிக்கப்பட்டுள்ளதாவது:-

அமைதி முயற்சிகளைச் சீர்குலைக்கும் வகையில் சில அரசியல் கட்சிகள் ஆத்திரமூட்டுகின்ற அறிக்கைகளை வெளியிடுவது வருத்தம் அளிக்கிறது.

தமிழ் பேசும் மக்களின் பிரச்சினைகளுக்கு அரசியல் வழியான தீர்வு உருவாக்கப்படவேண்டும்.

வடக்கு - கிழக்கின் நிலைமைகள் நாட்டின் ஏனைய பகுதிகளிலும் குறிப்பாக தோட்டப் பகுதிகளில் கடும் விளைவுகளை உருவாக்கி வருகிறது.

நிழல் யுத்தமாக மாறியிருக்கும் வடக்கு - கிழக்குச் சூழலில் தென்னிலங்கை கட்சிகளின் இணக்கப்பாட்டுக்காக மஹிந்த ராஜபக்ஷ மேற்கொண்டுள்ள நடவடிக்கையை நாம் பாராட்டுகின்றோம்.

அண்மைக்காலத்தில் மலையகத்தில் மேற்கொள்ளப்பட்டிருக்கும் தேடுதல் நடவடிக்கைகள் நீடிக்கும் நிலையில் மலையக இளைஞர்களும் வன்முறைப் பாதைக்குச் செல்லும் நிலை ஏற்பட்டுவிடும்.

வடக்கு - கிழக்கில் சிறிலங்கா அரசாங்கம் மேற்கொண்ட அதே தவறுகளை நாட்டின் இதர பகுதிகளிலும் மேற்கொள்வேண்டாம் - இவ்வாறு அந்தக் கடிதத்தில் தெரிவிக்கப்பட்டுள்ளது. (ஐ)

**உதயவாக்கு**

அறிவாளியானவன் தனக்கு நியாயமாகக் கிடைப்பதைத் தவிர அதற்கு மேல் ஆசைகொள்ளான், மிதமாக செலவு செய்த உற்சாகத்துடன் பகிர்ந்தளித்து திருப்தியாக வாழ்வான்.

-ஓர் அறிஞர்.

# புலிகளுடன் நேரடியாகப் பேச பௌத்த பிக்குகள் விருப்பம்

கொழும்பு,ஜன.26

இலங்கையின் தற்போதைய சூழ்நிலைகள் தொடர்பாக தமிழீழ விடுதலைப் புலிகளுடன் சந்திப்புகளை மேற்கொள்ள பௌத்த பிக்குகள் விருப்பம் தெரிவித்துள்ளனர்.

கொழும்பில் தற்போதைய அரசியல் நிலைமைகள் தொடர்பாக பல்வேறு மதத்தலைவர்களின் சந்திப்பு செவ்வாய்க்கிழமை நடைபெற்றது.

இச்சந்திப்பின் முடிவில் ஊடகவியலாளர்களிடம் பேசிய கோட்டை நாக விகாரையின் மதுலவவெ சோபித தேரர் - சந்தர்ப்பவாத அரசியலை நடத்துவதற்கான காலம் இது அல்ல. அனைத்து தென் னிலங்கை அரசியல் கட்சிகளும் ஓரணியில் திரள வேண்டிய அவசியம் ஏற்பட்டுள்ளது - என்றார்.

அமைதி முயற்சிகள் வெற்றி பெற வேண்டும் என்ற ஒரே இலக்குடன் செயற்பட வேண்டியகாலம் இது என்றும் அவர் வலியுறுத்தினார்.

கத்தோலிக்க ஆயர் ஒஸ்வல்ட் கோமிஸ் கூறுகையில் -

தமிழ் ஆயர்களூடாக விடுதலைப் புலிகளை பேச்சு மேசைக்கு அழைக்கும் முயற்சிகள் மேற் கொள்ளப்பட்டுள்ளது - என்றார்.

பெலன்வில ரஜ மகா விகாரையின் பெலன்வில விமலரட்ண தேரர் கூறுகையில் விடுதலைப் புலிகளுடன் நேரடியாக இது தொடர்பில் சந்தித்துப் பேசினால் நாம் மகிழ்ச்சியடைவோம் என்று கூறினார். (ஐ)

**நாளை**

தை 14
வெள்ளிக்கிழமை
27.01.2006
திதி: திரயோதசி
பின்னிரவு: 1.10 வரை
நட்சத்திரம் : மூலம்
பிற்பகல் : 2.05 வரை
பிரதோஷ விரதம்
சுபநேரம்: 06.38 - 08.06
ராகுகாலம்: 11.06 - 12.36
(யாவும் பழைய நேரப்படி)

# குருதிக் கொடையாளர்கள் அதிகரிப்பு இங்கிருந்து வன்னிக்கும் இரத்தம்!

யாழ்ப்பாணம்,ஜன.26

யாழ்.ஆஸ்பத்திரியின் இரத்த வங்கிப் பிரிவில் இருந்து மாதம் ஒன்றுக்கு தற்போது 25 பைந்து இரத்தம் வன்னிப் பகுதி ஆஸ்பத்திரிக்கு அனுப்பப்பட்டு வருகிறது.

தன்னார்வ குருதிக் கொடையாளர்களாலேயே இத்தகைய சேவையினைத் திறம்பட செய்யமுடிகிறது - என்கிறார் இரத்த வங்கிப் பிரிவின் பொறுப்பதிகாரி டாக்டர் எஸ்.சிவசங்கர்.

இது தொடர்பாக அவர் மேலும் தெரிவித்ததாவது:-

அண்மைக் காலமாக தன்னார்வக் குருதிக் கொடையாளர்கள் பலர் தாமாக முன்வந்து குருதியினை வழங்கி வருகின்றனர்.

இவர்களில் அனேகமானோர் தவணை அடிப்படையில் தொடர்ச்சியாக குருதியினை வழங்கி வருகின்றனர்.

இத்தகையோரின் உதவியினால் இரத்த வங்கியில் இருந்து கிளிநொச்சி ஆஸ்பத்திரிக்கு மாதம் ஒன்றுக்கு 25 பைந்து இரத்தம் அனுப்பப்படுகிறது. அத்துடன், யாழ்.ஆஸ்பத்திரியில் சிகிச்சைக்குட்படுத்தப்படுவோருக்கும் அவர்களின் உறவினர்களிடமிருந்து இரத்தம் பெறுவதை நிறுத்தக்கூடியதாக உள்ளது.

(12ஆம் பக்கம் பார்க்க)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# இந்தியா - பாக். கிரிக்கெட் ஆட்டம் 'சிக்ஸரில்' சாதனை படைத்தது!

இந்தியா-பாகிஸ்தான் அணிகளுக்கிடையிலான இரண்டாவது டெஸ்ட் ஆட்டத்தில் இரு அணிகளிலும் இணைந்து 'சிக்ஸர்'கள் அடித்தும் ஓட்டங்களைக் குவித்தும் சாதனைகளைப் புரிந்துள்ளன.

இந்த ஆட்டத்தில் 27 'சிக்ஸர்'கள் அடிக்கப்பட்டதுடன் இரு இன்னிங்ஸிலும் சேர்த்து மொத்தமாக 1702 ஓட்டங்களும் குவிக்கப்பட்டன. இது எந்தவொரு டெஸ்ட் ஆட்டத்திலும் குவிக்கப்பட்ட மொத்த ஓட்ட எண்ணிக்கை வரிசையில் 7ஆவது இடத்திலுள்ள சாதனையாகும்.

மூன்று டெஸ்ட் ஆட்டங்களைக் கொண்ட இந்தத் தொடரில், லாகூரில் நடைபெற்ற ஆட்டம் மழையால் பாதிக்கப்பட வெற்றிதோல்வியின்றி முடிவடைந்தது. பைசலாபாத்தில் நடைபெற்ற இந்த இரண்டாவது டெஸ்ட் ஆட்டமும் அதே நிலையில் முடிந்துள்ளது.

துடுப்பாளர்களுக்கே பெரிதும் சாதகமாக அமைந்திருந்த பைசலாபாத் மைதானத்திலும் இருதரப்பு வீரர்களும் விளாசி சாதனைகளை நிலைநாட்டினர். இறுதி நாளான நேற்று 6 ஓவர்கள் வீசப்படவேண்டியிருந்த நிலையில் ஆட்டம் நிறுத்தப்பட்டது. அப்போது இந்திய அணி தனது இரண்டாவது இன்னிங்ஸில் விக்கெட் இழப்பின்றி 21 ஓட்டங்களைப் பெற்றிருந்தது.

முன்னதாக, நான்காம் நாள் ஆட்டநேர முடிவில் 152 ஓட்டங்களை ஒரு விக்கெட் இழப்புக்கு பெற்றிருந்த பாகிஸ்தான் அணி நேற்றுத் தொடர்ந்தும் துடுப்பெடுத்தாடியது.

தேநீர் இடைவேளைவரை இந்தியப் பந்து வீச்சாளர்களால் பாகிஸ்தான் விக்கெட் காப்பாளர் கம்ரன் அக்மலின் (78) விக்கெட்டைத் தவிர வேறு எந்தவிக்கெட்டையும் வீழ்த்தமுடியாமற்போனது.

முதலாவது விக்கெட்டுக்காக கம்ரன் அக்மல் - யுனிஸ்கான் ஜோடி 129 ஓட்டங்களைச் சேர்த்தது. பொறுமையாக ஆடிய யுனிஸ்கான் சதம் அடித்தார். ஆறே ஓட்டங்களால் அவர் தனது இரட்டைச் சதத்தை தவறவிட்டார். இந்தத் தொடரில் அவர் இவ்வாறு வாய்ப்பைத் தவறவிடுவது இது இரண்டாவது தடவை. லாகூர் டெஸ்டில் 199 ஓட்டங்களில் அவர் ஆட்டமிழந்தார்.

இந்தியாவிற்கு எதிராகக் கடைசியாக ஆடிய நான்கு ஆட்டங்களிலும் அவர் நான்கு சதங்களைப் பெற்றுள்ளார். இவ்வாறு ஓர் அணிக்கு எதிராகத் தொடர்ந்து சதம் குவிப்பதில் இதற்கு முன்னர் டொன் பிரட்மன் மட்டுமே சாதனை நிகழ்த்தியுள்ளார். அவர் 1936 முதல் 1938 வரையான காலப்பகுதியில் இங்கிலாந்துக்கு எதிராக 6 சதங்களைப் பெற்றிருந்தார்.

பைசலாபாத் டெஸ்ட் ஆட்டத்தில் இரண்டு அணிகளும் இணைந்து டெஸ்ட் ஆட்டம் ஒன்றில் கூடுதலான சிக்ஸர்கள் அடிக்கப்பட்ட சாதனையை ஏற்படுத்தின. மொத்தம் 27 சிக்ஸர்கள் விளாசப்பட்டுள்ளன. பாகிஸ்தான் அணி தனது முதல் இன்னிங்ஸில் 11 சிக்ஸர்களை வெளுத்தது. பதிலுக்கு இந்திய அணி 9 சிக்ஸர்களை விளாசியது.

இரண்டாவது இன்னிங்ஸில் பாகிஸ்தான் அணியின் யூசுப் 4 சிக்ஸர்களை விளாசினார். அது அடங்கலாக அந்த அணி 7 சிக்ஸர்களை அந்த இன்னிங்ஸில் விளாசியது. ஆட்ட நாயகனாக ஆர்.பி.சிங் தெரிவுசெய்யப்பட்டார்.

இதற்கு முன்னர் டெஸ்ட் ஆட்டம் ஒன்றில் ஆகக் கூடுதலாக 23 சிக்ஸர்களே விளாசப்பட்டிருந்தன. இங்கிலாந்துக்கும் நியூஸிலாந்துக்கும் இடையில் நியூஸிலாந்தின் கிறிஸ்சேர்ச்சில் நடைபெற்ற ஆட்டத்தில் இந்தச் சாதனை புரியப்பட்டது. (ம)

# கால்நடைகளை வளர்ப்போருக்கு வேண்டுகோள்

குருநகர்,ஜன.26

ஊர்காவற்றுறைப் பகுதியில் கால் நடைகளை வளர்ப்போர் அவற்றைத் தத்தமது வீடுகள் மற்றும் வளவுகளில் கட்டி வளர்க்குமாறு ஊர்காவற்றுறை பிரதேசப் பொதுப் பதிகாரி இ.தவலிங்கம் துண்டுப் பிரசுரம் மூலம் பொதுமக்களைக் கோரியுள்ளார்.

ஊர்காவற்றுறைப் பட்டண எல்லைக்குட்பட்ட பிரதான சந்தையில் கால் நடைகளால் சுகாதாரச் சீர்கேடு ஏற்படுவதாகவும்- மரக்கறிச் சந்தைக்குள் புகுந்து மரக்கறிகளை உணவாக்குவதாகவும்-

சந்தை வியாபாரிகள்,மற்றும் பொது மக்கள் முறையிட்டுள்ளனர். இதனைத் தொடர்ந்தே அதிகாரி இந்த வேண்டு கோளை விடுத்துள்ளார். (ஒ-51)

## மரண அறிவித்தல்கள்

### வல்லிபுரம் திருச்செல்வம்

வசாவிளானைப்பிறப்பிடமாகவும் மீசாலை வடக்கு,வேம்பிராய் கலட்டிப் பிள்ளையார் கோயிலடியில் வசித்து வந்தவருமான வல்லிபுரம் திருச்செல்வம் 24.01.2006 செவ்வாய்க்கிழமை அகாலமரணமடைந்தார்.

அன்னார் பிரபல சுருட்டு புகையிலை வியாபாரியான நா.கந்தசாமி, வேல்நாயகம்(கனடா),காலஞ்சென்றவர்களான நடராசா, சுப்பிரமணியம் ஆகியோரின் பெறாமகனும் தம்பிராசா-தவமணி தம்பதிகளின் முறை மருமகனும் ஆவார்.

அன்னாரின் இறுதிக் கிரியைகள் இன்று(26.01.2006) வியாழக்கிழமை பி.ப 1 மணியளவில் அவரின் இல்லத்தில் நடை பெற்று, பூதவுடல் வேம்பிராய் இந்து மயானத்தில் தகனம் செய்யப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார்,உறவினர்,நண்பர்கள் அனைவரும் ஏற்றுக் கொள்ளவும்.

*கலட்டிப்பிள்ளையார் கோயிலடி,*
*வேம்பிராய்,*
*மீசாலை வடக்கு.*
(57059)
(54-12-17)
தகவல்:
நா.கந்தசாமி

### திருமதி சின்னராசா சரஸ்வதி



நாச்சிமார் கோயிலடி, தலையாழியைப் பிறப்பிடமாகவும் வசிப்பிடமாகவும் கொண்ட திருமதி சின்னராசா சரஸ்வதி நேற்று (25.01.2006) புதன்கிழமை இறைபதமடைந்தார்.

அன்னார் காலஞ்சென்ற சின்னையா -பொன்னம்மா தம்பதியரின் சிரேஷ்ட புதல்வியும் காலஞ்சென்ற தம்பிப்பிள்ளை-மாணிக்கம் தம்பதியரின் அன்பு மருமகளும் காலஞ்சென்ற தம்பிப்பிள்ளை சின்னராசா அவர்களின் பாசமிகு மனைவியும் காலஞ்சென்ற கணேஸ், காலஞ்சென்ற கனகசபாபதி, மகேஸ்வரி, மாசிலாமணி (U.K.), புவனேஸ்வரி (கனடா) ஆகியோரின் அன்புச் சகோதரியும் காலஞ்சென்ற நடராசா, காலஞ்சென்ற கணேஸ், காலஞ்சென்ற நாகரத்தினம், பராசக்தி, காலஞ்சென்ற சண்முகநாதன் ஆகியோரின் பாசமிகு மைத்துனியும் மகேசன், காலஞ்சென்ற கமலநாதன், கமலாதேவி (இந்தியா) விஜயலட்சுமி, சத்தியமூர்த்தி (U.K.),சண்முகானந்தன் சத்தியசீலன், காலஞ்சென்ற குமரதாஸ், சத்தியலட்சுமி ஆகியோரின் பாசமிகு தாயும் ஜெகதீஸ்வரி, காந்தகுமார், சிவபாதசுந்தரம், அன்னபூரணி, கலையரசி, சசிகலா ஆகியோரின் பாசமிகு மாமியாரும் ஜெகன், குகன், ஜெயந்தன், ஜெனுசா, சிந்துஜன், Dr. பிரகலாதன் பிருந்தாபன், மீராஜினி, திவாகினி, சுபாஜினி, பிரசாந், சாருஜா காலஞ்சென்ற கம்சிகா, அபிநயா, நிருசிகா, மிதுஷா, பிருந்திகா, அர்பிந்தா, ஆரபிகா, ஆர்த்திகன் ஆகியோரின் அருமைப் பேர்த்தியுமாவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் நாளை (27.01.2006) வெள்ளிக்கிழமை அவரின் இல்லத்தில் நடைபெற்று, பிற்பகல் 3 மணிக்கு பூதவுடல் தகனக்கிரியைகளுக்காக கோம்பையன் மணல் இந்து மயானத்துக்கு எடுத்துச்செல்லப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

**37/8, இராமநாதன் வீதி,**
**தலையாழி.**
**யாழ்ப்பாணம்.**
(57067)
(54-12-17)
தகவல்:
குடும்பத்தினர்.
(ராஜா கிறீம் கவுஸ்-யாழ்.)

## கண்ணீர்க் காணிக்கை

எமது கல்லூரியின் கணித ஆசிரியர் போ.உல்லாசன் அவர்களின் தாய்

**திருமதி அர்த்தநாரீஸ்வரி போஜன்**

சகோதரிகள்

**திருமதி ரேணுகா தியாகேஸ்வரன், செல்வி சண்முகா போஜன்**

ஆகியோர் 16.01.2006 அன்று அகாலமரணமான செய்தியைக் கேள்வியுற்று அதிர்ச்சியடைந்தோம்.அன்னார்களின் பிரிவால் துயருறும் குடும்பத்தினருக்கு எமது ஆழ்ந்த அனுதாபங்களைத் தெரிவிப்பதோடு, அவர்களின் ஆத்மசாந்தியடையப் பிரார்த்திக்கின்றோம்.

**யாழ்ப்பாணம் மத்திய கல்லூரி. ஆசிரிய வட்டம்.**
(57058)
(18-16-...)


நாதன்ஸ் யாழ்ப்பாணம்
பொங்கல் வெளியீடு
அல்டிமேட் அஜித், லைலா
மற்றும் பலர் நடித்த
பரமசிவன்
காட்சி நேரம்:
9.00, 12.30, 3.30



மனோகரா யாழ்ப்பாணம்
அதிரடி பொங்கல் வெளியீடு
இந்தியாவிலும் இலங்கையிலும்
ஒரேதின வெளியீடு
(Dts நவீன ஒலியமைப்புடன்)
ஆதி



இளைய தளபதி விஜய், த்ரிஷா மற்றும் பலர் நடிப்பில்
(வருகிறான் வரிப்புலி நாதியாய்)
தயாரிப்பு : S.A. சந்திரசேகர்
இசை : வித்தியாசாகர்
இயக்கம் : ரமணா
தினசரி:
பு.நே.
10.30, 1.30, 4.30, 7.30

ராஜா யாழ்ப்பாணம்
சிம்பு, ஜோதிகா,பிரகாஷ்ராஜ் நடித்த
சரவணா



இயக்கம்: K.S.ரவிக்குமார்
ரிக்கற் முற்பதிவு செய்து
கொள்ளலாம்.
காட்சிநேரம்:
பு.நே. 10.30, 2.15 மட்டும்

நாகம்ஸ் சுன்னாகம்
சூர்யா, திரிஷா,
வடிவேல் நடித்த
ஆறு



தினசரி:
புதியநேரம் 11.00, 3.00


## மரண அறிவித்தல்கள்

### சந்திரகாயன் விஜயதர்சன் (கோபி)

(உரிமையாளர் - கண்ணன் களஞ்சியம், மீசாலை)



கச்சாய் வீதி, சாவகச்சேரியைப் பிறப்பிடமாகவும் வசிப்பிடமாகவும் கொண்ட சந்திரகாயன் விஜயதர்சன் 23.01.2006 திங்கட்கிழமை அகாலமரணமானார்.

அன்னார் சந்திரகாயன் - சிவயோகம் தம்பதியரின் அன்பு மகனும் விஜயகாந்தன் (கண்ணன் களஞ்சியம், மீசாலை), விஜயரூபன் (கண்ணன் களஞ்சியம், மீசாலை), விதுரா (மாணவி, க.பொ.த. (உ/த) 2004 சாவகச்சேரி இந்துக்கல்லூரி) ஆகியோரின் அன்புச் சகோதரனும் நர்மதா(பிரதேச செயலகம்- சாவகச்சேரி), சுஜந்தினி (கனடா) ஆகியோரின் அன்பு மைத்துனரும் தஷாங்கியின் பாசமிகு சிறிய தந்தையும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் 24.01.2006 செவ்வாய்க்கிழமை அவரின் இல்லத்தில் நடைபெற்று, பூதவுடல் சாவகச்சேரி கண்ணாடிப் பிட்டி இந்துமயானத்தில் தகனஞ்செய்யப்பட்டது.

இந்த அறிவித்தலை உற்றார்,உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

**'நல்லகம்'**
**கச்சாய் வீதி,**
**சாவகச்சேரி.**
(57057)
(18-16-45)
தகவல்:
பே.சந்திரகாயன் (தந்தை),
ச.விஜயகாந்தன்(கண்ணன்),
ச.விஜயரூபன் (திருமால்)
(சகோதரர்கள்).

### கந்தையா மகேஸ்வரன் (சங்கரத்தை)

யாழ்ப்பாணம், சங்கரத்தை, வட்டுக்கோட்டையைப் பிறப்பிடமாகவும் தெஹிவளை, விஜயசேகர வீதி, இல.25/3 ஐ வசிப்பிடமாகவும் கொண்ட கந்தையா மகேஸ்வரன் அவர்கள் 24.01.2006 செவ்வாய்க்கிழமை காலமானார்.

அன்னார் காலஞ்சென்றவர்களான கந்தையா - சிவபாக்கியம் தம்பதியரின் மூத்த புதல்வனும் காலஞ்சென்றவர்களான தம்பிசா - சொர்ணலட்சுமி தம்பதியரின் மூத்த மருமகனும் செல்வமலரின் அன்புக் கணவரும் மயூரதன் (Engineer singapore), குகநேசன்(Asbestos cement industries limited ratmalana) ஆகியோரின் அன்புத் தந்தையும் குமாரசிங்கம், சந்தானலட்சுமி, தர்மலிங்கம் ஆகியோரின் அன்புச் சகோதரரும் கணேசராசா, செல்வராசா, பத்மாவதி, நமநாதன்,சற்குநாதன், புனிதவதி, தணிகாசலம் ஆகியோரின் அன்பு மைத்துனரும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் அவரது இல்லத்தில் இன்று (26.01.2006)வியாழக்கிழமை காலை 8 மணியளவில் நடைபெற்று, பூதவுடல் தகனக்கிரியைக்களுக்காக கல்கிசை இந்து மயானத்துக்கு எடுத்துச்செல்லப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

25/3, விஜயசேகர வீதி,
தெஹிவளை.
தொ.பே.: 0114208526,
0777 879742
(சி-47520)
(18-16-45)
தகவல்:
மனைவி,
பிள்ளைகள்.

### திருமதி காளிராசா நாகம்மா

மீசாலை வடக்கு, கொடிகாமத்தைப் பிறப்பிடமாகவும் வசிப்பிடமாகவும் கொண்ட திருமதி காளிராசா நாகம்மா நேற்று (25.01.2006) புதன்கிழமை காலமாகிவிட்டார்.

அன்னார் காலஞ்சென்ற சின்னத்தம்பி காளிராசாவின் அன்பு மனைவியும் மல்லிகாதேவி (ஓய்வுபெற்ற ஆசிரியை, வீரசிங்கம் ம.வி.), மார்க்கண்டு (சுதந்திரபுரம்), செ. சவுந்தரம் (இந்தியா), மகேந்திரன் (கனடா), காலஞ்சென்ற பூபாலசிங்கம், தவமணிதேவி (மீசாலை), நவரத்தினராசா (ஆஸ்திரேலியா), சறோஜினிதேவி (ஆசிரியை, விவேகானந்தாக் கல்லூரி கொழும்பு), மங்கையற்கரசி (ஆஸ்திரேலியா), காலஞ்சென்ற சாந்தகுமாரி சிவனேசராசா (கனடா) செல்வமலர் (ஆஸ்திரேலியா), மகேஸ்வரி (கனடா) ஆகியோரின் பாசமிகு தாயாரும் தியாகராசா (ஓய்வுபெற்ற அதிபர், மீசாலை கமலாம்பிகை வித்தியாலயம்) மா. பவளம் (சுதந்திரபுரம்), செல்வராசா (ஜேர்மனி), பிரபா (கனடா), நடராச பிள்ளை (மீசாலை), செல்வா (ஆஸ்திரேலியா), சத்தியதேவன் (ஆசிரியர்-கொழும்பு), திருமதி கைலா (கனடா), வேலாயுத பிள்ளை (ஆஸ்திரேலியா), சூரியமூர்த்தி (கனடா) ஆகியோரின் அன்பு மாமியாரும் ஆவார் .

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று (26.01.2006) வியாழக்கிழமை மீசாலை வடக்கிலுள்ள அவரது இல்லத்தில் நடைபெற்று, பூதவுடல் பி.ப. 2 மணிக்கு வேம்பிராய் இந்து மயானத்துக்கு தகனக்கிரியைக்காக எடுத்துச் செல்லப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

**மீசாலை வடக்கு,**
**கொடிகாமம்.**
(சி-47522)
(54-12-17)
தகவல்:
மக்கள், மருமக்கள்.

### ஐயாத்துரை சரஸ்வதி

கடவைப்புலம், சுன்னாகத்தைப் பிறப்பிடமாகவும் வசிப்பிடமாகவும் கொண்ட ஐயாத்துரை சரஸ்வதி நேற்று (25.01.2006) புதன்கிழமை காலமாகிவிட்டார்.

அன்னார் காலஞ்சென்ற ஓய்வுபெற்ற புகையிரத நிலைய இலாகாவாகிய ஐயாத்துரையின் அன்பு மனைவியும் ஓய்வு பெற்ற இலங்கை மின்சாரசபை உத்தியோகத்தரும் மயிலணி ஸ்ரீ முத்துமாரி அம்மன் (வடலி அம்மன்) ஆலயத் தலைவருமாகிய சிவலிங்கத்தின் பாசமிகு தாயாரும் அற்புதமலரின் அன்பு மாமியாரும் பிறேம்காந்தன், ஜக்கி (லண்டன்), டாக்டர் ஆதவன், சிவசக்தி (கொழும்பு), சிவச்செல்வி, வசந்தன் (சுன்னாகம்), சிவகுமார் (வலி.தெற்கு பிரதேச செயலகம்), சிவகௌரி (வலி. வடக்கு பிரதேச சபை), சிவகாந்தினி (ஆசிரியை, பண்டத்தரிப்பு) ஆகியோரின் பாசமிகு பேர்த்தியும் சிவரூபி, பௌர்ணமி, செங்கதிர், வாஹினி, கர்ணிகா, கர்சிகா ஆகியோரின் பூட்டியுமாவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று (26.01.2006) வியாழக்கிழமை முற்பகல் 11 மணிக்கு அவரது இல்லத்தில் நடைபெற்று, பூதவுடல் தகனக் கிரியைகளுக்காக கொத்தியாலடி இந்து மயானத்திற்கு எடுத்துச் செல்லப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

**கடவைப்புலம்,**
**சுன்னாகம்.**
(சி-47521)
(54-12-17)
தகவல்:
ஐ.சிவலிங்கம் (மகன்).

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# கொக்குவிலில் இருவேறு இடங்களில் இளைஞர்கள் இருவர் சுட்டுக்கொலை!



யோகலிங்கம் செந்தீபன்

யாழ்ப்பாணம்,ஜன.26

கொக்குவில் பகுதியில் இருவேறு இடங்களில் இளைஞர்கள் இருவர் நேற்று மோட்டார் சைக்கிளில் வந்த இனந் தெரியாத நபர்களால் சுட்டுக்கொல்லப்பட்டனர்.

நேற்றுமுற்பகல் 11 மணியளவில் சிறிதுநேர இடைவெளியில் அடுத்தடுத்து இந்த சூட்டுச் சம்பவங்கள் இடம் பெற்றன. இருவரும் சம்பவ இடத்திலேயே உயிரிழந்துள்ளனர்.

கொக்குவில் பொற்பதி வீதியில் 'தாயகம்' சிறுவர் காப்பகத்துக்கு முன்பாக இடம்பெற்ற முதல் சம்பவத்தில் துவிச் சக்கரவண்டியில் சென்றுகொண்டிருந்த மத்தாவோடை ஈவினை புன்னாலைக்கட்டுவனைச் சேர்ந்த அமிர்தநாதன் சிறிகாந்தன் (வயது 27) என்பவர் சுட்டுக்கொல்லப்பட்டார்.

இவரது சடலத்தில் காணப்பட்ட பணப் பையினுள் (பேர்ஸ்) 2ஆயிரத்து 450 ரூபா பணமும் சில கடிதங்களும் காணப்பட்டன. கடிதங்களில் ஒன்று யுவதி ஒருவரது பெயரில் காணப்பட்டது. பாதிக்கப்பட்ட யுவதி ஒருத்தி தனது நண்பிக்கு எழுதிய கடிதமும் காணப்பட்டது.

கொக்குவில், கோணாவளை வீதியில் இடம்பெற்ற அடுத்த சம்பவத்தில், வீதியால் மகளிர் பாவிக்கும் சைக்கிள் ஒன்றில் சென்றுகொண்டிருந்த யோகலிங்கம் செந்தீபன் (வயது - 29) என்பவர் சுடப்பட்டார். கொக்குவில் மேற்கு அம்மன் கோயில் வீதியைச் சேர்ந்த இவரும் சம்பவ இடத்திலேயே உயிரிழந்தார். இவரிடம் கைத்தொலைபேசி ஒன்றும் சிறு தொகைப் பணமும் காணப்பட்டன. ஆனால், அடையாள அட்டை எதுவும் இருக்கவில்லை. முதலில் அந்தக் கைத்தொலைபேசியில் உள்ள இலக்கங்களுடன் தொடர்பை ஏற்படுத்திய போதும் சடலத்தை இனங்காண முடியவில்லை. பின்னர் ஆஸ்பத்திரியில் வைத்து உறவினர்கள் அவரை அடையாளம் காட்டினர்.

பிற்பகல் 2.10 மணியளவில் சம்பவ இடத்திற்கு விரைந்த யாழ்.மாவட்ட மேலதிக நீதிவான் திருமதி ஸ்ரீநிதி நந்தசேகரன் சடலங்களைப் பார்வையிட்டு விசாரணைகளை நடத்தினார். சடலங்களை யாழ்.போதனா வைத்தியசாலைக்குக் கொண்டுசெல்லுமாறு கோப்பாய்ப் பொலீஸாருக்கு உத்தரவிட்டார்.

சடலங்கள் மரண விசாரணை, பிரேத பரிசோதனை என்பவற்றின் பொருட்டு யாழ்.போதனா வைத்தியசாலையின் பிரேத அறையில் வைக்கப்பட்டன. (ஐ-12-13-14-86-15-78)



அமிர்தநாதன் ஸ்ரீகாந்தன்



கொக்குவில் பகுதியில் நேற்று சுட்டுக் கொலை செய்யப்பட்ட இரு இளைஞர்களின் சடலங்களையும் சம்பவ இடத்தில் யாழ். மாவட்ட மேலதிக நீதிவான் திருமதி ஸ்ரீநிதி நந்தசேகரன் விசாரணைகளை மேற்கொள்வதையும் படங்களில் காணலாம்.

(படங்கள்: பிரியன், நேசன்)

# பாகிஸ்தானுக்கும் - இந்தியாவுக்கும் மார்ச்சில் அதிபர் புஷ் சுற்றுப் பயணம்

வாஷிங்ரன்,ஜன.26

அமெரிக்க ஜனாதிபதி ஜோர்ஜ் டபிள்யூ. புஷ் எதிர்வரும் மார்ச் மாதத்தில் இந்தியாவுக்கும் பாகிஸ்தானுக்கும் தனது முதலாவது உத்தியோகபூர்வ விஜயம் ஒன்றை மேற்கொள்ளவிருக்கின்றார்.

அமெரிக்காவுக்கு விஜயம் மேற்கொண்டுள்ள பாகிஸ்தான் பிரதமர் சவுகத் அஸீஸுடன் பேச்சுவார்த்தை நடத்திய பின்னர் புஷ் தமது பாகிஸ்தான் - இந்திய விஜயம் பற்றி அறிவித்தார்.

பாகிஸ்தான் எல்லையில் அமெரிக்க விமானப் படையினர் அண்மையில் அல்கெய்டா நிலைகள் மீது ஏவுகணைத் தாக்குதல் நடத்தியிருந்தது தொடர்பாக ஏற்பட்டுள்ள நெருக்கடிகளுக்கு மத்தியில் பாகிஸ்தான் பிரதமர் அமெரிக்காவுக்கு விஜயம் செய்துள்ளார்.

பாகிஸ்தான் எல்லையில் அமெரிக்க விமானப்படை நடத்திய தாக்குதலில் குறைந்தது. 18 பேர் கொல்லப்பட்டனர். இது பற்றி நிருபர்கள் கேட்டபோது புஷ் எதுவும் கூற மறுத்துவிட்டார்.

சவுகத் அஸீஸ் வாஷிங்ரனுக்கு பிரயாணம் மேற்கொள்வதற்கு முன்னர் பகிரங்கமாக அத்தாக்குதலைக் கண்டித்திருந்தார். ஆனால், இரு தலைவர்களும் பத்திரிகையாளர்கள் முன் ஒற்றுமையான நிலைப்பாட்டை வெளிப்படுத்திக் கோண்டார்கள் என்று செய்தியாளர்கள் தெரிவித்தனர்.

வெள்ளைமாளிகையில் பேச்சுக்களை முடித்துக்கொண்டு வெளியில் வந்து பத்திரிகையாளர்களுக்கு முகம்கொடுத்த அமெரிக்க அதிபர் புஷ், ''உண்மையில் நான் உங்கள் நாட்டுக்குச் செல்வதற்கு மிகவும் விருப்பம் கொண்டுள்ளேன்'' என்று பாகிஸ்தான் பிரதமரிடம் கூறினார். பாகிஸ்தானுடனான உறவு மிக அத்தியாவசியமானது என்று அவர் வலியுறுத்தினார்.

பாகிஸ்தான் பிரதமருக்கும் அதிபருக்கும் எம்முடன் அவர்கள் பல்வேறு பிரச்சினைகளில் ஒத்துழைப்புடன் செயற்படுவதற்காக நன்றி கூற விரும்புகின்றேன்.

அமெரிக்காவையும் பாகிஸ்தானையும் பாதிக்கக்கூடிய பயங்கரவாதத்தைத் தோற்கடிப்பதில் இருநாடுகளும் நெருக்கமாகச் செயற்பட்டு வருகின்றன என்று புஷ் கூறினார்.

பாகிஸ்தானில் அண்மையில் ஏற்பட்ட பூகம்பத்தின்போது அமெரிக்கா வழங்கிய உதவிகளுக்காக பாகிஸ்தான் பிரதமர் நன்றி தெரிவித்துக்கொண்டார். (ப)

## தலிபான் கைதிகள் 10 பேர் ஆப்கான் சிறையிலிருந்து தப்பினர்

காபூல்,ஜன.26

ஆப்கானிஸ்தான் தலைநகர் காபூலில் தலிபான் சிறைக்கைதிகள் அடைக்கப்பட்டிருந்த சிறை ஒன்று உடைக்கப்பட்டு 7 கைதிகள் தப்பிச் சென்றுள்ளனர். இது தொடர்பாக 10 பொலீஸார் கைதுசெய்யப்பட்டுள்ளனர்.

நாட்டின் மிகப் பாதுகாப்புக்குரியதும் போல் - ஈ - சராக்கி என்ற இடத்தில் அமைந்துள்ளதுமான சிறையில் கடந்த ஞாயிற்றுக் கிழமை இடம்பெற்ற இந்தச் சம்பவத்தில் 7 தலிபான் கைதிகள் தப்பிச் சென்றுள்ளனர் என சிறைச்சாலைத் தலைமை அதிகாரி அப்துல் சலாம் தெரிவித்தார். ஆப்கானில் அதியுயர் பாது காப்பு ஏற்பாடுகள் செய்யப்பட்ட சிறையில் தடுத்து வைக்கப்பட்டிருந்த அல்குவைதா தீவிரவாதிகள் எனச் சந்தேகிக்கப்படும் நான்கு கைதிகள் கடந்த ஜூலை மாதத்திலும் தப்பிச் சென்றிருந்தனர்.

# அமெரிக்காவின் ரகசியச் சிறைகள் ஐரோப்பாவில் இயங்குகின்றனவா?

## ஆதாரமில்லை என்கிறது விசாரணை அறிக்கை

ஜெனீவா, ஜன.26

ஐரோப்பாவில் இருக்கக்கூடிய அமெரிக்க ரகசியச் சிறைகள் குறித்த குற்றச்சாட்டுகளை விசாரித்தவர், அப்படியான சிறை ஒன்று இருப்பதற்கான வலுவான ஆதாரங்களைத் தன்னால் கண்டுபிடிக்க முடியவில்லை என்று கூறியுள்ளார்.

சுமார் 3மாத புலனாய்வின் பின்னர் சுவிஸ் நாட்டின் நாடாளுமன்ற உறுப்பினரான டிக் மார்ட்டி அவர்கள், தனது இடைக்கால அறிக்கையைச் சமர்ப்பித்தார்.

ஐரோப்பாவில், அமெரிக்க உளவு நிறுவனமான சி.ஐ.ஏ.ஒரு தடுப்பு நிலையத்தை நடத்துவதற்கான சட்ட ரீதியிலான எந்த ஆதாரமும் தன்னிடம் கிடையாது என்று மார்ட்டி கூறியுள்ளார்.

ஆயினும் அமெரிக்கர்கள், சித்திரவதை செய்வதற்காக நூற்றுக்கும் அதிகமான ஆள்களை சில நாடுகளுக்கு மாற்றியுள்ளார்கள் என்பதில் சந்தேகமே இல்லை என்றும் அவர் மீண்டும் கூறியுள்ளார். (ஐ)

# கனடா நாட்டுத் தேர்தலில் கன்சர்வேடிவ் கட்சி வெற்றி!



ஸ்டிபன் ஹார்பர்

கனடாவில் நடந்து முடிந்த பொதுத்தேர்தலில் கன்சர்வேடிவ் கட்சியின் தலைவர் ஸ்டிபன் ஹார்பருக்கு வெற்றியை வழங்கிய அந்நாட்டு வாக்காளர்கள், 12 வருட கால லிபரல் கட்சி ஆட்சியை முடிவுக்கு கொண்டுவந்து, ஹார்பர் அவர்களை அடுத்த பிரதமராக்கியுள்ளனர்.

ஊழலை ஒழித்து, வரிகளைக் குறைத்து, சிறிய அமைச்சரவையைக் கொண்ட அரசாங் கத்தை உருவாக்குவேன் என்ற வாக்குறுதிகளுடன் பிரசாரத்தில் ஈடுபட்ட ஹார்பர்அவர்கள், ஒரு சிறுபான்மை அரசாங்கத்துக்கு தலைமை வகிப்பார் என்று கூறப்படுகின்றது.

மாற்றத்தை கொண்டு வருவேன் என்று தனது வெற்றி உரையின் போது ஹார்பர் உறுதியளித்தார். தனது போட்டியாளருக்கு வாழ்த்து தெரிவித்த பதவி விலகும் பிரதமர் போல் மார்ட்டின், தான் லிபரல் கட்சியின் தலைமைப் பொறுப்பில் இருந்து விலகப்போவதாகவும் கூறியுள்ளார். பொருளாதாரத் திட்டங்களில் பலமான நல்லெண்ணத்தை பெற்றிருந்த லிபரல் கட்சி, தொடர்ச்சியான ஊழல் குற்றச்சாட்டுக்களால் பாதிக்கப்பட்டிருந்தது. (ஐ)

# ஆபிரிக்க நாடுகளின் தலைமைப் பதவி! கொங்கோ பிரஸ்ஸவில் ஏற்கின்றது

லண்டன்,ஜன.26

சூடான் நாட்டின் மனித உரிமைகள் செயற்பாடுகள் குறித்து விமர்சனங்கள் எழுந்ததையடுத்து ஆபிரிக்க நாடுகளின் ஒன்றியத்தின் தலைமைப் பொறுப்பிற்கு அந்த நாடு தேர்ந்தெடுக்கப்படவில்லை. கொங்கோ பிரஸ்ஸவில் நாடு ஆபிரிக்க ஒன்றியத்தின் அடுத்த தலைமைப் பொறுப்பை ஏற்றுள்ளது.

ஆனால், கொங்கோ பிரஸ்ஸவில்லின் மனித உரிமைகள் செயல்பாடுகள் குறித்தும் விவாதங்கள் இருக்கின்றன. 1979 ஆம் ஆண்டு நடைபெற்ற ஓர் [illegible] டெனிஸ் சகு [illegible] கைப்பற்றினார். ஆனால், அந்நாட்டில் நடைபெற்ற முதலாவது பல கட்சித் தேர்தலில் அவர் தோல்வியுற்றார். பின்னர் நடந்த உள்நாட்டுப் போருக்குப் பின்னர் மீண்டும் ஆட்சியைக் கைப்பற்றினார் டெனிஸ் சகு குவெஸ்ஸோ.

அடுத்த ஆண்டு நடைபெறவுள்ள ஆபிரிக்க ஒன்றியத்தின் மாநாட்டில் கிழக்கு ஆபிரிக்காவை பிரதிநிதித்துவம் செய்யும் விதமாக சூடான் தலைமைப் பொறுப்பினை ஏற்கும் எனத் தான் நம்புவதாக சூடான் நாட்டின் தகவல்துறை அமைச்சர் அல்ஸஹாவி மாலிக் தெரிவித்தார்.

சூடான் தலைநகர் கார்டூமில் நடைபெறும் உயர்நிலை மாநாட்டில் உறுப்பு நாடுகளிடையேயான கருத்து வேறுபாட்டால் ஆபிரிக்க ஒன்றியத்தின் அதிகாரபூர்வ நிகழ்ச்சி நிரலில் முக்கிய விடயங்களான கலாசார மற்றும் கல்வி குறித்த கவனம் குறைந்து போயுள்ளது என்று கூறப்படுகின்றது. (ஐ)

உங்கள் விமானப் பயணத்திற்கு!
Aero Lanka
In Domestic Operation

New way of flying
Head office
No.500,Galle Road,
Wellawatte,
Colombo-06
Tel:2505632-3 Fax:2500626
Jaffna office
No.86,PointPedro Road,
Jaffna. Tel:021-2226242
Fax:021-2225600
Branch
No:14,New Market Building
Chavakachcheri
Tel:021-2227979 Fax: 021-2227979
Trinco Office
No.47,Kandy Road,
Trincomalee.
Tel:026-2221519
Fax:026-2221519
யாழ் ⇆ கொழும்பு

Digitized by Noolaham Foundation
noolaham.org | aavanaham.org

# முதலாவது பிறந்த நாள் வாழ்த்து



கைதடியைப் பிறப்பிடமாகவும் சுவிஸை வசிப்பிடமாகவும் கொண்ட **யோகராஜா - சுதா** தம்பதியரின் செல்வப் புதல்வி **தாரகி** தனது முதலாவது பிறந்தநாளை இன்று (26.01.2006) வியாழக்கிழமை சுவிஸில் உள்ள தனது இல்லத்தில் வெகுவிமரிசையாகக் கொண்டாடுகின்றார்.

இவரை அப்பா, அம்மா, அப்பம்மா, அம்மப்பா, அம்மம்மா, மாமாமார், அத்தைமார், அக்காமார், அத்தான்மார், சித்தாமார், சித்திமார், பெரியப்பாமார், பெரியம்மாமார் மற்றும் உற்றார், உறவினர் அனைவரும் பல்லாண்டு காலம் வாழ வாழ்த்துகின்றனர்.

சி.மாணிக்கம்
மயிலணி வடக்கு,
சுன்னாகம்.

தகவல்:
**யோகராஜா குடும்பம்**
(சுவிஸ்)

**தாரகி**
**26.01.2006**

(57054)

## அரசாங்க அறிவித்தல்
### யாழ்.மாவட்ட செயலகம்

**குறுகிய கால தொழிற்பயிற்சித் திட்டத்திற்கு உபகரணங்களும் பொருள்களும் வழங்குவதற்கான கேள்வி**

*யாழ்.மாவட்டத்தில் குறுகிய கால பயிற்சி நெறியினை நடைமுறைப்படுத்துவதற்காக கீழ்வரும் பொருள்கள் வழங்குவதற்கான கேள்விகள் கோரப்படுகின்றன.*

*இதற்கான பொருள்கள் தொடர்பான விரிவான விவரங்களை மாவட்ட திட்டமிடல் செயலகத்தில் அலுவலக நாள்களில் காலை 9மணி தொடக்கம் பிற்பகல் 4.45 மணிவரை பெற்றுக்கொள்ளலாம்.*

*பூர்த்திசெய்யப்பட்ட படிவத்தை மாவட்டச் செயலர், மாவட்ட செயலகம், யாழ்ப்பாணம் என விலாசமிடப்பட்டு மேலுறையின் இடதுபக்க மேல் மூலையில் குறுகிய கால தொழிற்பயிற்சிக்கான உபகரணங்களும், பொருள்களும் வழங்குவதற்கான கேள்வி விண்ணப்பம் எனக் குறிப்பிட்டு பதிவுத்தபால் அல்லது செயலக நிதிக் கிளையில் உள்ள கேள்விப் பெட்டியில் 13.02.2006ஆம் திகதி பிற்பகல் 2 மணிக்கு முன்னர் கிடைக்கக்கூடியவாறு அனுப்பப்படல்வேண்டும். அன்றைய தினம் பிற்பகல் 3 மணிக்கு கேள்விப் பத்திரப் பெட்டி திறக்கப்படும். அச்சமயம் விண்ணப்பதாரரோ அல்லது அவரது பிரதிநிதி ஒருவரோ சமுகமளிக்கலாம். கேள்வி ஏற்றுக்கொள்ளும் விண்ணப்பதாரி 10 நாள்களுக்குள் பொருள்களை விநியோகம் செய்யவேண்டும்.*

*பின்வரும் பயிற்சி நெறிகளுக்கு உபகரணங்களும் பொருள்களும் வழங்குவதற்குரிய கேள்வி கோரப்படுகின்றது.*

01. மின் இணைப்பு (Electrician)
02. ரேடியோ, தொலைக்காட்சி திருத்துதல் (T.V, Radio Mechanic)
03. உணவு பதனிடல் (Food processing)
04. மேசன் பயிற்சி (Masonary)
05. தச்சு வேலை (Carpentry)
06. ஒட்டுதலும் பொருத்துதலும் (Welding & Fitting)
07. குளிரூட்டி திருத்துதல் (Air Conditional Mechanic)
08. குழாய் பொருத்துதல் (Plumber)
09. காகிதாதிகள், முதலுதவிப் பொருள்கள் (Stationary and First Aid goods)
10. கணனிப் பயிற்சி (Computer Training)
11. மோட்டார் சைக்கிள் திருத்துதல் (Motorbike Repairing)
12. அலுமினியம் பொருத்துதல் (Aluminum Fabrication)

க.கணேஷ்,
அரசாங்க அதிபரும் மாவட்டச் செயலாளரும்,
யாழ்.மாவட்டம்.

(சி/47515)(32-26-19-45)

## மரண அறிவித்தல்
### திருமதி நவரத்தினம் கனகம்மா

குமரகோட்டம், கோண்டாவிலைப் பிறப்பிடமாகவும் வசிப்பிடமாகவும் கொண்ட நவரத்தினம் கனகம்மா நேற்று (25.01.2006) புதன்கிழமை காலமானார்.

அன்னார் காலஞ்சென்ற நவரத்தினம் அவர்களின் பாசமிகு மனைவியும் காலஞ்சென்ற அப்பாப்பிள்ளை-அன்னப்பிள்ளை தம்பதியரின் மகளும் காலஞ்சென்ற அப்பாத்துரை- இராசம்மா தம்பதியரின் மருமகளும் காலஞ்சென்ற ஆச்சிமுத்து, பழனி மற்றும் சபாரத்தினம், நல்லையா ஆகியோரின் சகோதரியும் இரத்தினம்மா, சின்னத்துரை, பரிபூரணம், சரஸ்வதி ஆகியோரின் மைத்துனியும் கோபாலசிங்கம், சின்னத்துரை, தியாகராஜா, மகாலக்சுமி, இராசரத்தினம், விஜயலக்சுமி, காலஞ்சென்ற கனகரத்தினம் ஆகியோரின் சிறியதாயுமாவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று (26.01.2006) வியாழக்கிழமை நண்பகல் 12 மணியளவில் நடைபெற்று பூதவுடல் தகனக்கிரியைக்காக காரைக்கால் இந்து மயானத்திற்கு எடுத்துச் செல்லப்படும்.

குமரகோட்டம்,
கோண்டாவில்.

தகவல்:
**பெறாமக்கள்.**

(57055)(26-45-19)

## பவுஸர் வண்டிகள் கிடைத்தன

நல்லூர், ஜன.26

இலங்கை செஞ்சிலுவைச் சங்கத்தின் கிளிநொச்சி கிளை வடமராட்சி கிழக்குப் பிரிவுக் கிளைக்கு இரண்டு பவுஸர் வாகனங்களை வழங்கியுள்ளது.

ஆழிப்பேரலையால் பாதிக்கப்பட்டு இருபது முகாம்களில் தங்கியுள்ள மக்களின் குடிதண்ணீர் விநியோகத் தேவைக்கென இவை வழங்கப்பட்டுள்ளன.(ஐ-111)

## வாண்மை விருத்திச் செயலமர்வு

அச்சுவேலி,ஜன.26

இலங்கைத் தமிழர் ஆசிரியர் சங்கத்தின் கொழும்பு பணிமனை தென்பகுதியில் உள்ள ஆசிரியர்களின் வாண்மை விருத்தியைக் கருத்தில்கொண்டு வார விடுமுறை நாள்களில் 'வாண்மை விருத்தி வழிகாட்டல் செயலமர்வுகள்' ஏற்பாடு செய்து நடத்தி வருகின்றது.

துறைசார் நிபுணர்கள், பல்கலைக்கழக விரிவுரையாளர்கள், தொழிற்சங்கத் தலைவர்கள் கலந்துகொண்டு விரிவுரைகளை வழங்கி வருகின்றனர்.

வாண்மை விருத்தி தொடர் செயலமர்வுகள் இதுவரை 16 இடங்களில் நடைபெற்று உள்ளன. தொடர்ந்து செயலமர்வுகள் நடைபெற இருப்பதாக இலங்கைத் தமிழர் ஆசிரியர் சங்கத்தின் நிர்வாகச் செயலாளர் சி.சரவணபவானந்தன் தெரிவித்தார்.

(ஐ-11)

## குருதிக் கொடையாளர்....

(09ஆம் பக்கத் தொடர்ச்சி)

இதனால் பாதுகாப்பான இரத்தம் நோயாளிக்கு ஏற்றப்படுகிறது. அத்துடன் சுலபமான முறையில் நோயாளிக்கு இரத்தம் வழங்கப் படுகிறது.

எனவே, இத்தகைய மனிதாபிமானப் பணியை மேற்கொள்ள தன்னார்வக் குருதிக் கொடையாளர்கள் இன்னும் தேவையாக உள்ளனர்.

நிறுவனங்களைச் சார்ந்தோர் கூட்டாக இரத்தம் வழங்க முன்வந்தால் அந்தந்த நிறுவனத்திற்கு நேரில் வந்து எமது நடமாடும் இரத்த வங்கிச் சேவை மூலம் இரத்தம் பெற்றுக்கொள்ளப்படும்.

தொடர்புகொள்ள விரும்புபவர்கள் 222 3063 என்னும் தொலைபேசி இலக்கத்துடன் தொடர்புகொண்டு அழைத்தால் எமது நடமாடும் சேவையினைச் செய்யக் காத்திருக்கின்றோம் - என்றார் அவர். (ஐ-13)

## தவறிவிட்டது

சிவசுப்பிரமணியம் நித்தியரூபன் என்பவருடைய தேசிய அடையாள அட்டையும் விசேட அடையாள அட்டையும் இராஜ வீதியில் 24.01.2006 அன்று தவறவிடப்பட்டுள்ளது. கண்டெடுத்தவர்கள் வேம்படி லேன், கோப்பாய் மத்தி, கோப்பாய் எனும் முகவரியில் ஒப்படைத்துதவவும். T.P.0773565310

(45999)(26-19-45)

## வேலையாள்கள் தேவை

*பண்ணையில் பணிபுரிவதற்கு ஆண் வேலை ஆள்கள் தேவை. உணவு, தங்குமிடம், வேலைக்கு ஏற்ப ஊதியம் வழங்கப்படும்.*

**வீனஸ் பாம்**
திருநெல்வேலிச் சந்தி,
(நல்லூர் பிரதேச செயலகம் முன்பாக).
**T.P.: 0712513721**

(57052)
(32-26-19-45)

## அபிவிருத்தி அதிர்ஷ்டம்
### உத்தியோகபூர்வ முடிவுகள்

| | |
|---|---|
| சீட்டிழுப்பு வாரம் | 749 |
| திகதி | 24-01-2006 |

டிக்கட்டின் நிறம் - நீலம்
செல்லுபடியாகும் தொடர் இல.
**44044397-4059554**

வெற்றி இலக்கங்கள்
**17 25 30 37**

லக்கினம் **மிதுனம்**

ஜக்பொட் பரிசு
ரூபா. 44,08,800/-
வெல்லப்படவில்லை
இந்த வெள்ளிக்கிழமை
ரூபா. 51,53,350/-

| இணையும் இலக்கங்கள் | வெற்றியாளர் தொகை | பரிசுத் தொகை(ரூ.) | மொத்தப் பரிசுத் தொகை(ரூ.) |
|---|---|---|---|
| 1.இல | 3,33,298 | 10/- | 33,32,980/- |
| 2.இலக்கங்கள் | 30,559 | 20/- | 6,11,180/- |
| 1.இல லக்கினம் | 30,375 | 30/- | 9,11,250/- |
| 2.இல லக்கினம் | 2,849 | 100/- | 2,84,900/- |
| 3.இலக்கங்கள் | 812 | 500/- | 4,06,000/- |
| 3.இல லக்கினம் | 75 | 5,000/- | 3,75,000/- |
| 4.இலக்கங்கள் | 04 | 1,00,000/- | 4,00,000/- |
| 4.இலக்கங்கள் | - | 44,08,800/- | - |
| | | மொத்தம் | 63,21,310/- |
| மோட்டார் முச்சக்கர வண்டி | 5 | 2,10,450/- | 10,52,250/- |
| வெல்லப்பட்ட மொத்த பரிசுத் தொகை | | | 73,73,560/- |

மொத்த பரிசுத் தொகை ரூபா. 73,73,560/-
தொடர் இல. 5954225 க்கு ஜனவரி சிவப்பு நிற டிக்கட்டுக்கள் 2006 டிசம்பர் 27 ஆம் திகதி வெள்ளிக்கிழமை செல்லுபடியாகும். வெற்றி பெறும் டிக்கட்டுக்கள் 6 மாதங்கள் செல்லுபடியாகும்

அபிவிருத்தி லொத்தர் சபை
இல. 33 சென்ற் மைக்கேல் வீதி, கொள்ளுப்பிட்டி, கொழும்பு 03.

அபிவிருத்தி அதிர்ஷ்ட சீட்டிழுப்பில் பணப்பரிசு வெற்றி பெறாத டிக்கட்டுக்களில் முச்சக்கர வண்டி வெற்றி பெறும் 5 டிக்கட்டுக்களின் தொடர் இலக்கங்கள்

| | |
|---|---|
| மாத்தளை | 4051159-8-56 |
| பதுளை | 4053280-1-80 |
| திருகோணமலை | 4046423-2-45 |
| கொழும்பு | 4056077-2-58 |
| ஹம்பாந்தோட்டை | 4050179-2-72 |

ஓம் விராட் விஸ்வப் பிரம்மனே நம

## ஓராண்டு நினைவஞ்சலி

தோற்றம்
24 - 04 - 1932



மறைவு
05 - 02 - 2005

அமரர் **பசுபதிப்பிள்ளை பொன்னுத்துரை**

திதி:26-01-2006

ஓராண்டு ஆனாலும் முகம் மறைந்து போகுமா ஐயா!
எப்போது நினைத்தாலும் உன் திருமுகமே கண்முன் வருகுதையா!
இப்போது இந்நாளில் ஆத்மா சாந்தி பெற வேண்டி
முப்போதும் ஆண்டவனை இறைஞ்சி வணங்குகின்றோம் ஐயா!

35/1, குமார வீதி,
நல்லூர், யாழ்ப்பாணம்.

பிரிவால் வருந்தும்:
**குடும்பத்தினர்.**

(45994)(26-45-19)

## மரண அறிவித்தல்கள்

### விநாசித்தம்பி சோமசுந்தரம்

(உரிமையாளர், சிற்றி ஹாட்வெயர் ஸ்ரோர்ஸ் அன்ட் சிற்றி ஸ்ரீல்ஸ் - ஸ்ரான்லி வீதி)



புங்குடுதீவைப் பிறப்பிடமாகவும் இல.119, பிறவுண் வீதியை வதிவிடமாகவும் முன்னாள் கொட்டடிச் சந்தி மரக்காலை உரிமையாளருமாகிய விநாசித்தம்பி சோமசுந்தரம் அவர்கள் நேற்று (25.01.2006) புதன்கிழமை அதிகாலை கொழும்பில் காலமானார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் பற்றிய விவரம் பின்னர் அறியத்தரப்படும்.

பிறவுண் வீதி,யாழ்ப்பாணம்.

தகவல்:
**குடும்பத்தினர்**

(45996) (32-26-19-45)

### சிதம்பரப்பிள்ளை நல்லையா



திக்கத்தைப் பிறப்பிடமாவும் வல்வெட்டி, சீனட்டியை வசிப்பிடமாகவும் கொண்ட சிதம்பரப்பிள்ளை நல்லையா அவர்கள் 24.01.2006 செவ்வாய்க்கிழமை காலமாகிவிட்டார்.

அன்னார் திருமதி நல்லையாவின் அன்புக் கணவரும் பாஸ்கரசாமி (சுவிஸ்), சபாரட்ணம் (லண்டன்), புஸ்பராணி (கௌரி- சுவிஸ்), குலராணி (ஜேர்மனி), பாலசுப்பிரமணியம் (சுவிஸ்), லோகநாதன் (சுவிஸ்), விஜயலட்சுமி (லண்டன்) ஆகியோரின் அன்புத் தந்தையும் சிவக்கொழுந்து, செல்வராணி (லண்டன்), சவுந்தரராசா (சுவிஸ்), சூரியமூர்த்தி (ஜேர்மனி), விஜயலட்சுமி (சுவிஸ்), மஞ்சுளா (சுவிஸ்), பிரபாகரன் (லண்டன்) ஆகியோரின் அன்பு மாமனாரும் ஆவார்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

அன்னாரின் தகனக்கிரியை பற்றிய விவரம் பின்னர் அறியத் தரப்படும்.

. சீனட்டி ,வல்வெட்டி.

தகவல்:
**திருமதி ந.நல்லம்மா.**

(46000) (18-26-19-45)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# ஜெனீவாவில் பேச புலிகள் இணங்கியமை அரசுக்கு பெரிதும் மகிழ்வை ஊட்டுகிறது

## அரசின் ஊடகப்பேச்சாளர் தெரிவிப்பு

கொழும்பு,ஜன.26

''சமாதானப் பேச்சுகளை நடத்துவதற்குத் தடையாகவிருந்த இனப்பிரச்சினைக்கு முற்றுப்புள்ளி வைத்து, சுவிற்ஸர்லாந்தில் பேச்சுகளை நடத்துவதற்கு புலிகள் இணங்கியமையையொட்டி நாம் மகிழ்ச்சியடைகின்றோம். புலிகளின் இந்த நெகிழ்வுத் தன்மையை நாம் வரவேற்கின்றோம். என்ன நடந்தாலும் பேச்சுகளை நடத்தியே தீருவேன் எனத் தீவிர முயற்சியில் இறங்கிய ஜனாதிபதிக்கு வெற்றி கிட்டியுள்ளது.

''எந்த நிபந்தனைகளின் அடிப்படையிலும் இல்லாமல் தற்போது வடக்கு - கிழக்கில் இடம்பெற்றுவருகின்ற படுகொலைகளையும், வன்முறைகளையும் நிறுத்தி யுத்த நிறுத்த ஒப்பந்தத்தை நடைமுறைப் படுத்தும் நோக்கிலேயே பேச்சு நடத்தப்படும்.

''இன்றிலிருந்து (அதாவது நேற்றிலிருந்து) ஜனாதிபதி இது தொடர்பாக சமாதானச் செயலகத்தின் ஆலோசனைகளைப் பெறத் தொடங்கி விட்டார்.

''பேச்சில் பங்குபற்றப் போகும் அரச பிரதிநிதிகள் விரைவில் நியமிக்கப்படுவர். அதேபோல், சுவிற்ஸர்லாந்தின் அரசுடன் பேசி, சுவிற்ஸர்லாந்தின் எந்த நகரத்தில் பேசுவது என்று தீர்மானிக்கப்படும்.

''அதேபோல் பேச்சை ஆரம்பிக்க அரசும், புலிகளும் ஒத்துப்போகக் கூடிய பொதுவான திகதியும் தீர்மானிக்கப்படும்.''

இவ்வாறு கூறினார் சுகாதார அமைச்சரும், ஊடகப் பேச்சாளருமான நிமால் சிறிபால டி சில்வா நேற்று மாலை ஜனாதிபதி செயலகத்தில் இடம் பெற்ற விசேட ஊடகவியலாளர் சந்திப்பிலேயே அவர் இவ்வாறு கூறினார். அவர் தொடர்ந்து கூறுகையில் தெரிவித்ததாவது:-

மஹிந்த ராஜபக்ஷ ஜனாதிபதியாகத் தெரிவு செய்யப்பட்டதைத் தொடர்ந்து சமாதானப் பேச்சுகளை உடனே தொடங்குவதற்கான அனைத்து முயற்சிகளையும் மேற்கொண்டார்.

தெற்கில் உள்ள அனைத்து அரசியல் கட்சிகளுடனும் பேசினார். அனைத்துக் கட்சிகளின் ஆதரவையும் பெறுவதற்கான வாக்குறுதிகளையும் அவர்களிடமிருந்து பெற்றார்.

புலிகளைப் பேச்சு மேசைக்கு வருமாறு ஆறுதடவைக்குமேல் ஜனாதிபதி புலிகளுக்கு வெளிப்படையாக அழைப்பு விடுத்தார்.

பேச்சுகளை இலங்கையில் நடத்த ஜனாதிபதி விருப்பம் கொண் டிருந்தார். அதற்குப் புலிகள் மறுப்புத் தெரிவிக்க ஆசியாவில் நடத்த விருப்பம் கொண்டார். ஆனால், ஒஸ்லோவில்தான் நடத்தவேண்டும் எனப் புலிகள் விடாப்பிடியாக நின்றனர்.

அதன் பின்னர் சுவிற்ஸர்லாந்தில் பேச்சை நடத்த நோர்வேயின் விசேட தூதுவர் எரிக் சொல்ஹெய்ம் ஊடாக ஜனாதிபதி யோசனை தெரிவித்தார். அதனைப் புலிகள் ஏற்றுள்ளனர். இது எமது முயற்சிக்குக் கிடைத்த வெற்றியாகும்.

புலிகளுடன் அப்போது மேற்கொள்ளப்பட்டு வந்த பேச்சுகள் 2003 ஏப்ரல் 21ஆம் திகதி தடைப்பட்டுப் போனது. அன்றிலிருந்து பேச்சைத் தொடங்குவதற்கான முயற்சிகள் மேற்கொள்ளப்பட் போதிலும் அவை தோல்விலேயே முடிந்தது.

ஆனால், எமது முயற்சிக்கு வெற்றி கிட்டியுள்ளது. இந்தச் சந்தர்ப்பத்தைப் பயன்படுத்தி பேச்சில் இரு தரப்புக்கும் வெற்றி கிட்டும் வகையில் அர்ப்பணிப்புடனும், தியாகத்துடனும், திறந்த மனத்துடனும் அரசு செயற்படும்.

எந்த அடிப்படையில் பேசுவது என்ற நிபந்தனைகளை விதிக்காமல் முதலில் இருதரப்புகளும் பேசுவதே எமது நோக்கம். பேச்சு மேசைக்குச் சென்றாலும் அனைத்துப் பிரச்சினைகளையும் பேசி நல்லமுடிவுக்கு வருவோம்.

- இவ்வாறு அவர் கூறினார். (க)

# இராணுவ நிதியில் மோசடி செய்தவர் விளக்கமறியலில்

இராணுவ நிதி 2 கோடி 90 இலட்சம் ரூபாவைப் போலி ஆவணங்கள் மூலம் மோசடி செய்தார் என்ற குற்றச்சாட்டின்பேரில் இராணுவ எழுதுவினைஞர் ஒருவர் கைது செய்யப்பட்டு விளக்கமறியலில் வைக்கப்பட்டுள்ளார்.

இவ்வாறு கைது செய்யப்பட்டவர் எஸ். தஸநாயக்க என தெரிவிக்கப்படுகின்றது. இவர் இராணுவ நிதியை வங்கிகளில் செலுத்தும் பணியைச் செய்துவந்தார் எனவும், கடந்த 2004ம் ஆண்டு செப்டம்பர் மாதம் வங்கிக்குச் செலுத்தப்பட வேண்டிய 2 கோடி 90 இலட்சம் ரூபா நிதியைப் போலி ஆவணங்கள் மூலம் கையாடல் செய்தார் எனவும் குற்றஞ்சாட்டப்பட்டுள்ளது.

இராணுவ நிதித்துறை இயக்குநர் கொழும்பு குற்றத்தடுப்புப் பிரிவுக்கு தெரிவித்ததைத் தொடர்ந்து இவரைக் கைதுசெய்த பொலீஸார் மேல் விசாரணைகளை மேற்கொண்டு வருகின்றனர்.

# ஆலோசகர் அன்ரன் பாலா சனியன்று லண்டன் பயணம்

அமைதி முயற்சி குறித்து விடுதலைப் புலிகளின் தலைவருக்கும், சமாதானத் தூதுவருக்குமிடையிலான பேச்சுகளில் கலந்து கொள்வதற்காக கடந்த திங்களன்று (23ஆம் திகதி) இலங்கை வந்துள்ள விடுதலைப் புலிகளின் ஆலோசகர் அன்ரன் பாலசிங்கம் நாளை மறுநாள் லண்டன் திரும்புகிறார்.

நாளை மறுநாள் (சனியன்று)காலை விசேட ஹெலி மூலம் கிளிநொச்சியிலிருந்து புறப்படும் அவர் மதியம் 2 மணியளவில் லண்டன் புறப்படுவார் எனத் தெரிவிக்கப்படுகிறது. (க)

# கண்டனம்

கொழும்பு, ஜன.26

'சுடர்ஒளி'யின் திருகோணமலைச் செய்தியாளர் சுப்பிரமணியம் சுகிர்தராஜன் கொல்லப்பட்டமையை எல்லைகளற்ற ஊடகவியலாளர் அமைப்பு வன்மையாகக் கண்டித்திருக்கிறது.

இது தொடர்பில் நேற்று அறிக்கை ஒன்றை விடுத்திருக்கும் மேற்படி அமைப்பு, தமிழ் ஊடகவியலாளர்களுக்கெதிராக மேற்கொள்ளப்படும் வன்முறைகள் குறித்து ஆழ்ந்த கவலை கொண்டிருப்பதாகவும் தெரிவித்திருக்கிறது. ஊடகவியலாளர் மீது மேற்கொள்ளப்படும் வன்முறைகளின் குற்றவாளிகள், சட்டத்தின் முன் நிறுத்தப்படாதது, ஊடகத்துறை மீதான வன்முறைகள் அதிகரித்து வருவதற்கு காரணமாக இருப்பதாகச் சுட்டிக் காட்டும் எல்லைகளற்ற ஊடகவியலாளர் அமைப்பு, தமிழ் ஊடகவியலாளர்களின் பாதுகாப்பை உறுதிப்படுத்த இலங்கை அரசு உறுதியான நடவடிக்கைகளை எடுக்க வேண்டுமெனவும் வலியுறுத்தியிருக்கிறது. (க)

# தமிழ் ஊடகவியலாளர்களின் பாதுகாப்பை உறுதிப்படுத்த உரிய நடவடிக்கை எடுங்கள்

## தகவல் அமைச்சருக்கு தமிழ் ஊடகவியலாளர் ஒன்றியம் கடிதம்

கொழும்பு.ஜன. 26

'சுடர் ஒளி' யின் திருகோணமலைச் செய்தியாளர் சுப்பிரமணியம் சுகிர்தராஜன் சுட்டுக்கொல்லப்பட்டுள்ளதை வன்மையாகக் கண்டித்திருக்கும் இலங்கைத் தமிழ் ஊடகவியலாளர் ஒன்றியம், தமிழ் ஊடகவியலாளர்களைப் பாதுகாக்கவும், ஊடகச் சுதந்திரத்தை உறுதிப்படுத்தவும் அரசாங்கம் மேற்கொண்டுள்ள நடவடிக்கைகள் என்ன என்பது பற்றியும் கேள்வியெழுப்பியுள்ளது.

திருகோணமலையில் 'சுடர் ஒளி' செய்தியாளர் சுட்டுக்கொல்லப்பட்டமை தொடர்பில் இலங்கைத் தமிழ் ஊடகவியலாளர் ஒன்றியம், ஊடகத்துறை அமைச்சர் அனுர பிரியதர்ஷன யாப்பாவிற்கு கடிதம் ஒன்றை அனுப்பியுள்ளது. அந்தக் கடிதத்திலேயே மேற்படி கண்டனம் வெளியிடப்பட்டுள்ளது. அதில் மேலும் குறிப்பிடப்பட்டுள்ளதாவது-

கொழும்பிலிருந்து வெளியாகும் 'சுடர் ஒளி' ப் பத்திரிகையின் திருமலை மாவட்ட நிருபர் சுப்பிரமணியம் சுகிர்தராஜன் திருமலையில் வைத்துப் படுகொலை செய்யப்பட்டுள்ள சம்பவத்தை நாம் வன்மையாகக் கண்டிப்பதுடன், இவ்விடயத்தை உடனடி நடவடிக்கைக்காக உங்களுடைய கவனத்திற்குக் கொண்டுவருகின்றோம். தமிழ் ஊடகவியலாளர்களின் பாதுகாப்புக்கும், அவர்கள் சுதந்திரமான முறையில் செயற்படுவதற்கும் உத்தரவாதமொன்றை தமிழ்ப் பத்திரிகை ஆசிரியர்களுடனான விசேட சந்திப்பொன்றின் போது தாங்கள் வழங்கி இரண்டுவார காலப்பகுதியிலேயே இந்த அவலமான சம்பவம் இராணுவக்கட்டுப்பாட்டுக் குட்பட்ட ஒரு பகுதியில் இடம்பெற்றிருக்கின்றது என்பதைத் தங்களுக்குச் சுட்டிக்காட்ட விரும்பு கின்றோம்.

கடந்த சில மாத காலமாக தமிழ் ஊடகவியலாளர்களை இலக்கு வைத்து ஆயுதப் படையினர் தாக்குதல்களையும், கெடுபிடிகளையும் தீவிரப்படுத்தியிருக்கும் ஒரு நிலையில், 'சுடர் ஒளி' ப் பத்திரிகையின் நிருபர் சுட்டுக் கொல்லப்பட்டிருப்பது தமிழ் ஊடகத்துறையினருக்குப் பெரும் அச்சுறுத்தலை ஏற்படுத்தியிருக்கின்றது. ஊடகத்துறை மூலமாக சுகிர்தராஜன் மேற்கொண்டு வரும் பணிகளைத் தடுத்து நிறுத்தும் நோக்கத்துடனேயே அவர் கொலை செய்யப்பட்டிருக்கின்றார் என்பது தெளிவாகத் தெரிகின்றது. தமிழ் ஊடகவியலாளர்கள் சுதந்திரமான முறையில் தமது பணியை மேற்கொள்வதற்கு விடுக்கப்பட்டுள்ள ஒரு மிகப்பெரிய சவாலாகவும், அச்சுறுத்தலாகவுமே நாம் இதனைக் கருதுகின்றோம். இது தொடர்பாக உடனடி நடவடிக்கையை வேண்டிநிற்கின்றோம். இதற்கு முன்னர் தமிழ் ஊடகவியலாளர்கள் பலர் சுட்டுக் கொல்லப்பட்ட போது விசாரணைகள் உரிய முறையில் நடத்தப்படவுமில்லை, குற்றவாளிகள் நீதி மன்றத்தின் முன்பாக நிறுத்தப்படவுமில்லை. குற்றவாளிகள் சுதந்திரமாக நடமாடுகின்றார்கள். இவ்வாறான அரசின் அணுகுமுறை காரணமாகவே ஊடகவியலாளர்கள் தொடர்ந்தும் பலியாகப்படுகின்றார்கள். சுகிர்தராஜனின் படுகொலை விடயத்திலும், இதே போன்ற அணுகுமுறையைக் கையாளாமல் துரிதகதியில் விசாணைகளை நடத்தி குற்றவாளிகளை நீதியின் முன்பாக நிறுத்துவதை ஊடகத்துறை அமைச்சர் என்ற முறையில் தாங்கள் உறுதி செய்ய வேண்டும் எனக் கேட்டுக்கொள்கின்றோம்.

இது தொடர்பான வாக்குறுதிகளுக்கு அப்பால், செயலளவில் உடன் நடவடிக்கைகளை மேற்கொள்ளாத வரையில் தமிழ் ஊடகவியலாளர்கள் அச்சத்துடன் தமது பணிகளை மேற்கொள்ள வேண்டிய நிர்ப்பந்தத்தில் உள்ளார்கள் என்பதையும் சுட்டிக்காட்ட விரும்புகின்றோம். தமிழ் ஊடகவியலாளர்கள் சுதந்திரமாகப் பணியாற்றுவதையும், ஊடகச் சுதந்திரத்தையும் உறுதிப்படுத்தும் வகையில் அமைச்சரென்ற முறையில் எவ்வாறான நடவடிக்கையை தாங்கள் மேற்கொள்ளவுள்ளீர்கள் என்பதையும் அறிந்து கொள்ள விரும்புகின்றோம்.

-இவ்வாறு அந்தக்கடித்தில் மேலும் குறிப்பிடப்பட்டுள்ளது. (க)

# பொலீஸாரும் கொழும்புத் தமிழ்மக்களும்: விளக்கம் தருகிறார் பொலீஸ்மா அதிபர்

கொழும்பு, நவ.25

கொழும்பு மா நகரில் தமிழ் மக்களுடன் பொலீஸார் நடந்து கொள்ளும் விதத்தை ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ஷ முன்னிலையில் நியாயப்படுத்தினார் பொலீஸ் மா அதிபர் சந்திரா பெர்னாண்டோ.

நேற்றுமுன்தினம் ஜனாதிபதி செயலகத்தில் தமிழ்ப் பத்திரிகைகளின் ஆசிரியர்களையும், உரிமையாளர்களையும் ஜனாதிபதி சந்தித்த போதே பொலீஸ் மா அதிபர் பொலீஸாரின் நிலைப்பாட்டை விளக்கினார்.

பொலீஸார் மீது தமிழ் மக்கள் கூறும் குற்றச் சாட்டுகளைப் பத்திரிகை ஆசிரியர்கள் சுட்டிக் காட்டிய போது பொலீஸ் மா அதிபர் அந்தக் குற்றச்சாட்டுகளை மறுத்தார்.

அவர் கூறியதாவது:-

கொழும்பில் பாதுகாப்பு மற்றும் சட்ட ஒழுங்குகளைப் பேணுவதற்காக வடக்கு, தெற்கு, மத்திய பகுதி ஆகியவற்றில் ஒவ்வொரு மக்கள் குழுக்களை நியமித்திருக்கிறோம். இந்த மூன்று குழுக்களிலும் எல்லா இன மக்களும் இடம் பெற்றிருக்கிறார்கள். இந்தக் குழுக்களின் பேரிலேயே குறிப்பிட்ட பகுதிகளில் இரவு வேளைகளில் சுற்றி வளைப்பு நடத்தி தேடுதல் வேட்டையில் ஈடுபடுகிறோம். மற்றப்படி நாங்களாகத் திட்டமிட்டு இவற்றைச் செய்வதில்லை.

இந்தச் சுற்றி வளைப்புத் தேடுதலில் சந்தேகத்துக்குரியவர்கள் பொலீஸ் நிலையத்துக்கு அழைத்துச் செல்லப்படுகிறார்கள். இவர்களில் பலர் விசாரணையின் பின்னர் விடுவிக்கப்படுகிறார்கள். தங்களைச் சரியாக அடையாளம் காட்ட முடியாதவர்களும், குற்றமிழைத்தவர்களும் கைது செய்யப்படுகிறார்கள். பின்னர் நீதிமன்றத்தில் நிறுத்தப்படுகிறார்கள்.

தமிழர்கள் மட்டுமல்லர், விசாரணை செய்யப்பட வேண்டிய எல்லா இனத்தவர்களுமே பொலீஸ் நிலையத்துக்கு அழைத்துச் செல்லப்படுகிறார்கள். அவர்கள் அங்கே கதிரைகளில் அமர வைக்கப்படுகிறார்கள். கௌரவமாகவும், மனிதாபிமானத்துடனும் நடத்தப்படுகிறார்கள். பொலீஸார் இன, மொழி, மத பேதம் பார்ப்பதில்லை. யாராவது ஒன்றிரண்டு பொலீஸார் எப்போதாவது தவறாக நடந்து கொண்டால் அதற்காக ஒட்டு மொத்தமாகப் பொலீஸார் எல்லோர் மீதும் அபாண்டம் சுமத்தக் கூடாது. தவறிழைத்த பொலீஸாரைக் காட்டித் தந்தால் அவரைத் தண்டிப்போம். இப்படி பொலீஸ் மா அதிபர் கூறினார்.

ஊடகங்களில் கடமை செய்து விட்டு இரவு நேரங்களில் வீடு செல்லும் ஊடகவியலாளர்கள் [illegible] குறுக்கிட்டுப் [illegible] சம்பந்தப்பட்ட ஊடக மேலதிகாரியுடன் தொடர்பு கொண்டு பிரச்சினையைத் தீர்ப்பதற்கு வசதியாக இரவு நேரங்களில் மட்டுமன்றி, அவசியமானால் பகலிலும் தனியாகப் பொலீஸ் அதிகாரிகளை நியமிக்குமாறு பொலீஸ் மா அதிபருக்கு ஜனாதிபதி ஆலோசனை கூறினார்.

பத்திரிகையாளர்களுக்கு தகவல் திணைக்களம் வழங்கிய அடையாள அட்டைகளைப் பொலீஸார் ஏற்றுக்கொள்ளவேண்டும். அவற்றை உதாசீனம் செய்யக்கூடாது என்று பொலீஸார் அனைவரையும் அறிவுறுத்துமாறு பொலீஸ்மா அதிபரை ஜனாதிபதி பணித்தார்.

பத்திரிகை நிறுவனங்களின் உரிமையாளர்களின் வேண்டுகோள் கிடைக்கும் பட்சத்தில் வெளியூர் நிருபர்களுக்கும் தகவல் திணைக்கள அடையாள அட்டைகளைத் தாம் வழங்கத் தயாராக இருக்கிறார் என்று மாநாட்டில் கலந்துகொண்ட தகவல் ஊடகத்துறை அமைச்சர் பிரியதர்சன யாப்பா கூறினார்.

'சுடர் ஒளி' திருகோணமலைச் செய்தியாளர் சுப்பிரமணியம் சுகிர்தராஜன் படுகொலை செய்யப்பட்டது தொடர்பாகப் பொலீஸ் விசாரணைகள் நடைபெற்று வருகின்றன என்றும் கொலைபற்றித் தகவல் ஏதாவது [illegible] அதைப் பொலீஸாருக்குத் [illegible] உதவியாக இருக்கும் என்றும் பொலீஸ் மா அதிபர் சொன்னார். தகவல் இரகசியமாக வைக்கப்படும் என்று அவர் உறுதியளித்தார்.

பத்திரிகை நிறுவனங்களுக்கு முடிந்தவரையில் பாதுகாப்பு அளிப்பதற்கு நடவடிக்கை எடுக்குமாறு பொலீஸ் மா அதிபரை ஜனாதிபதி கேட்டுக்கொண்டார்.

# மாணவனைத் தாக்கிய ஆசிரியருக்குச் சிறை

கொழும்பு, ஜன. 25

பாடசாலை மாணவனைத் தாக்கிக் காயப்படுத்தினார் எனக் குற்றஞ்சாட்டப்பட்ட ஆசிரியரொருவருக்கு - இரண்டரை வருட கடூழியச் சிறைத் தண்டணையை அம்பாறை மேல் நீதிமன்றம் வழங்கியுள்ளது. அத்துடன் பாதிக்கப்பட்ட மாணவனுக்கு பத்தாயிரம் ரூபாவை வழங்கவேண்டும் எனவும், நீதிமன்றுக்கு ஆயிரம் ரூபா தண்டம் செலுத்த வேண்டும் எனவும் நீதிமன்றம் உத்தரவிட்டுள்ளது.

அம்பாறை, மளிகைக்காடு - அல் சபீனா முஸ்லிம் பாடசாலையின் ஆசிரியருக்கே இந்தத் தண்டனை வழங்கப்பட்டுள்ளது. 2002 ஆம் ஆண்டில் தரம் 6 இல் கல்விகற்ற சதாம் உசேன் என்ற மாணவனே மேற்படி ஆசிரியரால் பாதிக்கப்பட்டவன் எனத் தெரிவிக்கப்படுகிறது. (க)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# தமிழகத்துக்கு அகதிகளாக நேற்று 45 பேர் சென்றனர்

இராமேஸ்வரம், ஜன.26

இலங்கையிலிருந்து அகதிகளாக மேலும் 45 பேர் நேற்றுக் காலை படகுகள் மூலம் இராமேஸ்வரத்திற்கு வந்து சேர்ந்தனர்.

15 குடும்பங்களைச் சேர்ந்த 45 பேர் அரிச்சல்முனை மற்றும் மண்டபம் கடற்கரைப் பகுதியில் வந்திறங்கினர் என்று இராமேஸ்வரம் பொலீஸார் தெரிவித்திருக்கின்றனர்.

இலங்கையில் மீண்டும் ஒரு போர் ஏற்படலாமென்ற அச்சத்தினால் தினந்தோறும் அகதிகள் தமிழகக்கரையோரப் பகுதிகளுக்கு வந்தவண்ணமுள்ளனர். இது வரை 190 பேர் இவ்வாறு அகதிகளாக வந்து சேர்ந்தனர் என்று தெரிவிக்கப்படுகின்றது.

இவ்வாறு அகதிகளாக வருபவர்களிடம் இராமேஸ்வரம் பொலீஸார் தீவிர விசாரணைகளை நடத்தி வருகின்றனர்.

(க)

# கொழும்பு குண்டு வெடிப்பு தொடர்பாக சந்தேகத்தின் பேரில் 28 பேர் கைது!

கொழும்பு,ஜன.26

கொழும்பிலும் அதன் சுற்றுப்பகுதிகளிலும் நேற்று முன்தினமிரவு இடம்பெற்ற குண்டுவெடிப்புகள் தொடர்பாக கொழும்பின் பல இடங்களிலிருந்தும் 28பேர் கைது செய்யப்பட்டுள்ளனர் என பொலீஸார் தெரிவித்துள்ளனர்.

அதேவேளை, கொழும்பின் பல இடங்களிலும் பாரிய குண்டுவெடிப்புச் சம்பவங்கள் இடம் பெறலாம் என அண்மையில் சில பத்திரிகைகள் செய்தி வெளியிட்டமை தொடர்பாகவும் விசாரணைகள் மேற்கொள்ளப்படுமென்று பொலீஸ்மா அதிபர் சந்திரா பெர்னாண்டோ தெரிவித்துள்ளார்.

(க -15)



நேற்றுமுன்தினம் திருகோணமலையில் இனந்தெரியாத நபர்களால் சுட்டுக்கொல்லப்பட்ட சுடர்ஒளி செய்தியாளர் சு.சுகிர்தராஜனின் பூதவுடல் அவரது இல்லத்தில் அஞ்சலிக்காக வைக்கப்பட்டிருப்பதைப் படத்தில் காணலாம்.

கபடத்தனமான இழுத்தடிப்புகள் இனியும் கூடாது

# அரசு குறிப்பிட்ட காலவரையறையை நிர்ணயித்து யுத்தநிறுத்த உடன்பாட்டை அமுலாக்கவேண்டும்

## யாழ். மாவட்ட பொது அமைப்புகளின் ஒன்றியம் வலியுறுத்து

யாழ்ப்பாணம்,ஜன.26

கபடத்தனமான இழுத்தடிப்புகளை மேற்கொள்ளாது ஒரு குறிப்பிட்ட காலவரையறைக்குள் இலங்கை அரசு யுத்தநிறுத்த உடன்படிக்கையை நிறைவேற்றவேண்டும்.

இவ்வாறு யாழ். மாவட்ட பொது அமைப்புகளின் ஒன்றியம் வலியுறுத்தியுள்ளது.

இது தொடர்பாக ஒன்றியம் விடுத்துள்ள அறிக்கையில் தெரிவிக்கப்பட்டுள்ளதாவது:-

சிறிலங்கா அரசாங்கத்தினால் தமிழ் மக்கள் மீது திணிக்கப்பட்ட இன அழிப்புப் போரினால் பாதிக்கப்பட்ட மக்களது இயல்பு வாழ் நிலையை உருவாக்குவதற்கும் நிரந்தர சமாதானத்தின் மீதான நம்பிக்கையை கட்டியெழுப்புவதற்குமாகவே போர்நிறுத்த உடன்படிக்கையானது சிறிலங்கா அரசாங்கத்தினாலும் தமிழீழ விடுதலைப் புலிகளாலும் கைச்சாத்திடப்பட்டது.

ஆனால், சிறிலங்கா அரசாங்கம் சிங்கள பேரினவாத மேலாதிக்கத்தை இராணுவ வழிமுறையில் நிலைநிறுத்துவதற்காக அப்போர் நிறுத்த உடன்படிக்கையை முழுமையாக நிறைவேற்றுவதை தவிர்த்தே வருகின்றது என்பதை யாவரும் அறிவர்.

தமிழ் மக்கள் மீதான கெடுபிடிகளை அதிகரிப்பது என்பதில் சிறிலங்கா அரசாங்கம் விடாப்பிடியாக உள்ளமை அண்மைய காலத்தில் சிறிலங்கா அரச படைகளினதும் துணை இராணுவ ஒட்டுக்குழுக்களினதும் கொடூரப் படுகொலைகள், பாலியல் வல்லுறவு, காணாமற்போதல் என்பவற்றில் இருந்து தெரியவருகின்றது.

துணை இராணுவக் குழுக்களை வளர்த்தெடுப்பதில் சிறிலங்கா அரசாங்கம் முனைப்புடன் செயற்படுகின்றது. தமிழ் மக்களது அரசியல் அபிலாஷைகளைச் சிதைத்து இன அழிப்புப் போரினை தமிழ் மக்கள் மீது திணிப்பதற்கு இவ்வகையிலான இராணுவ துணைக் குழுக்களையே அரசாங்கம் பலப்படுத்தி வருகிறது. அண்மைய காலத்தில் மேற்கொள்ளப்பட்ட படுகொலைகள் மற்றும் அப்பாவிகள் கைதுசெய்யப்பட்டுக் காணாமற்போதல் முதலிய செயற்பாடுகளில் சிறிலங்கா அரச படைகளுடன் கூட்டுச் சேர்ந்து இராணுவத் துணைக்குழுக்கள் ஈடுபடுகின்றன.

போர்நிறுத்த உடன்படிக்கைக்கு அமைவாக மக்கள் செறிவாக வசிக்கின்ற பகுதிகளிலிருந்து படைக்காவலரண்கள், முகாம்கள் அகற்றப்பட்டிருக்க வேண்டும். ஆனால், போர் நிறுத்த உடன்படிக்கைக்கு முரணாக மக்கள் செறிவாக வாழும் இடங்களில் இராணுவக் காவலரண்களையும், முகாங்களையும் விரிவாக்குவதும் புதிதாக அமைப்பதுவும் இராணுவ வலயங்களை உருவாக்குவதற்கான ஏற்பாடுகளாகும். இவை தமிழ் மக்கள் மீதான இராணுவ நெருக்குவாரங்களை அதிகரிக்கும் நோக்கம் கொண்டவையே.

போர்நிறுத் உடன்படிக்யை முழுமையாக நிறைவேற்றுதலை புறந்தள்ளி சமாதானம் என்னும் வெற்றுக்கோஷத்துடன் தமிழ் மக்கள் மீதான இராணுவ நெருக்குவாரங்களை அதிகரிப்பது மற்றும் சமாதானத்திற்கான நடைமுறைகளை இழுத்தடிப்பது என்ற மாயைகளை உருவாக்கும் அதேநேரத்தில், போருக்கான முன்தயாரிப்புகளிலும் அரசு இறங்கியுள்ளமை தெளிவாகவே தெரிகின்றது.

படையினரது காவலரண்களையும் முகாம்களையும் மக்கள் செறிவாக வாழும் பகுதிகளில் இருந்து அகற்றுவதுடன், துணை இராணுவக் குழுக்களது ஆயுதங்களைக் களைந்து அக்குழுக்களை தமிழர் வாழும் வடக்கு - கிழக்குப் பகுதிகளில் இருந்து அகற்றுவது போர் நிறுத்த உடன்படிக்கையை வலுவூட்டுவதாக அமையும்.

மேற்கூறிய கோரிக்கைகள் போர்நிறுத்த உடன்படிக்கையின் அடிநாதமாக விளங்கும் மக்களது இயல்பு வாழ்க்கைக்குத் திரும்புதல் எனும் மக்களது அபிலாஷையை நிறைவேற்றுவதன் மூலம் நம்பிக்கையைக் கட்டி எழுப்பும் நடவடிக்கையாக அமையும் என்பது தெளிவு.

எனவே, சிறிலங்கா அரசாங்கத்தின் வழமையான கபடத்தனமான இழுத்தடிப்புகளுக்கு இடந்தராது ஒரு குறிப்பிட்ட காலவரையறைக்குள் சிறிலங்கா அரசாங்கம் போர்நிறுத்த உடன்படிக்கையை நிறைவேற்ற வேண்டும் என தமிழீழ விடுதலைப் புலிகள் சிறிலங்கா அரசாங்கத்தையும் சமாதானத்தின் மீது அக்கறை கொண்டுள்ள சர்வதேச தரப்பினரையும் வலியுறுத்த வேண்டும் எனக் கேட்டுக்கொள்கின்றோம்.

சிறிலங்கா அரசாங்கத்தின் கபடத்தனமான இழுத்தடிப்புகள் இனிமேலும் தொடருமாயின் தமிழ் மக்கள் தமது ஜனநாயக அபிலாஷைகளை நிலைநிறுத்தும் வகையில் தமக்குள்ள உன்னதமான சுயநிர்ணய உரிமையின் அடிப்படையில் அனைத்துப் போராட்ட வழிமுறைகளையும் கைக்கொண்டு தமிழர் தாயகப்பகுதிகளில் இருந்து சிறிலங்காப் படையினரை அகற்றுவதுடன் தமது தேசத்தின் இறைமையை மீட்பதற்கு தயாராகவே உள்ளனர் என்பதை தெரிவிக்கிறோம் என்றுள்ளது.

# ஐ.தே.கட்சி எம்.பிக்கள்.....

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

உறுப்பினர் கெஹேலிய ரம்புக்வெல்ல திட்ட அபிவிருத்தி, அமுலாக்கல் அமைச்சராகவும், களுத்துறை மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினர் மஹிந்த சமரசிங்க இடர் முகாமைத்துவ, மனித உரிமைகள் அமைச்சராகவும் ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ஷ முன்னிலையில் சத்தியப்பிரமாணம் செய்து கொண்டனர்.

கேஹேலிய ரம்புக்வெல்ல எம்.பி. காலை பதினொரு மணியளவில் இருந்த சுபநேரத்திலும், மஹிந்த சமரசிங்க எம்.பி. பிற்பகல் மூன்று மணியளவில் இருந்த சுபநேரத்திலும் அமைச்சர்களாகச் சத்தியப்பிரமாணம் செய்து கொண்டனர்.

மேலும், சில ஐ.தே.க. நாடாளுமன்ற உறுப்பினர்கள் நேற்றைய தினம் அமைச்சர்களாகச் சத்தியப்பிரமாணம் செய்யவிருந்தனர். ஆனாலும், அவர்களுக்கு வழங்கப்படவுள்ள அமைச்சுப் பொறுப்புகள் தொடர்பில் ஜே.வி.பியினர் தெரிவித்த கடுமையான ஆட்சேபத்தினையடுத்து, அந்த எம்.பிக்கள் அமைச்சுப் பொறுப்புகளை ஏற்றுக்கொள்வது தற்காலிகமாக ஒத்திவைக்கப்பட்டிருக்கிறது.

நேற்று அமைச்சர்களாகப் பதவியேற்ற இருவரும் நேற்றிரவு ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ஷவின் தலைமையில் நடைபெற்ற அமைச்சரவைக் கூட்டத்திலும் கலந்து கொண் டனர்.

ஐக்கிய தேசியக் கட்சியின் இரண்டு நாடாளுமன்ற உறுப்பினர்களை ஆளுங்கட்சியினர் தமது பக்கம் எடுத்துக் கொண்டமை ஐ.தே.கவின் தலைமைக்குக் கடும் விசனத்தை ஏற்படுத்தியிருந்ததாக நேற்று மாலை அறிய முடிந்தது.

(க)

# ஜே.வி.பி.....

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

கையைக் குறைக்குமாறு ஜனாதிபதியிடம் முன்னதாக ஜே.வி.பி. வேண்டுகோள் விடுத்திருந்ததாகவும் சுட்டிக்காட்டினார்.

நாட்டை நல்லதொரு நிலைக்கு இட்டுச் செல்ல வேண்டுமாயின் உடனடியாக அமைச் சரவை மறுசீரமைப்பை ஜனாதிபதி மேற்கொள்ள வேண்டுமென்றும் விஜித ஹேரத் கேட்டுக்கொண்டார்.

(க)






# சுடர்ஒளி செய்தி...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

யப்படும்.

நேற்றைய தினம் கிழக்கு மாகாணத்தின் செய்தியாளர்கள் மற்றும் உள்ளூர் அரசியல் பிரமுகர்கள் பூதவுடலுக்கு அஞ்சலி செலுத்தினர்.

இதேவேளை, சுகிர்தராஜன் சுட்டுக் கொல்லப்பட்ட சம்பவம் தொடர்பில் திரு கோணமலைப் பொலீஸார் விசாரணைகளை நடத்தி வருகின்றனர். ஆனாலும் விசாரணை களில் முக்கிய தகவல்கள் எதுவும் கிடைக்க வில்லை எனவும் திருகோணமலைப் பொலீஸார் தெரிவித்தனர்.

(க)

# புலிகளின்.....

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

தூதுவருமான எரிக் சொல்ஹெய்மின் வேண்டுகோளை ஏற்றே இந்த உத்தரவை பிரபாகரன் பிறப்பித்துள்ளார்.

மன்னார் பிரதேசத்தில் தமிழீழ விடுதலைப் புலிகளின் கட்டுப்பாட்டுப் பகுதிக்குள் அத்துமீறி நுழைந்தனர் என்ற குற்றச்சாட்டின் பேரில் கடந்தவருட இறுதியில் இந்த மூன்று பொலீஸாரும் தமிழீழ காவல்துறையினரால் கைது செய்யப்பட்டிருந்தனர்.

தமிழீழ நீதிமன்ற உத்தரவுக்கமைய இவர்கள் மூவரும் தற்போது தடுப்புக் காவலில் வைக்கப்பட்டுள்ளனர்.

(ஒ)

# கண்காணிப்புக்குழுவின்...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

அண்மைக்காலமாக வன்செயல்கள் அதிகரித்துள்ளன கிளைமோர் தாக்குதல்களில் படையினர் உயிரிழந்துள்ளனர் துணைப்படைகள் பொதுமக்களையும் விடுதலைப் புலிகளையும் தாக்கிவந்துள்ளன. இதனால் வடக்கு - கிழக்கில் உள்ள பொதுமக்கள் பெரிதும் பாதிக்கப்பட்டுள்ளனர்.

இந்த வன்செயல்களை முடிவுக்குக் கொண்டுவர இருதரப்பினரும் பேச முன் வந்துள்ளனர். இதுவிடயமாகக் கொழும்பில் உள்ள சுவிஸ்சர்லாந்துத் தூதருடன் பேசி அங்கு பேச்சு நடைபெறுவதற்கான ஏற் பாட்டை மேற்கொள்வேன்.

சுவிஸில் நடக்கும் முதல் பேச்சில் யுத்த நிறுத்த உடன்பாட்டின் அமுலாக்கம் குறித்துப் பேசுவோம். இதுபோன்ற கூட்டங்கள் தொடரும் அவை சுவிஸில் அல்லது வேறு நாடுகளில் இடம்பெறும்.

வன்செயல்ளை நிறுத்துமாறு இருதரப்பினரிடமும் கோரியுள்ளோம். வன்செயல் தொடர்பாக மட்டுமன்றி, வேறு சில விடயங்கள் குறித்தும் விடுதலைப் புலிகளின் தலைவர் பிரபாகரனுடனும் ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ஷவுடனும் பேசியுள்ளோம்.

போர்நிறுத்தக் கண்காணிப்புக் குழுவுக்கு ஏற்பட்டுள்ள அபாய நிலை குறித்தும் பரஸ்பரம் இருதரப்புகளுடனும் பேசியுள்ளோம். யுத்த நிறுத்த உடன்படிக்கை அமுல்படுத்தப்பட கண்காணிப்புக் குழு அவசியமானது. அந்தக் குழுவின் பாதுகாப்பை உறுதி செய்யவேண்டும் என்று இருதரப்புகளினதும் தலைமைகளிடம் கேட்டுள்ளோம்.

இருதரப்புகளும் நேரடியாகப் பேசவேண்டியதன் அவசியத்தை ஐரோப்பிய ஒன்றியம் உட்பட சர்வதேச சமூகம் எதிர்பார்கின்றது என்ற செய்தியை இருதலைமைகளுக்கும் தெரிவித்தோம்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இப்பத்திரிகை நியூ உதயன் பப்ளிகேசன் (பிறைவேட்) நிறுவனத்தினரால் யாழ்ப்பாணம் கஸ்தூரியார் வீதி, 361ஆம் இலக்கத்திலுள்ள அவர்களது பணிமனையில் 26.01.2006இல் அச்சிட்டு வெளியிடப்பெற்றது.